விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 மாசி 24 செவ்வாய்க்கிழமை (08.03.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 079

ராம்கோ RAMCO
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## சிறிதரன் எம்.பி மீது கிரனைட் தாக்குதல்

## மயிரிழையில் உயிர்தப்பினார்



(அநுராதபுரம்)

அநுராதபுரம் நொச்சியாகமவில் வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் சென்ற வாகனத்தின் மீது கிரனைட் வீச்சும், துப்பாக்கிப் பிரயோகமும் நடத்தப்பட்டுள்ளது.

இனந்தெரியாதோரால் நடத்தப்பட்ட இத் தாக்குதல் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சியிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது இடம்பெற்ற இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

சிறிதரன் எம்பியின் வாகனத்தை நோக்கி தாக்குதல் நடத்தப்பட்டபோது அவரின் மெய்ப்பாதுகாவலர்கள் பதில் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதையடுத்து தாக்குதல் நடத்தியவர்கள் தப்பியோடியுள்ளனர்.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கருத்துத் தெரிவிக்கையில், அநுராதபுரம் நொச்சியாகமவில் தமது வாகனம் சென்றுகொண் (20ஆம் பக்கம் பார்க்க)

# இறுதிப் போரில் 80ஆயிரம் மக்கள் பலி

# 27ஆயிரம் பிள்ளைகள் அநாதைகளாயினர்

## ஊடகங்களின் ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

**இலங்கையின் ஆறு முக்கிய ஊடக அமைப்புக்கள் மேற்கொண்ட சுயாதீன ஆய்வின்போது, வன்னி இறுதிக்கட்ட யுத்தத்தில் 80 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டதாக ஆதாரபூர்வமான தகவல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.**

**இதற்கு மேலதிகமாக யுத்தத்தின் காரணமாக 27 ஆயிரம் பிள்ளைகள் தமது பெற்றோர் இருவரையும் இழந்துள்ளதாகவும் புள்ளிவிபரங்கள் வெளிவந்துள்ளன.**

விடுதலைப்புலிகளுடனான இறுதி யுத்தம் நிறைவடைந்து இரண்டு வருடங்கள் பூர்த்தியடைந்துள்ள தருணத்தில், வடக்கு மக்களின் வாழ்க்கைத்தரம் மற்றும் அங்கு நிலவும் இயல்பு வாழ்க்கைச் சூழல் என்பன குறித்து இந்த ஆறு ஊடக அமைப்புக்களும் ஆராய்ந்துள்ளன.

இலங்கையின் ஊடக அமைப்புக்களான தென்னாசிய சுதந்திர ஊடகவியலாளர் ஒன்றியம் (சப்மா), இலங்கைத் தமிழர் ஊடகவியலாளர் ஒன்றியம், சிறிலங்கா முஸ்லிம் மீடியா போரம், (20ஆம் பக்கம் பார்க்க)

## 21 ஐ.தே.க. வேட்பாளர்கள் கட்சி மாறியுள்ளனர்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிடுவதற்கு விண்ணப்பித்தவர்களில் இதுவரை 21 பேர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்துள்ளதாக இளைஞர் விவகார திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப் பெரும தெரிவித்துள்ளார்.

மகாவலி நிலையத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய அவர், ஐ.தே.க. தனது உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசார தொனிப்பொருளை அடிக்கடி மாற்றி வருவதா (20ஆம் பக்கம் பார்க்க)

## மீசாலையில் கடத்தப்பட்ட பெண் கோரப் படுகொலை; சடலம் மீட்பு



(சாவகச்சேரி)

மீசாலை கிழக்கில் நேற்று முன்தினம் மாலை வெள்ளை வானில் கடத்தப்பட்ட பெண், நேற்றுக் காலை சாவகச்சேரி பெரியகுளம் என்ற பகுதியில் உள்ள பற்றை ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மீசாலை கிழக்கில், நேற்று முன்தினம் கனடாவிலிருந்து வந்த கணவர் பிரிந்திருந்த தனது மனைவியையும் மகனையும் வவுனியாவிலிருந்து அழைத்து வந்த வெள்ளைவான் கும்பல் ஒன்றின் உதவியுடன் கடத்திச் சென்றார்.

இந்நிலையில் கணவனைக் கைதுசெய்த சாவகச்சேரிப் பொலிஸார், வெள்ளைவானை மீட்டதுடன் அதன் சாரதியையும் கைதுசெய்தனர்.

இதனைத் தொடர்ந்து மேற்கொண்ட விசாரணையின் பிரகாரம் கடத்திச் செல்லப்பட்ட மகனை, தந்தையாரின் உறவினர் வீடொன்றிலிருந்து மீட்டனர்.

எனினும் கடத்தலில் ஈடுபட்டவரின் மனைவி தொடர்பில் தகவல் எதுவும் தெரியாத நிலையில், பொலிஸாரும் இராணுவத்தினரும் பொது (20ஆம் பக்கம் பார்க்க)

## அரசு- கூட்டமைப்பு 22ஆம் திகதி பேச்சு

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையிலான பேச்சுவார்த்தை மார்ச் 22ஆம் திகதி நாடாளுமன்றம் மீண்டும் கூடிய பின்னர் ஆரம்பமாகும் என அரசாங்கத் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்கத் தரப்பு பிரமுகர்கள் உள்ளூராட்சித் தேர்தல்களில் பங்குபற்றுவதாலேயே இப் பேச்சுவார்த்தை ஒத்திவைக்கப்பட்டமைக்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த பெப்ரவரி (20ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தாதியர் பயிற்சி மாணவர்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தவர்களிடமிருந்து மாணவத் தாதியர் பயிற்சிக்கான ஆட்சேர்ப்பிற்கு சுகாதார அமைச்சு விண்ணப்பம் கோரியுள்ளது.

இவ்வாறு மாணவத் தாதியர் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படுவர்கள் கட்டாயம் 10 வருடங்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடமையாற்ற வேண்டும் என்ற நிபந்தனையும் சுகாதார அமைச்சினால் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் தேவை கருதி ஆண் விண்ணப்பதாரிகள் தேர்ந்தெடுக்கப்படுவர் எனவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

இப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்பவர் 2002 முதல் 2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி மூன்று பாடங்களில் (20ஆம் பக்கம் பார்க்க)

## பாகிஸ்தான் இராணுவக்குழு இலங்கைக்கு வருகை

(கொழும்பு)

பாகிஸ்தான் உயர்மட்ட இராணுவ தூதுக்குழுவொன்று ஆறு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ளது.

பாகிஸ்தான் இராணுவ பயிற்சி மற்றும் மதிப்பீட்டுமா அதிபரான லெப்டினன்ட் ஜெனரல் முஸம்மில் ஹுசைன் தலைமையிலான இத் தூதுக்குழு எதிர்வரும் 11ஆம் திகதி வரை இலங்கையில் தங்கவுள்ளது.

இரு தரப்பு தொழில்சார் அனுபவங்களை பகிர்ந்துகொள்ளும் அடிப்படையில் இலங்கை வந்துள்ள இக் (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Study & Work in UK and Canada**

Hurry......for Jan-2011
Intake Get Register Now
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation

என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீஸா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)


## இலங்கையும்–பிரேசிலும் ஒப்பந்தம் கைச்சாத்து

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும், பிரேசிலுக்கும் இடையில் ஒப்பந்தமொன்றும் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றும் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸுக்கும் பிரேஸிலின் வெளிவிவகார அமைச்சர் அந்தோனியோ பெட்ரியோவாவிற்கும் இடையே நேற்று முற்பகல் இந்த ஒப்பந்தமும் புரிந்துணர்வு உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டுள்ளது. பிரேசிலுக்கான இராஜதந்திரிகளின் நுழைவு விண்ணப்ப கோரிக்கை மற்றும் கடவுச்சீட்டு தொடர்பில் இரு நாடுகளுக்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

அத்துடன் இவ்விரு நாடுகளுக்கும் இடையேயான அரசியல் உறவுகளை வலுப்படுத்தல் தொடர்பில் புரிந்துணர்வு உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டுள்ளது. (ந-5)


**வர்த்தகப் பெருமக்களே....**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290)


# ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை ஊழல் விவகாரம்

# கனிமொழியை மத்திய புலனாய்வு விசாரிக்கும்

(டில்லி)

**ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை விவகாரத்தில் தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி மற்றும் கைது செய்யப்பட்ட முன்னாள் தொலைத்தொடர்புத்துறை அமைச்சர் ராசாவின் மனைவி ஆகியோரிடம் விரைவில் மத்திய புலனாய்வுக் கழகம் விசாரணை நடத்தும் என்று தெரியவருகிறது.**

அநேகமாக எதிர்வரும் 15ஆம் திகதி இந்த விசாரணை நடக்கும் என்று மத்திய புலனாய்வுக் கழகத்தின் தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கின்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ் விவகாரம் தொடர்பாக நீரா ராடியாவிடமும் மீண்டும் விசாரணை நடத்தப்படும் என்று மத்திய புலனாய்வுக் கழக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை உரிமம் பெற்ற ஸ்வான் நிறுவனத்தை கட்டுப்பாட்டில் வைத்துள்ள பல்வாவின் டிபிரியாலிட்டி நிறுவனம், கலைஞர் தொலைக்காட்சி நிறுவனத்துக்கு கடனாக 214கோடி ரூபா கொடுத்தது. இது தொடர்பாக தமிழக முதலமைச்சர் கருணாநிதியின் மகள் கனிமொழியிடம் மத்திய புலனாய்வுக் கழகம் விசாரணை நடத்தும் என்று தெரிகிறது.

இந்தப் பணத்தை கலைஞர் தொலைக்காட்சி 31கோடி ரூபாய் வட்டியோடு திரும்பத் தந்துவிட்டது. ஆனால் எதற்காக கலைஞர் தொலைக்காட்சிக்கு எந்த உத்தரவாதமும் இல்லாமல் பல்வாவின் நிறுவனம் 214கோடி ரூபாய் கொடுத்தது என்று மத்திய புலனாய்வுக் கழகம் கேள்வி எழுப்பியுள்ளது.

அதேபோன்று பல்வேறு நிறுவனங்களுக்கு குறைந்த விலையில் ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை ஒதுக்கிக் கொடுத்ததற்காக ராசாவுக்குக் பல்லாயிரம் கோடி ரூபாய் இலஞ்சமாகக் கிடைத்ததாகவும் அதை மொரிஷியஸ், சிங்கப்பூர் உள்பட 10நாடுகளில் தனது மனைவி பரமேஸ்வரியின் பெயரிலான கணக்குகளில் முடக்கியுள்ளதாகவும் மத்திய புலனாய்வுக் கழகம் கருதுகிறது. இது குறித்து அவரிடமும் விசாரணை நடக்கலாம் என்று தெரிகிறது.

அத்துடன் யூனிடெக் நிறுவனம் 2007 ஆம் ஆண்டு ஸ்பெக்ட்ரம் உரிமம் பெற விண்ணப்பித்த போது அந் நிறுவனத்துக்கு டாடா குழுமத்தின் டாடா ரியாலிட்டி அண்ட் இன்பிராஸ்டிரக்சர் நிறுவனம் 1600கோடி ரூபாய் கடன் கொடுத்து உதவியது. எதற்காக



போட்டி தொலைபேசி சேவை நிறுவனத்துக்கு டாடா நிறுவனம் கடனுதவி வழங்கியது என்பது கேள்விக்குறியாக உள்ள நிலையில் இவ் விடயம் குறித்து பேரம் நடத்திய நீரா ராடியாவை மத்திய புலனாய்வுக் கழகம் மீண்டும் விசாரிக்க திட்டமிட்டுள்ளது. (ந-5)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பெரியபுலம் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை புதன்கிழமை பி.ப.1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் ஆ.விவேகானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி பற்குணராஜா யோகேஸ்வரி, நல்லூர் கோட்டக்கல்வி பணிப்பாளர் சி.மாணிக்கராசா, கௌரவ விருந்தினர்களாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நல்லூர் பிரதேச அமைப்பாளர் அம்பலம் இரவீந்திரதாசன் ஆகியோர் கலந்து கொள்வர். (ந)


# தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சு

# அரசாங்கத்திற்கு பலனளிக்கப் போவதில்லை

## ஜனாதிபதி ஆலோசகர் கோமின் தயாசிறி கருத்து

(கொழும்பு)

**கூட்டாட்சித் தீர்வினை அடைவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடும் முயற்சி எடுப்பதாகவும் தற்போது அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குமிடையில் இடம்பெற்றுவரும் பேச்சுவார்த்தைகள் அரசாங்கத்திற்கு பயனளிக்கப் போவதில்லை எனவும் ஜனாதிபதியின் ஆலோசகர் கோமின் தயாசிறி தெரிவித்துள்ளார்.**



திவயின நாளிதழுக்கு அண்மையில் வழங்கிய நேர்காணல் ஒன்றிலேயே மேற்கண்டவாறு கருத்துரைத்த தயாசிறி, தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு மீண்டும் பிரிவினைக்கான பாதையை அமைக்கமுனைவதாக கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரபாகரனுடன் நெருக்கமாக இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று கையறு நிலைக்கு வந்துள்ளது.தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதை விடுத்து பொலிஸ் அதிகாரத்தை அது கோரி வருகின்றது.

ஏனைய மாகாணங்களை விட ஒரு மாகாணத்திற்கென சிறப்பு அதிகாரங்களை வழங்க முடியாது. காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைக் கோருவதானது பிரிவினைக்கான ஆயுதப்போராட்டத்தைத் தொடங்கும் நோக்கம் கொண்டது.

சிங்கள அரசியல்வாதிகளிலிருந்து தமிழ் அரசியல்வாதிகள் வேறுபட்டவர்கள்அல்ல. அவர்களும்தமக்குரிய அதிகாரத்தை ஏற்படுத்திக்கொள்வதிலேயேமுனைப்புக்கொண்டுள்ளனர். மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு விரும்பவில்லை.

எனவே வடக்கு கிழக்கில் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் அரசியல் கட்சிகள் தமது இருப்பினை உறுதிப்படுத்திக் கொள்ளவே விரும்புகின்றன.

தமிழ் மக்கள் முகம் கொடுக்கும்பெரும்பாலான பிரச்சினைகள் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களாலும் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளே ஆகும்.ஆனால் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்.

போர் முடிபடைந்து இரண்டு ஆண்டுகள் ஆகியுள்ள போதும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் அரசாங்கம் தோல்வியுற்றுள்ளது.தற்போது அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குமிடையில் இடம்பெற்றுவரும் பேச்சுவார்த்தைகள் அரசாங்கத்திற்கு பயனளிக்கப்போவதில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-5)


**விற்பனைக்கு**

TATA 10 wheel Lorry
விற்பனைக்கு உண்டு.
தொடர்புகட்கு:-
151, K.K.S. Road
0773366482
0214925854
(C-2586)

**அறை வாடகைக்கு**

சகல வசதிகளுடனும் 2 அறைகள் குறைந்த கட்டணத்தில் வாடகைக்கு உண்டு. A/L படிக்கும் அல்லது வேலை பார்க்கும் பெண் பிள்ளைகள் தாயாருடன் நேரில் வரவும்.
தொடர்புக்கு:
4 1/4, செம்மணி றோட்,
நல்லூர். (3961)

**PRINCESS OF WALES NURSING HOME**

132,Kokulam Kachcheri Nallur Road,Jaffna, Srilanka.
Phone- +94 (21)2226179, +94 (21)2226180
Email: princesshosp@gmail.com

**Doctors தேவை**
(காலை 6.30 – மதியம் 12.00வரை)

**வாடகை வீடு தேவை**
நாவலர் வீதி, கச்சேரி நல்லூர் வீதி, அரியாலை, சுண்டுக்குளி ஆகிய பிரதேசங்களை அண்டிய பகுதியில் வசதியான வீடு வாடகைக்கு தேவை.

சாரதிகளுக்கு மருத்துவ அனுமதிப் பத்திரம் தகுதி வாய்ந்த மருத்துவர்களால் வழங்கப்படும்.

**மதிபா மெடிக்கல் சென்ரர்**
**முடமாவடி– நல்லூர்**
சகல விதமான மருத்துவ பரிசோதனைகள்.
டாக்டர் வீ.சண்முகராஜா (ராஜா) அவர்கள் திங்கள்,வெள்ளி மாலை 4மணி தொடக்கம் 6மணிவரை.
விசேட வைத்தியசேவையைபெற்றுக் கொள்ளலாம்.
முன்பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும்.
இல .126, கோவில் வீதி,
முடமாவடி, நல்லூர்.


## சபிண்டிகரண பிரார்த்தனை

எமது ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சர்வேஸ்வரக் குருக்கள் சண்முகநாதக்குருக்கள் அவர்களின் தாயார்

**அமரர் ச.மனோன்மணி அம்மா**

25.02.2011-ந்திகதி சிவபதமடைந்ததையிட்டு இன்று அன்னாரின் சபிண்டிகரண பிரார்த்தனை நடைபெறுகிறது. இந்நாளில் எல்லாம்வல்ல ஸ்ரீ சர்வமங்கள இராஜ இராஜேஸ்வரி அம்பாளின் அருளினால் அன்னாரின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

மயிலணி, சுன்னாகம். — ஸ்ரீசர்வமங்கள இராஜ இராஜேஸ்வரி அம்மன் ஆலயம் — அறங்காவலர், நிர்வாகசபையினர், வழிபடுவோர். (3962)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் அணியை அடக்குமா நியூசிலாந்து

## பல்லேகலயில் இன்று பலப்பரீட்சை



(கண்டி)

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் பல்லேகலயில் இன்று நடைபெறும் 24 ஆவது லீக் போட்டியில் நியூசிலாந்து - பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன. கண்டி, பல்லேகல முத்தையா முரளிதரன் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறும் முதலாவது போட்டி இதுவாகும்.

பத்தாவது உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நடை பெற்று வருகிறது.

இதில் இன்று பல்லேகல முத்தையா முரளிதரன் கிரிக்கெட் அரங்கில் நடைபெறும் 24 ஆவது லீக் போட்டியில் ஏ பிரிவைச்சேர்ந்த நியூசிலாந்து - பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன.

பாகிஸ்தான் அணிதான் மோதிய 3 ஆட்டங்களிலும் வெற்றிபெற்றது. இதில் முதல் ஆட்டத்தில் கென்ய அணியை 205 ஓட்டங்களினாலும் 2 ஆவது ஆட்டத்தில் இலங்கை அணியை 11 ஓட்டங்களினாலும் 3 ஆவது ஆட்டத்தில் கனடா அணியை 46 ஓட்டங்களினாலும் வென்றது.

பாகிஸ்தான் அணி தொடர்ந்து 4 ஆவது வெற்றியைப் பெறும் ஆர்வத்தில் உள்ளது. துடுப்பாட்டத்தில் மிஸ்பா உல்ஹக், கம்ரன் அக்மல், யூனிஸ்கான், உமர் அக்மல் ஆகியோர் சிறப்பான நிலையிலுள்ளனர்.

பந்துவீச்சில் அணித்தலைவர் அப்ரிடி முதுகெலும்பாகவுள்ளார். அவர் இதுவரை 3 போட்டிகளில் 14 விக்கெட்டுக்களை வீழ்த்தி முதலிடத்தில் உள்ளார்.

அத்துடன் உமர் குல், சொகைப் அக்தர், அப்துல் ரஷாக் போன்ற சிறந்த வேகப்பந்து வீச்சாளர்கள் உள்ளமை பாகிஸ்தான் அணிக்கு பலம் நியூசிலாந்து அணி முதல் ஆட்டத்தில் கென்ய அணியை 10 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வென்றது.

இரண்டாவது போட்டியில் அவுஸ்திரேலிய அணியிடம் 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் தோல்வி கண்டது. மூன்றாவது ஆட்டத்தில்



சிம்பாவே அணியை 10விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. நியூசிலாந்து அணி பலவீனமான அணிகளுக்கு எதிரான ஆட்டத்தில் மட்டுமே சிறப்பாக ஆடுகின்றது.

அவுஸ்திரேலிய அணியிடம் மோசமான தோல்வியடைந்த நியூசிலாந்து அணி இன்று பாகிஸ்தான் அணிக்கு எதிராக சிறப்பாக ஆட வேண்டிய நிலையிலுள்ளது.

நியூசிலாந்து அணியின் துடுப்பாட்டத்தில் குப்தில், மக்குலம், ரெய்லர், ரைடர் ஆகியோரும் பந்து வீச்சில்பென்னற், சௌத்தி, அணித்தலைவர் டானியல் விக்டோரி ஆகியோர் நல்ல நிலையிலுள்ளனர்.

பாகிஸ்தான் அணிக்கு எல்லா வகையிலும் நியூசிலாந்து சவாலாக அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இன்றைய போட்டி பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகும்.

## அப்ரிடியின் சுமையை குறைக்க வேண்டும்

### மிஸ்பா ஆலோசனை

போட்டியின்போது அணித்தலைவர் அப்ரிடியின் சுமையைக் குறைக்க வேண்டும் என துணைத்தலைவர் மிஸ்பா, சக பாகிஸ்தான் வீரர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பத்தாவது உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் கென்யா, இலங்கை, கனடா அணிகளை அடுத்தடுத்து வீழ்த்தி ஹட்ரிக் வெற்றிகண்ட பாகிஸ்தான் அணி, இன்று பல்லேகலேவில் நடக்கும் போட்டியில் நியூசிலாந்தை எதிர்கொள்கிறது.

கடந்த மூன்று போட்டிகளில் சுழலில் அசத்திய பாகிஸ்தான் அணித்தலைவர் அப்ரிடி அணியின் வெற்றிக்கு முக்கிய பங்கு வகித்தார்.

பாகிஸ்தான் துணைத்தலைவர் மிஸ்பா கூறியதாவது,

கடந்த மூன்று போட்டிகளில் பாகிஸ்தான் அணியின் வெற்றிக்கு முக்கிய காரணமாக இருந்தவர் அணித்தலைவர் அப்ரிடி. இது மகிழ்ச்சியான விடயம். இருப்பினும் அணியில் உள்ள மற்ற வீரர்களும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தும் பட்சத்தில் அப்ரிடியின் நெருக்கடி குறையும்.

பொதுவாக அப்ரிடியின் பந்து வீச்சை எதிர்கொள்வது சவாலான விடயம். ஒவ்வொரு பந்தையும் ஒவ்வொரு விதமாக வீசும் திறமை படைத்த இவர் எதிரணி துடுப்பாட்ட வீரர்களை எளிதில் ஓட்டங்கள் சேர்க்க விடுவதில்லை. எனவே இம்முறை உலகக்கிண்ண தொடரில் அதிக விக்கெட் வீழ்த்தியவர்கள் பட்டியலில் முதலிடம் பிடித்து சாதிக்க வாய்ப்பு உள்ளது.

நியூசிலாந்துக்கு எதிரான இன்றைய போட்டி சவால் நிறைந்ததாக இருக்கும்முதல் வரிசை துடுப்பாட்ட வீரர்கள் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தும்பட்சத்தில்வலுவான இலக்கை நிர்ணயிக்கலாம். சமீபத்தில் நியூசிலாந்துக்கு எதிராக ஒரு நாள் தொடரில் விளையாடி இருப்பதால் அவர்களின் பலம், பலவீனம் குறித்து நன்கு அறிந்துள்ளோம். பவர்பிளே ஓவரில் திட்டமிட்டு செயல்படும் பட்சத்தில் நியூசிலாந்து அணியை சுலபமாக வீழ்த்தலாம் என்றார்.

## ஆஸி - இலங்கை அணிகள் மோதல் சூதாட்டத்தில் ஈடுபட்ட நால்வர் கைது

(ராய்பூர்)

இலங்கை அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான உலகக் கிண்ணப் போட்டியின் போது சட்டவிரோதமாக சுமார் 100 மில்லியன் இந்திய ரூபாய் மதிப்பில் சூதாட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்ட நால்வர் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறிப்பிட்ட நபர்கள் ராய்பூர் பொலிஸார் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் மூலம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் பல வருடகாலமாக சட்டவிரோத சூதாட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

இதேவேளை கடந்த மூன்றாம் திகதி பாகிஸ்தான் - கனடா அணிகளுக்கிடையிலான போட்டியின் போது இரண்டு சூதாட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கிரிக்கெட் ரசிகர்களுக்கு ஓர் நற்செய்தி!
MCS இன் ஒரு மில்லியன் ரூபா பரிசை வெற்றிகொள்ள உங்களுக்கு அரிய சந்தர்ப்பம்
தினமும் 5 பேருக்கு
50ஆயிரம் ரூபா வீதம் 100 பேருக்கு
ஒரு மில்லியன் வெற்றிகொள்ளும் வாய்ப்பு
வலம்புரியில் கேட்கப்படும்
உலகக்கிண்ண கேள்விகளுக்கு
சரியான பதிலை அனுப்பி உங்கள் உயர்கல்வி வாய்ப்பை பெற்றுக்கொள்ளுங்கள்
கூப்பனை வெல்பவர் அல்லது அவரால் வழங்கப்படும் ஒருவர் பின்வரும் கற்கை நெறிகளுக்கு இப் பரிசுக் கூப்பனை பயன்படுத்த முடியும்
1. கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப பட்டக் கற்கை நெறி
2. சீமா (லண்டன்) CIMA_UK
3. மைக்கிரோசொப்ற் நிறுவன கணினிப் பொறியியலாளர் கற்கை நெறி
4. அடோப் நிறுவனத்தின் மல்ரிமீடியா கற்கை நெறி

காலிறுதிச் சுற்றுக்கு தெரிவாகும் அணிகள்?
Cricket
சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 10.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர் ஒருவருக்கு ஒலிம்பியா ஸ்போட்ஸ் வழங்கும் பெறுமதியான பரிசு காத்திருக்கிறது.
1. ......................
2. ......................
3. ......................
4. ......................
5. ......................
6. ......................
7. ......................
8. ......................
பெயர்: ......................
முகவரி: ......................
தொ.பே: ......................
தே.அ.அ.இல: ......................
அனுப்ப வேண்டிய முகவரி
"உலகக் கிண்ணம்"
வலம்புரி
இல.3,2 -ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.
ஒலிம்பியா ஸ்போட்ஸ்
இல06,ஜும்மா பள்ளிவாசல் லேன்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 222 3490

இன்றைய கேள்வி?
உலகக்கிண்ண வரலாற்றில் 200 ற்கும் அதிகமான பவுண்டரிளை விளாசிய வீரர் யார்?
......................
சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 10.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர்களுக்கு M.C.S வழங்கும் பரிசுக் கூப்பன்.
பெயர்:- ......................
முகவரி:- ......................
தொ.பே:- ......................
தே.அ.அ.இல:- ......................
அனுப்ப வேண்டிய முகவரி
'உலகக் கிண்ணம்'
வலம்புரி
இல.3,2 -ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.

உலகக்கிண்ண கிரிக்கெட்-2011
சம்பியனாகும் நாடு?......................
தொடர் நாயகன் விருது யாருக்கு?......................
சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 20.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.
பெயர்......................
முகவரி......................
தொலைபேசி......................
தே.அ.அ.இல......................
'உலகக்கிண்ணம்'
வலம்புரி
இல.3, 2-ம் ஒழுங்கை
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
இன்னும் பல பரிசுகள்
Midea Electro Mart
No:1-1, 1-H, STANLEY ROAD, JAFFNA.
ESPN
இ.ச.பே. நாகரத்தினம் சக நிறுவனம்
52,54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
JAFFNA ELECTRICAL
94(6), Stanley Road, Jaffna.
Tel: 021 222 2353
Fax: 021 222 4302
E-mail:matheesan16@yahoo.com
SINGER-Manipay
Alady Junction, Manipay.
T.P.:021 225 5343
077 6139592
PCS PC SOLUTIONS TECHNOLOGIES (PVT) LTD
305,Kasthuriyar Road,Jaffna.
T.P:021 2221101,021 2229644
email:- pcsjaffna@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யா/ வதிரி வடக்கு மெ.மி.த.க. பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாணவிகளின் ஓட்டப் போட்டி நிகழ்வையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கரவெட்டி கோட்டக்கல்வி அதிகாரி, பாடசாலை அதிபர் ப. செல்வவிநாயகம் ஆகியோர் வெற்றியீட்டிய மாணவர்களுடன் நிற்பதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்:-மருதங்கேணி செய்தியாளர்)*

## சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்திய நபருக்கு அபராதம் விதிப்பு

(சாவகச்சேரி)

சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் வாகன அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் அம்பன் குடத்தனையைச் சேர்ந்த சாரதி ஒருவர் நேற்று சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி சாரதி நேற்று சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகம் கணேசராசா முன்னிலையில் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதிபதி சாரதி குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளி யாக கண்டு 9ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் 3 மாத கால சாதாரணச் சிறைத்தண்டனையும் வழங்கி தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-3-29)

## வடிசாராயம் வைத்திருந்த நபருக்கு 30 ஆயிரம் ரூபா அபராதம்

சட்டவிரோதமான முறையில் 375 லீற்றர் வடிசாராயம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் சந்தேக நபர் ஒருவர் கொடிகாமப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொடிகாமப் பொலிஸாரால் சந்தேக நபர் நேற்று சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகம் கணேசராசா முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதிபதி சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியாகக்கண்டு 30 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் 5 மாத கால சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-3-29)

## கர்ப்பிணிப் பெண் கொலையான வழக்கு விசாரணை மேல் நீதிமன்றத்துக்கு மாற்றம்

(சாவகச்சேரி)

நாவற்குழி தெற்கு பகுதியில் கடந்த 2008 ஆம் ஆண்டு கர்ப்பிணிப் பெண்ணொருவரை கழுத்து நெரித்து கொலை செய்தார் என்ற சந்தேகத்தின் பெயரில் கடந்த 2008 ஆம் ஆண்டு 11 ஆம் மாதம் 29 ஆம் திகதி கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைத்திருக்கப்பட்ட நபரின் விசாரணை நேற்று சாவகச்சேரி நீதிமன்ற நீதவான் நீதிபதி மாணிக்க வாசகம் கணேசராசா முன்னிலையில் நடைபெற்றது.

வழக்கை விசாரித்த நீதிபதி விசாரணையை மேற்கொண்டு யாழ். மேல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்தி நடைமுறைப் படுத்துமாறு சாவகச்சேரி நீதிமன்ற பதிவாளருக்கு பணித்தார். (ஸ்ரீ-3-29)

## மக்கள் மீள்குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் அடிப்படை வசதிகள்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை, மகேந்திரபுரம், எழிலூர் உட்பட மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் யாழ்.மாநகர சபையினரால் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

குறிப்பாக நீர்வழங்கல் மற்றும் சிரமதானம் போன்ற பணிகள் மாநகர சபையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

யாழ்.மாநகர சபை பிரதி முதல்வர் து.இளங்கோவின் நேரடிக் கண்காணிப்பில் பற்றைகள் துப்புரவு செய்யப்பட்டும் மற்றும் மண் பிட்டிகள் சீராக்கப்பட்டும் வருகின்றன.

பொதுமக்களும் தமது நிலங்களை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். (ஸ்ரீ-3-51)

## சுகாதாரமற்ற உணவகங்களுக்கு இவ்வருடம் அனுமதி வழங்கப்படாது

### நல்லூர் பிரதேச சபைச் செயலர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சுகாதாரம் அற்ற முறையில் உண வகங்கள் நடத்துபவர்களுக்கு இவ் வருடத்திற்கான அனுமதி வழங்கப்பட மாட்டாது என நல்லூர் பிரதேச சபை செயலர் எம்.சாந்தசீலன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் இயங்கி வருகின்ற சுகாதார மற்ற உணவகங்கள் சோதனைக்குட் படுத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறு சுகாதாரமற்ற முறையில் இயங்கி வரும் உணவகங்கள் இனம் காணப்பட்டால் அவற்றிற்கான இவ் வருட அனுமதி வழங்கப்படமாட்டாது என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-6)

## வடமாகாண ஸ்கிறபிள் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட ஸ்கிறபிள் சங்கத்தினால் ஆங்கில அறிவினை மேம்படுத்தலை மட்டும் நோக்காகக் கொண்டு சேவை மனப்பாங்குடன் நடத்தப்பட்டு வரும் இரண்டாவது வடமாகாண ஸ்கிறபிள் சுற்றுப்போட்டி எதிர்வரும் ஏப்ரல் மாதம் மட்டுப்படுத்தப்பட்ட போட்டியாகவும் மற்றும் திறந்த போட்டியாகவும் நடைபெறவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படவுள்ளதுடன் பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் விண்ணப்பப் படிவங்களை இல.568, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள யாழகம் நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம் என சுற்றுப் போட்டிக்கான செயலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-9)

## வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பு மருந்தேற்றல்

(பருத்தித்துறை)

பருத்தித்துறைப் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசியேற்றும் நடவடிக்கைகள் சுகாதார உத்தியோகத்தர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது மருதங்கேணி பகுதியில் நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகிறது. தொடர்ந்து பருத்தித்துறை, வல்வெட்டித்துறை பகுதிகளில் இத்தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

அவ்வப்பகுதிகளில் சுகாதாரப் பகுதியினர் ஒலிபெருக்கிமூலம் தடுப்பூசி ஏற்றப்படுவது சம்பந்தமாகவும் ஏற்றப்படும் இடங்களும் அறிவிக்கப்படுமெனவும் நாய்களை வளர்ப்போர் அவ்விடங்களுக்கு கொண்டு சென்று தவறாது தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளமாறு பருத்தித்துறை சுகாதார திணைக்கள சிரேஷ்ட சுகாதார பரிசோதகர் எஸ்.சிவபாலன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-3-10)

## இலங்கை வங்கி நெல்லியடி கிளைக்கு நிரந்தரக் கட்டடம்

(பருத்தித்துறை)

இலங்கை வங்கி நெல்லியடிக்கிளைக்கு இம்மாத இறுதியில் நிரந்தரக் கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாக வங்கி வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

இவ்வங்கிக்கான கட்டடத்தை அமைப்பதற்கான ஏற்பாடுகளை வங்கித் தலைமையகம் மேற்கொண்டு வருகின்றது.

இவ்வங்கிக்கிளை தற்போது தற்காலிக கட்டடம் ஒன்றிலேயே இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-10)

## பண்ணிசை

(அல்வாய்)

சந்நிதியான் ஆச்சிரமத்தில் எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு பண்ணிசை இடம்பெறவுள்ளது.

இதில் நல்லை ஆதீன ஓதுவார் சி.தில்லைமணி பண்ணிசையை நிகழ்த்தவுள்ளார். (ஸ்ரீ-3-19)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(அல்வாய்)

வடமராட்சி வலயத்திலுள்ள பாடசாலைகளில் உளவளத் துணை செயலமர்வு கடந்த 10 நாட்கள் நடைபெற்றது.

இப்பயிற்சியில் கலந்த கொண்ட ஆசிரியர்களுக்கான சான்றிதழ்கள் நாளை புதன்கிழமை மாலை 2 மணிக்கு யா/வேலாயுதம் மகா வித்தியாலய மண்டபத்தில் வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசாவினால் வழங்கப்படவுள்ளது. (ஸ்ரீ-3-19)

## பரிசளிப்பு வைபவம்

(பருத்தித்துறை)

கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்புவிழா எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி அதிபர் வே. சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா மற்றும் பாரியார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினராக பழைய மாணவரும் பூநகரி பிரதேச செயலக உதவித்திட்டப் பணிப்பாளருமான வ.சொர்க்கநாதன் கலந்துகொள்ளவுள்ளார்.

நிறுவுனர் தின உரையை கல்லூரியின் பழைய மாணவரும் யாழ்.மாவட்ட சமுர்த்தி அதிகாரசபை இணைப்பாளருமான கா.ரகுநாதன் நிகழ்த்துவார். (ஸ்ரீ-3-10)

### யாழ்.செய்திகள்

## இசைக்கருவிகள் அன்பளிப்பு

(அல்வாய்)

அல்வாய் சிறீலங்கா வித்தியாலயத்திற்கு வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சினால் சுமார் ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான இசைக்கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதில் ஆர்மோனியம், தபேலா, உடுக்கு, தம்பட்டம், மேளம், வீணை, மிருதங்கம், றபான், புல்லாங்குழல், தாளம் உள்ளிட்ட இசைக்கருவிகள் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சின் ஆணையாளர் திருமதி என். ஸ்ரீதேவி தெரிவித்துள்ளார்.

இதனை அண்மையில் நடைபெற்ற இல்ல மெய்வல்லுநர் நிகழ்வின் போது பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா பாடசாலை அதிப ரிடம் கையளித்தார். (ஸ்ரீ-3-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் இன்று

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வி பண்பாட்டுத்துறை விளையாட்டு அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் யாழ். மாநகராட்சி மன்றமும் இணைந்து நடாத்தும் சர்வதேச மகளிர் தின நிகழ்வு இன்று செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே. என்.டக்ளஸ் தேவானந்தா, கௌரவ விருந்தினராக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினராக வடமாகாண செயலாளர் திருமதி விஜயலக்ஷ்மி ரமேஸ் , யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோர் சிறப்பிக்கவுள்ளனர்.

(ஶ்ரீ-2)

# மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/சன்மார்க்க மகாவித்தியாலய வருடாந்த இல்லமெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பெருமாள் கோவில் முன்றலில் வித்தியாலய அதிபர் திருமதி மிமலாதேவி விமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம்,சிறப்பு விருந்தினராக யாழ். கோட்டக்கல்விப் பணிப்பாளர் திருமதி வசந்திமாலா சிவபாலன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

(ஶ்ரீ-9)

# வினைத்திறன் காண் தடைப்பரீட்சை

(அல்வாய்)

இலங்கை அதிபர் சேவையில் உள்ளவர்களுக்கான வினைத்திறன் காண் தடைப் பரீட்சை எதிர்வரும் 12,13ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கு தோற்றும் அதிபர்கள் செல்வதற்கான அனுமதியை தத்தம் வலயக்கல்வி பணிப்பாளரிடம் பெற்றுக்கொள்ளுமாறு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஶ்ரீ-3-19)

# அமெ.கோடீஸ்வரர் ராஜரத்தினத்திற்கு எதிரான வழக்கு விசாரணை இன்று

(கொழும்பு)

பங்குப் பரிவர்த்தனை சந்தையில் முன்கூட்டியே விபரங்களைப் பெற்று பங்குகளைக் கொள்வனவு செய்வதாக குற்றச் சாட்டப்பட்டவரான அமெரிக்க கோடீஸ்வரர் ராஜ் ராஜரத்தினத்திற்கு எதிரான வழக்கு இன்று செவ்வாய்க் கிழமை இடம்பெறவுள்ளது.

நியூயோர்க்கில் உள்ள கல்லியன் குழுமத்தின் ஸ்தாபகரான ராஜ்ராஜரத்தினத் திற்கு ஜூரிமார் தெரிவு இன்று இடம்பெறுகின்றது.

அமெரிக்காவின் கம்பனிகள் குழுமங்களின் உயர் மட்டத்தில் உள்ள நண்பர்கள் நெருங்கியவர்களுக்கூடாக சட்டவிரோதமாக 40 மில்லியன் டொலரை இலவசமாக ஈட்டியுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டது.

இலங்கையைச் சேர்ந்த 53 வயதான ராஜ் ராஜரத்தினத்திற்கு கல்லியன் குழுமம் 7 பில்லியன் டொலர்களை தற்போது எட்டியுள் ளது.

ராஜ ரத்தினம் கடந்த 2009ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டார். இவருக்கு எதிரான வழக்குகள் நிருபிக்கப்பட்டால் 20 வருடங்களுக்கு மேற்பட்ட சிறைத் தண்டனை வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

கோல்ட் இன் இரகசியத் தகவல்களை அவர்கள் 2008இல் வெளியிட் டதாகவும் அதன் அடிப்படையில் ராஜரத்தி னம் வர்த்தகத்தில் ஈடுபட்டதாகவும் குற்றச் சாட்டு தெரிவிக்கப்படுகிறது.

ராஜ் ராஜரத்தினத்திற்கும் கோல்ட்மடான்சச் இன் முன்னாள் பணிப்பாளர் ராஜத்குப்தாவிற்கும் இடையில் உரையாடல் ஒலி நாடாவை சாட்சியமாக வெளியிடப்போவதாக அரச சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர். (ஶ்ரீ-2)

# அரச சொத்துக்களை பயன்படுத்தி ஆளும்கட்சியினர் பிரசாரம்

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரச சொத்துக்களை உச்சளவில் பயன்படுத்தி ஆளும் கட்சி தேர்தல் பிரசாரங்களை நடத்தி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

ஆளும் கட்சியின் இந்த நடவடிக்கையினால் ஏனைய கட்சிகளுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளும் கடுமையாக தேர்தல் சட்டங்களை மீறிச் செயற்பட்டு வருவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார். தேர்தல் பிரசாரக் கூட்டங்களை நடாத்துவதற்கு அரச கட்டடங்கள் மற்றும் மை தானங்களை பணம் கொடுத்துக்கூட எதிர்க் கட்சிகள் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சியினர் தேர்தல் சட்டங் களை எந்த வகையிலும் மதித்து செயற்படுவ தில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஶ்ரீ-2)

# வேலையற்ற பட்டதாரிகள் மறியல் போராட்டம்

கிண்ணியா பிரதேச செயலகத்துக்கு முன்பாக வேலையற்ற பட்டதாரிகள் தமக்கு உடனடியாக அரச நியமனம் வழங்க வேண்டுமெனக் கோரி மறியல் போராட்டமொன்றில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்றுக்காலை 8.35 மணிக்கு பிரதேச செயலகத்திற்கு முன்பாக ஒன்றுகூடிய வேலையற்ற பட்டதாரிகள்,பிரதேச செயலக நுழைவாயிலை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

எந்தவிதமான அரசியல் தலையீடுகளுமின்றி நியமனம் வழங்க வேண்டும். நியமனங்கள் வழங்கப்படும் போது வயதெல்லை கவனத்திற்கொள்ளப்படக் கூடாது போன்ற கோரிக்கைகளை முன்வைத்து வேலையற்ற பட்டதாரிகள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த மறியல் போராட்டம் காரணமாக கிண்ணியா பிரதேச செயலகப் பணிகள் அனைத்தும் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

குறித்த இடத்திற்கு விரைந்த பொலிஸாரும் கிழக்கு மாகாணசபைத் தலைவர் எச். எம்.பாயிஸும் வேலையற்றபட்டதாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். (ஶ்ரீ-2)

# விடுதலைப்புலி உறுப்பினர்கள் 118 பேருக்கு புனர்வாழ்வு

(கொழும்பு)

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த விடுதலைப்புலி உறுப்பினர்கள் 118 பேரை புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்பி வைக்குமாறு கொழும்பு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தில் இதுவரை காலமும் பூசா தடுப்பு முகாமில் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். நேற்று அவர்கள் பயங்கர வாதத் தடுப்புப் பிரிவு பொலிஸாரி னால் கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப் பட்டிருந்தனர்.

பிரஸ்தாப சந்தேக நபர்கள் தொடர்பில் ஆய்வொன்றை மேற்கொண்டிருந்த சட்டமா அதிபர் திணைக்களம் அவர்கள் புனர்வாழ்வுக்குட் படுத்தப்பொருத்தமானவர்கள் என்று இனம் கண்டு அதற் கான பரிந்துரையை நீதிமன்றத்திடம் முன் வைத்திருக்கிறது.

அதனைக் கவனத்தில் கொண்ட நீதி மன்ற அவர்கள் அனைவரையும் வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாமிற்கு அனுப்பி வைக்குமாறு பயங்கரவாதத் தடுப் புப் பிரிவு பொலிஸாருக்கு உத்தரவிட் டுள்ளது. (ஶ்ரீ-2)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பலாலியைப் பிறப்பிடமாகவும் கைதடி சாந்தி முதியோர் இல்லத்தை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த

**திருமதி ஆறுமுகம் புவனேஸ்வரி**

அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வு இன்று 08.03.2011 சாந்தி முதியோர் இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வினைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு இல்லத்தில் உள்ள அனைவரையும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

வைரவி ஆறுமுகம்-கணவன்
சாந்தி முதியோர் இல்லம்
வாட் நம்.10, கைதடி (3933)

Flex Travels வழங்கும் FREE AIR TICKET உடன்
IELTS இன்றி
Spot Admissions
மூலம் UK இல்
உயர் கல்வி
West End College London

திகதி : 26th March 2011
இடம் : 4, IBC Road, Colombo 6.
நேரம் : 10.00am to 4.00pm
VISA பெற்றுக்கொள்ளும் முன்னர் அல்லது அதன் பின்னர் எந்தவொரு கட்டணமும் அறவிடப்படமாட்டாது.
எமது சேவை முற்றிலும் இலவசம்
For appointment please contact :
0777-761346
0775-952607
4, IBC Road, Wellawatte, Colombo 6.
flex Institute Step Towards a Bright Future (A Subsidiary of Flex Graphic)
E-mails> flexinstitute@sltnet.lk
kiru@flexinstitute.lk
ashwinee@flexinstitute.lk
Web: www.flexinstitute.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## சனியின் சங்கடம்

நண்பர் ஒருத்தருக்கு சோதிடத்தில் அதீத நம்பிக்கை.

''இப்ப எனக்கு நேரம் சரியில்லை .சனிமாறினால் எல்லாம் சரியாகிவிடும்'' என்பார்.

''சனியைக் கண்டு பயப்படாதீங்க'' என்றேன்.

''அதெப்படி பயப்படாமல் இருக்க முடியும்?'' என்றார்.

''சனியால் ஏற்படும் இடைஞ்சலைவிட அது பற்றிய பயத்தினால் ஏற்படும் இடைஞ்சல் தான் அதிகம்'' என்றேன்.

அவர் ஒரு மாதிரியாக என்னைப்பார்க்க ஆரம்பித்தார்.

அதுசம்பந்தமாக நான் ஏற்கனவே கேள்விப்பட்ட ஒரு கதையைச் சொல்ல ஆரம்பித்தேன்.

கைலாயத்தில் இருக்கும் பரமசிவனைப் பார்ப்பதற்கு பக்த கோடிகள் பலர் வர ஆரம்பித்தார்களாம்.

அவர்களெல்லாம் வசதியாக தங்குவதற்கு ஒரு மண்டபம் கூட இல்லை. காற்று–மழை–வெயில். கஷ்டப்பட்டார்கள். பார்ப்பதற்கு பாவமாக இருந்தது.

உடனே பார்வதி இதனைக் கவனித்தார்.

''சரி... அவரைத்தேடி வருபவர்களுக்கு நிழலாக பாதுகாப்பாக ஒரு மண்டபம் கட்டலாம்'' என்று கட்டிமுடித்தார். அதன்பின் அங்கே ஒரு சோதிடர் வந்தார்.

அவர் மண்டபத்தைப் பார்த்தார். அதன் பின் சொன்னார். ''அம்மா நீங்கள் மண்டபம் கட்டின நேரம் சரியில்லை. சீக்கிரமே சனி பிடிக்கப் போகிறது. உடனே இந்த மண்டபம் இடிந்து விழப்போகிறது என்றார்.

இதைக்கேட்டதும் பார்வதிக்கு கோபம் வந்துவிட்டது. நேராக பரமசிவனிடம் போனார்.

''என்னங்க... இதைக் கேட்டீர்களா?'' என்றார்.

''என்ன ஆச்சு'' என்றார் அவர்.

''நான் கட்டியிருக்கும் மண்டபத்தில் சனி வந்து உட்காரப் போகின்றாராம் மண்டபம் இடிந்து விழப் போகிறதாம் என்று ஜோதிடர் சொல்கிறார். எனக்குப் பயமாக இருக்கிறது'' என்றார்.

''நான் கட்டிய மண்டபம் சனி வந்து இடித்தால் நம்முடைய கௌரவம் என்ன ஆகிறது... என்னை விட சனி பெரிய ஆளா? அதன்பின் நம்மால் தலை நிமிர்ந்து நடக்க முடியுமா?'' என்றார்.

''நீங்கள் இப்பவே புறப்பட்டு நேராக சனியிடம்போய் நீ இங்கே வரக்கூடாது மண்டபம் இடியக்கூடாது என்று சொல்லுங்கள்'' என்றார்.

பரமசிவன் யோசித்தார்.

''இதோபார் தேவி! சனிக்கு சகல சக்திகளையும் நாமே கொடுத்து விட்டு இங்கே வரக்கூடாதென்று சொல்வதில் நியாயமில்லை.

அதேநேரம் மண்டபம் இடிந்தால் உன் கௌரவம் பாதிக்கப்படும் என்பதும் நியாயம் தான் .

ஒன்று செய்வோம் நான் நேராக சனியிடம் போகின்றேன். நீ இங்கே வரவேண்டாம் என்று சொல்லிப்பார்க்கின்றேன். சரியென்று ஒத்துக் கொண்டால் பரவாயில்லை. முடியாதென்று சொல்லிவிட்டால் நான் அங்கிருந்தபடியே என் உடுக்கையை ஆட்டி சத்தம் கொடுக்கிறேன்.

அதைவைத்து நீ விடயத்தைப் புரிந்து கொண்டு சனி இங்கே வருவதற்குள் மண்டபத்தை நீயே இடித்துத் தள்ளிவிடு.

யாராவது கேட்டால் ஏற்கனவே கட்டியிருக்கும் அமைப்பு பிடிக்கவில்லை புதுப்பித்துக் கட்டப்போகிறோம் என்று சொல்லிவிடு. சனிவந்து இடித்தால்தானே கௌரவக்குறைச்சல். அதற்கு முன் நீயே இடித்துவிடு உன் கௌரவத்தை காப்பாற்றிக் கொள்'' என்றார்.

''சரி.... அப்படியே செய்வோம்'' என்றார்கள். பரமசிவன் புறப்பட்டுப் போனார். சனீஸ்வரனைப் பார்த்தார் விபரத்தை சொன்னார்.

சனீஸ்வரன் அதைக்கேட்டவுடன் ''இவ்வளவுதூரம் நீங்களே வந்து கேட்டபின்னரும் அதை மீறி நான் அங்கேவருவேனா? மண்டபத்தை இடிப்பதில் எனக்கு விருப்பமில்லை. இதற்குப் பிரதிபலனாக நீங்கள் ஒரு காரியம் செய்யவேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

''என்ன செய்யவேண்டும் சொல்'' என்றார் ஈஸ்வரன். ஒரே ''ஒருதடவை நான் உங்கள் ஆனந்த தாண்டவத்தை பார்க்க வேண்டும் அதுதான் என் ஆசை'' என்றார்.

''அவ்வளவுதானே... இதோ ஆடுகிறேன் பார்த்துக் கொள்'' என்று சொல்லி ஆட ஆரம்பித்தார். அப்பொழுது அவருடைய கையிலிருந்து உடுக்கை இயல்பாகவே அசையஆரம்பித்தது. அந்த சத்தம் பார்வதியின் காதில் விழுந்தது. அவ்வளவுதான்.

''சரி... சனி சம்மதிக்கவில்லை போலிருக்கிறது என்று முடிவு செய்து அவன் வந்து இடிப்பதற்குள் நாமே இடித்துவிடுவோம்'' என்று மண்டபத்தை இடித்துத் தள்ளிவிட்டு உட்கார்ந்திருந்தனர். பரமசிவன் வந்து பார்த்ததும் தான் நடந்த விபரம் புரிந்ததாம் இப்படி ஒரு கதையுண்டு.

யாராக இருந்தாலும் எச்சரிக்கை அவசியம் என்பதை நாம் இதிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

நம்மஆள் ஒருத்தன் வீடுகட்டினான். அதன்பின் சோதிடம் பார்த்தான். சோதிடர் சொன்னார்:

''நீ வீடு கட்டின நேரம் சரியில்லை கிரகப்படி பார்த்தால் இந்த மாதம் 10 ஆம் திகதி சனிவந்து உட்காரப்போகிறார்'' என்றான்.

''10 ஆம் திகதி தானே நான் அங்கேயே குடிபோகலாம் என்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்'' என்றான் இவன்.

''அதைத் தான் சொன்னேன்'' என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பிரமோற்சவம்

(யாழ்ப்பாணம்)

இளவாலை ஆனைவிழுந்தான் விக்கின விநாயகர் தேவஸ்தான பிரமோற்சவம் இன்று செவ்வாய்க் கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற் றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் உற்சவம் நடைபெறவுள்ளது.

இத்திருவிழாவில் எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-9)

# கல்வியியல் முதுமாணி பரீட்சை பிற்போடல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடத்தினால் நாளை மறுதினம் வியாழக்கிழமை நடாத்தப்படவிருந்த கல்வியியல் முதுமாணி கற்கைநெறியின் 2010/ 2011 ஆம் ஆண்டுக்கான முதலாம் அரையாண்டுப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

இப்பரீட்சையானது எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை முன்னைய நேர அட்டவணைப்படி நடைபெறும் என்றும் இப்புதிய நேர அட்டவணையை உயர்பட்டப் படிப்புகள் பீடத்தில் பார்வையிடலாம் எனவும் பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# திருப்பாடுகளின் நாடகத்துக்கான பிரதி வழங்கும் நிகழ்வு

யாழ்.திருமறைக்கலாமன்றத்தால் ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் இயேசுவின்பாடுகள், மரணம், உயிர்ப்பைச் சித்திரிக்கும் மாபெரும் தயாரிப்பாகிய திருப்பாடுகளின்நாடகத்திற்கான பிரதி வழங்கும் வைபவம் தவக்காலத்தின் ஆரம்ப நாளான நாளை புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு மன்றத்தின் கலைத்துறை மணி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரை யாழ். அஞ்சனந்தாழ்வு பங்குத்தந்தையான ஜே.நீக்கிலஸ் அடிகள் வழங்கவுள்ளார். அத்தோடு இவ்வாற்றுகையில் பங்கேற்கவுள்ள நடிகர்களுக்கான பிரதிகளை வழங்கி சிறப்பிக்கவுள்ளார்.

பிரதி வழங்கும் நிகழ்வில், வழமையாக திருப்பாடுகளின் நாடகத்தில் பங்கேற்று நடிக்கின்ற அனைத்துக் கலைஞர்களையும் இம்முறை புதிதாக இணைந்து நடிப்பதற்கு விருப்ப முடையவர்களையும் கலந்து கொள்ளுமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

இம் முறை திருப்பாடுகளின் நடாகம் எதிர் வரும் ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை தினமும் மாலை 5.45 மணிக்கு *கடவுள் வடித்த கண்ணீர்* என்னும் பெயரில் மன்ற அரங்கில் மேடையேற்றப் படவுள்ளது. (ஸ்ரீ-3)

# பங்குனி உத்தர இலட்சார்ச்சனை

கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில் பங்குனி உத்தர இலட்சார்ச்சனை இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெறவுள்ளன.

இதில் இன்றைய தினம் காலை 11 மணிக்கு கணபதி ஹோமம் இடம்பெறும்.எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 8 மணிக்கு 64 உபசார வழிபாட்டுடன் இலட்சார்ச்சனை நிறைவும் மறுநாள் சனிக்கிழமை காலை 7 மணிக்கு 1008 சங்காபிஷேகமும் மாலை 5 மணிக்கு திருவிளக்கு பூசையும் நடைபெறவுள்ளன. (ஸ்ரீ-9)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 220 | 200 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 65 | 60 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 170 | 200 | 200 | 180 |
| தக்காளி | 140 | 120 | 180 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 60 | 50 |
| கோவா | 110-120 | 100 | 120 | 100 |
| கரட் | 140 | 180 | 200 | 140 |
| பூசணி | 70 | 70 | 80 | 80 |
| புடோல் | 70 | 120 | 100 | 100 |
| வாழைக்காய் | 50 | 60 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 80-100 | 120 | 100 | 80-100 |
| பெரிய வெங்காயம் | 70 | 70 | 80 | 90 |
| பாகற்காய் | - | 120 | 180 | 100 |
| வெண்டிக்காய் | 120 | 130 | 200 | 140 |
| கருணைக் கிழங்கு | - | 70 | 80 | - |
| பயற்றங்காய் | 200 | 150 | 200 | 200 |
| லீக்ஸ் | 150 | 130 | 160 | 140 |
| பீற்றூட் | 80 | 80 | 90 | 70 |
| கறிமிளகாய் | 180 | 200 | 200 | 160 |
| முருங்கைக்காய் | 500 | 500 | 600 | 600 |
| போஞ்சி | 130 | 150 | 160 | 130 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | 180 | 170 |
| கீரை - 1 பிடி | 5-10 | 20 | 20 | 10-30 |
| தேசிக்காய் | 60 | 30 | 60 | 30 |
| தேங்காய் (ஒன்று) | 30-70 | 50 | 70 | 30-60 |

# இராசி பலன்

*08.03.2011*
*(மாசி 24, செவ்வாய்க்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு*
*திருதியை முற்பகல் 8.43 மணிவரை*
*ரேவதி முற்பகல் 10.15 மணிவரை*
*இராகுகாலம் 3.24-4.54 மணிவரை*
*சுபநேரம் 10.54-12.24 மணிவரை*
*சித்தாமிர்தம், சதுர்த்தி விரதம்,*
*உலக மகளிர் தினம்*

**மேடம்** கணபதி வழிபாட்டால் இன்பம் காண வேண்டியநாள், கனவு பலிதமுண்டு, கொடுத்தவாக்கை காப்பற்ற நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவுவர், உடல் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபடவேண்டிய நாள், சேமிப்பில் சிறிது கரையலாம், மாலை நேரங்களில் சிறு பயணமொன்று அமையலாம் பக்குவமாக பேசி காரியம் சாதிப்பீர்கள்.

**மிதுனம்** எண்ணியகாரியங்கள் கைகூடும், தனவரவுகள் திருப்திதரும், தொழிலில்மேன்மையுண்டு, இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**கடகம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகலாம், நல்ல தகவல் வந்துசேரும், வீட்டை விருத்தி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், பிறர் உதவிகள் வந்து சேரும்.

**சிங்கம்** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், சொத்துக்களால் நன்மையுண்டு, பேச்சில் இனிமை தென்படும், ஏட்டிக்குப் போட்டியாக இருந்தவர்கள் விலகுவர்.

**கன்னி** கவலைகள் தீர கந்தனைவழி பட வேண்டிய நாள், மறதியால் சில தொல்லைகளுக்கு உட்பட நேரிடும், பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறைகூறும் வாய்ப்புண்டு.

**துலாம்** சென்ற இடத்தில் செல்வாக்கு அதிகரிக்கும், குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டு வீர்கள், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்** பொதுவாழ்வில் புகழ் கூடும், மனக்குழப்பம் அகலும், திட்டமிட்டகாரியங்கள் திட்டமிட்டபடியே நடைபெறலாம், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும் நாள்.

**தனுசு** கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நீண்ட நாளைய கனவுகள் நனவாகலாம், செய்தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மகரம்** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும், சுப தகவல்கள் வந்து சேரலாம், பெற்றோர் மீது பந்த பாசம் அதிகரிக்கும்.

**கும்பம்** முயற்சிகளில் வெற்றி கிடைக்கும், நிறுத்திவைத்த வேலை ஒன்றை மீண்டும் செய்து முடிப்பீர்கள், பெண் தெய்வ வழிபாட்டால் பெருமை சேரும், சகோதரர்கள் பக்கபலமாக நடப்பர்.

**மீனம்** எதிர்பாராத தனவரவு வந்து சேரும், சுப காரியப்பேச்சுக்கள் முடிவாகி மன ஆறுதலைத் தரும், பொருட்சேர்க்கைக்கு முயற்சி எடுப்பீர்கள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு நோய்ப் பிரச்சினைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி


**உடற்பருமன்**

தைரொய்டு பிரச்சினை போன்ற ஓமோன் பாதிப்புகள் மற்றும் உணவுமுறை, பரம்பரை போன்றவை காரணமாக உடற் பருமன் அதிகமிருப்பவர்களுக்கு நீரிழிவு நோய்க்கான வாய்ப்புகள் அதிகம். உயரத்திற்கு ஏற்ற உடற்பருமன், எடை இல்லாமல் கூடுதலாக இருப்பின் நீரிழிவு வியாதி வரும்.

தொப்பை அதிகம் இருப்பவர்களுக்கும் இந்த நோய் கண்டிப்பாக வரும்.

**நீரிழிவு நோயைத் தடுத்துக்கொள்ள**

நீரிழிவு நோய் வராமல் தடுக்க வேண்டுமானால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.



நல்வாழ்வு முறைக்கேற்ப வாழ்க்கை முறையில் மாற்றத்தை உண்டாக்க வேண்டும்.

வயது வித்தியாசமில்லாமல் உணவு முறையில் மாற்றம், ஊட்டச்சத்துணவின் முக்கியத்துவம், உடற் திறனை அதிகரிக்கும் செயற்பாடுகள், எடை குறைப்பில் கவனத்தைச் செலுத்துதல் போன்றவற்றில் ஈடுபட்டால் நீரிழிவு வியாதி வரும் வாய்ப்பை அறுபது சதவீதம் வரை தடுத்து விடலாம்.

வாழ்க்கை முறைக்கு ஏற்ற உணவு வகைகளைச் சாப்பிட்டுப் பழக வேண்டும். அதிக நார்ச்சத்து உணவுகளை எடுத்துக் கொண்டு மொத்தக் கலோரியில் முப்பது சதவீதம் குறைவாகச் சாப்பிட்டாலும் பரவாயில்லை. கொழுப்புச்சத்து 10 கலோரி அளவு மட்டுமே இருக்குமாறு உணவுமுறை இருக்க வேண்டும்.

மாமிச உணவுகளைவிட இயற்கையான காய்கறிகள் மற்றும் கனிகளில் கொழுப்புக் குறைவு, மற்றச் சத்துகள் அதிகம். எனவே, இயற்கை உணவுக்குத் திரும்ப வேண்டும்.

தொடர்ந்து உடற்பயிற்சியில் ஈடுபட வேண்டும். நடப்பது நல்லது, மோட்டார் சைக்கிளில் செல்வதை விட சைக்கிளில் செல்வது உடற்றிறனை அதிகரிக்கும்.

ஏரோபிக் பயிற்சிகள், இசைக்கேற்றவாறு நடனம் போன்றவற்றில் ஈடுபடலாம்.

உடல் எடையை அதிகரிக்கவிடாமல் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொள்ளும் வழிமுறைகளைத் தவறாமல் பின்பற்ற வேண்டும். இதையெல்லாம் செய்தால் நீரிழிவு நோய் நம்பக்கம் வராமல் தடுத்து விடலாம்.

**அனைவரும் அறிந்துகொள்ள வேண்டியவை**

முப்பது முதல் நாற்பது வயதாகி விட்டாலே ஆண்டுக்கு ஒருமுறை நீரிழிவுப் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.

- ☆ *உங்கள் குடும்பத்தில் யாருக்கேனும் நீரிழிவு நோய் இருந்தால்,*
- ☆ *நீங்கள் அதிக எடையுடனிருந்தால்,*
- ☆ *எவ்வளவு சாப்பிட்டாலும் காரணமே இல்லாமல் எடை குறைந்தால்,*
- ☆ *உடல் உழைப்பு இல்லாமலிருந்தால்*
- ☆ *காரணமே இல்லாமல் ஒவ்வாமை – மலச்சிக்கல் இருந்தால்,*
- ☆ *மன இறுக்கம்*
- ☆ *அதிக பசி*
- ☆ *மிகுதியான தாகம்*
- ☆ *அடிக்கடி சிறுநீர் கழித்தல்*
- ☆ *காயங்கள் ஆறாத நிலை*

போன்றவை இருந்தால் உடனடியாகத் தகுதி வாய்ந்த மருத்துவரை அணுகி சிறுநீர் பரிசோதனை அல்லது இரத்தப் பரிசோதனை மேற்கொள்ளுங்கள்.

உணவு உட்கொண்ட பின்னர் ஒன்றரை மணியிலிருந்து 2 மணி நேரத்திற்குப் பின்னர் சிறுநீர் பரிசோதனை செய்து கொள்வதுதான் சரியான முறை.

முதலில் வெளியாகும் சிறுநீரைக் கழித்து விட்டு இரண்டாவது முறை கழிக்கும் சிறுநீரை ஒரு சுத்தமான போத்தலில் எடுத்து வைத்துப் பரிசோதிக்க வேண்டும்.

மருந்துக் கடைகளில் **டயஸ்டிக்ஸ்** என்ற பெயரிலோ அல்லது **டெஸ்ட் டேப் சுகர் இன் யூரின்** என்ற பெயரிலோ கிடைக்கும் பரிசோதனைக் கருவிகளை வாங்கிப் பயன்படுத்தி நீரிழிவு இருக்கிறதா இல்லையா என்பதை அறியலாம்.

மருந்துக் கடைகளில் பெனடிக்ட் சொலூசன் என்று கேட்டு வாங்கி அதில் ஐந்து மில்லி எடுத்து ஒரு சோதனைக் குழாயில் போட்டு ஸ்பிரிட் விளக்கு வெப்பத்தில் கொதிக்க வையுங்கள். பெனடிக்ட் சொலூசன் நிறம் மாறாமல் இருக்க வேண்டும்.

இரண்டாம் முறையாக எடுத்த சிறுநீரிலிருந்து ஒரு சொட்டு விட்டு மறுபடியும் கொதிக்க வையுங்கள். இப்போது நிறத்தைப் பாருங்கள். நிறம் மாறாமல் நீல நிறத்திலிருந்தால் உங்களுக்குச் நீரிழிவு நோய் இல்லை.

மஞ்சள் நிறத்திலிருந்தால் இரண்டு சதவீதம் வரை நீரிழிவு உள்ளது என்பதையும்

ஒரேஞ் நிறத்திலிருந்தால் நீரிழிவு நோய் இருப்பதையும் தெரிந்து கொள்ளலாம்.

விற்றமின் மாத்திரைகளைச் சாப்பிட்ட பின்னர் சிறுநீர்ப் பரிசோதனை செய்ய வேண்டாம். இதனால் சிறுநீரில் தவறான முடிபுகள் தெரியவரலாம்.



ஆண்டுக்கு ஒருமுறை கண், இதயம், பொது உடற் பரிசோதனை மேற்கொள்வது நல்லது. அறுவைச் சிகிச்சை செய்ய வேண் டிய நிலை வந்தால் அறுவைக்கு முன்பும் பின்பும் நீரிழிவுப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

உங்கள் கை, கால்களில் காயங்கள் ஏற்படாமலும் ஒருவேளை ஏற்பட்டால் அவை விரைந்து ஆறுகின்றனவா என்பதையும், அளவுக்கு மீறிய களைப்பு ஏற்படுவதாக இருந்தால் இதயப் பரிசோதனையையும் மேற்கொள்ளங்கள்.

பேராசிரியர்
டாக்டர் மு.காமராஜ்.
M.D., P.G.D.C.G., D.M.R.,
சென்னை.

மணம் செய்துகொள்ளும் முன்பு மாப்பிள்ளை பெண் வீட்டார் இருவரும் குடும்பத்திற்குள் நீரிழிவு வியாதி ஏதும் இருக்கிறதா என்பதைக் கேட்டுத் தெரிந்து கொள்வதுதான் நல்லது. (தொடரும்)




# வலிப்பு நோய்

**சில குழந்தைகளுக்கு காய்ச்சல் நேரத்தில் வலிப்பு வருகின்றதே... அதைப்பற்றி குறிப்பிடுங்கள்.**

ஆமாம், சில குழந்தைகளுக்கு உடற் காய்ச்சலானது நூறு டிகிரியை தாண்டுகின்ற தருணங்களில் வலிப்பு ஏற்படலாம். இப்படி வலிப்பு தோன்றும் குழந்தைகளுக்கு உடனடியாக மருத்துவக் கவனிப்புத் தேவையாகும். முறையான உரிய மருந்து சிகிச்சை கொடுப்பதன் மூலம் குழந்தைகளுக்குக் காய்ச்சலின் போது வருகின்ற வலிப்பினைக் குணப்படுத்தலாம்.

குழந்தைகளுக்கு வருகின்ற இன்னொரு வலிப்பு நோய் அழுகை வலிப்பாகும். எந்தக் காரணமுமின்றி நீண்டநேரம் குழந்தை அழுதுகொண்டிருக்கும். கடைசியில் உடல் முழுவதும் நீலநிறம் பரவி உடனடியாக வலிப்பு வரலாம். இதனையும் குணப்படுத்தி விடலாம்.

சுயநினைவு இழந்து விடுவர். சில மணித்துளிகளில் வலிப்பு தானாகவே நின்று விடும். நின்ற பின்னர் சிலருக்கு விரைவாகச் சுயநினைவு திரும்பிவிடும். சிலருக்கு இன்னும் அரைகுறை மயக்கம் இருக்கும். சிலர் அப்படியே தூங்கிவிடுவார்கள். தூங்கி விழித்த பின்னர் வலிப்பு நிகழ்ந்தமை எதுவும் அவர்களின் நினைவில் இருக்காது.

**வலிப்பு வந்ததற்குப் பின்னர் எப்படி இவர்களின் நடவடிக்கை இருக்கும்?**

வலிப்பு வந்த பின்னர் பலர் தங்கள் சுயநினைவை இழந்து காணப்படுவார்கள். இந்த நிலை சில நிமிடங்களுக்குப் பின்னர் மாறிவிடும். அதாவது வலிப்பானது, தாணாகவே சரியாகிவிடும். சரியானவுடன் அடுத்த நிமிடமே சிலர் சுயநினைவுக்கு உடனடியாகத் திரும்பிவிடுவார்கள். மற்றும் சிலருக்கு அரைகுறையாகச் சிறு அளவில் மயக்கம் கூட இருக்கலாம். வலிப்பிற்குப் பின்னர் அயர்ந்து தூங்கி விடுபவர்களும் உண்டு. இவ்விதமாகத் தூங்கி விழிக்கும் நபருக்கு தனக்கு வலிப்பு வந்ததோ, தான் பாதிக்கப்பட்டதோ துளியும் நினைவில் இல்லாமற்கூட இருக்கலாம்.

வலிப்பு வந்து சில நிமிடங்களுக்குப் பின்னர் அதாவது வலிப்பு சரியானதற்குப் பின்னர் வேறுபட்டுக்கூட நடந்துகொள்ளலாம். சிரிக்கலாம். இன்னும் சிலர் அழவும் செய்யலாம்.



முரண்பட்டுப் பேசக் கூட செய்வார்கள். சிலருக்குக் காலிலும் கைகளிலும் தற்காலிகமாக இயக்கமின்றி வாதம் போன்ற பாதிப்பு எற்படலாம். தானாகவே இது குணமாகிவிடும்.

**வலிப்பு நோய் பயப்படக்கூடிய ஒருநோயா?**

வலிப்பினை ஒரு நோயாகக் கருதக் கூடாது. அதுவொரு பாதிப்பு அவ்வளவுதான். பீறிட்டு வருகின்ற உணர்ச்சிகளைப் போல வலிப்பும் ஒரு வெளிப்பாடு.

வலிப்பு வருவதற்கு முன்னரும் பின்னரும் கூட வலிப்பு வருகின்ற அல்லது வந்த நபர்களின் குணத்திலும் மன ஆளுமையிலும் எவ்விதமான பாதிப்புக்குள்ளான அம்சங்கள், குறைபாடுகள் அல்லது வேறுபாடுகள் உண்டாவதில்லை. எனவே, வலிப்பு நோயை ஒரு நோயாகக் கருதத் தேவை யில்லை. அதுவொரு பாதிப்பு அவ்வளவுதான். இதனை உலகளவில் அனைத்து நரம்பியல் வல்லுநர்களும் தீர்மானமாகத் தெரிவித்துள்ளனர். ஆகவே, பெற்றோர்களும் மற்றவர்களும் உற்றார், உறவினரும் கவலை கொள்ளத் தேவையில்லை.

சிறுவலிப்பு என்று ஒருவகை உள்ளது. இதனை ஆங்கிலத்தில் பெடிட் எபிலப்ஸி என்று குறிப்பிடுவார்கள். வயதில் இளையவர்களைத்தான் இந்தச் சிறுவலிப்பு பாதிக்கும் என்று குறிப்பிட்டுச் சொல்லலாம். இன்னொரு வகைவலிப்புஉள்ளது. இதற்கு ஜாக்சோனியன் வலிப்பு என்று பெயர். கையிலுள்ள கட்டை விரலும் வாயும் துடிப்பது போல தோன்றும். மூளையின் புறப்பகுதியில் புறப்படுகின்றப் சிறுபொறியானது மூளையினுடைய மற்ற பகுதிகளிலும் வியாபித்துப் பரவிவிடுவதால்தான் இந்த ஜாக்சோனியன் வலிப்பு தோன்றுகிறது.

பெரு மற்றும் சிறு வலிப்பு, ஜாக்சோனியன் வலிப்பு பாதிப்புகள் ஒருவருக்குத் தோன்றக் காரணங்களே இல்லை. அதாவது தாணாகவே தோன்றக் கூடியவை என்றே சொல்ல முடியும். இதுவல்லாமல் செகண்டரி எபிலப்ஸி என்று ஒன்று உள்ளது.

இது சிலருக்கு மூளை நோய், வேறு சில நோய்களின் காரணமாக வரக் கூடியது.



வலிப்பு உள்ளவர்களுக்கு முதலில் அதி கப்படியான தன்னம்பிக்கை வேண்டும். அதுதான் வலிப்பு பாதிப்புள்ளவர்களின் அருமருந்து. இவர்கள் முறைப்படி தொடர்ந்து நரம்பியல் வல்லுநர்களின் பரிந்துரையின் பேரில் உரிய மருத்துவமும் மருந்தும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

வலிப்பு நோயாளிகளுக்கான முதல் உதவிகளை மற்றவர்களும் தெரிந்து வைத்திருப்பது நல்லது.

வலிப்பு வந்தவரின் உடைகளைத் தளர்த்தி விட்டு அவர்களுக்குத் தேவையான காற்றோட்டம் கிடைக்கச் செய்ய வேண்டும். அவரைப் பக்கவாட்டில் ஒருக்களித்துப் படுக்க வைக்க வேண்டும்.

நரம்பியல் நிபுணர்
டாக்டர் ஏ.பன்னீர், MS., DM.,
அப்பலோ மருத்துவமனை,
சென்னை–6

வலிப்பு வருகின்ற சமயத்தில் நாக்கு பற்களுக்கிடையே சிக்காமலிருக்க கைக்குட்டை அல்லது மெல்லிய துணியை மடித்து தாடைக்கு இடையே வைக்கவும். கட்டை மற்றும் உலோகத்தை வைக்கக்கூடாது.

இரும்புச் சாவிக்கும் வலிப்புக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. வலிப்பு வந்த நபரின் கைகளையும் கால்களையும் அழுத்திப் பிடிப்பது அத்தியாவசியமில்லை. இன்றைய நவீன மருத்துவத்தின் அடிப்படையில் ஸ்கான் மற்றும் நவீன உபகரணங்களின் வழியாக வலிப்பு நோயாளிகளைச் சரியாகப் பரிசோதித்து உரியமுறையில் சிகிச்சையினைக் கொடுத்து வலிப்பு நோயினைக் குணப்படுத்தலாம் என்பதை மக்கள் உணர வேண்டும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நாடுகளுடன் சிறந்த முறையில் தொடர்புகளை பேண தயாராகவுள்ளோம்

## அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவிப்பு



(கொழும்பு)

சர்வதேச நாடுகள் இலங்கையுடன் சிறந்த முறையில் உறவுகளை தொடரவே விரும்புகின்றன. ஜெனீவாவில் வைத்து சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்திய போது இதனை உணர முடிந்தது என பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஜெனீவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையின் கூட்டத் தொடரில் கலந்து கொண்டு விட்டு நாடு திரும்பிய அமைச்சர் சர்வதேச உறவுகள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பட்டார்.

அமைச்சர் இது தொடர்பில் மேலும் கூறுகையில்,

ஜெனீவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையின் கூட்டத் தொடரில் கலந்து கொள்ள சென்றிருந்த எனது தலைமையிலான இலங்கை தூதுக்குழு சர்வதேச நாடுகளின் பல்வேறு பிரதிநிதிகளையும் சந்தித்து பேச்சு நடத்தியது.

இதன் போது சர்வதேச நாடுகளின் பிரதி நிதிகளுக்கு நாங்கள் இலங்கையின் தற்போதைய நிலைமை மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள், மீள் குடியேற்ற செயற்பாடுகள் தொடர்பில் விரிவாக விளக்கிக் கூறினோம்.

சர்வதேச நாடுகள் இலங்கையுடன் தொடர்ந்து சிறந்த முறையில் உறவுகளை தொடர தயாராக இருப்பதை நாங்கள் இந்த சந்திப்புக்களிலிருந்து புரிந்து கொண்டோம். எனவே, நாங்களும் சர்வதேச நாடுகளுடன் தொடர்புகளை தொடர்ந்து பேண எதிர்பார்க்கின்றோம்.

இதேவேளை இலங்கை அரசாங்கம் தயாரித்து வருகின்ற மனித உரிமைகளை ஊக்குவிப்பதற்கான தேசிய செயற்பாட்டு வேலைத் திட்டம் தொடர்பிலும் வெளிநாடுகளின் பிரதிநிதிகளுடன் நாங்கள் பேச்சு நடத்தினோம் என்றார்.

ஐ.நா. வின் மனித உரிமை பேரவையில் இலங்கை சார்பில் உரையாற்றிய மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க மீள்குடியேற்றம், புனர்வாழ்வு நடவடிக்கைகள், அபிவிருத்தி வேலைத் திட்டங்கள், அவசர கால சட்ட விதிகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் தெளிவு படுத்தியிருந்தார்.

(ஸ்ரீ-2)

# இலங்கை முஸ்லிம்கள் அரபுமொழியை தாய்மொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டும்

## முஸ்லிம் உரிமைகள் அமைப்பின் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை முஸ்லிம்கள் அரபு மொழியை தாய்மொழியாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென முஸ்லிம் உரிமைகள் அமைப்பின் தலைவர் எம்.ஐ.எம். மொஹிதீன் தெரிவித்துள்ளார்.

அரபுமொழியைத் தாய்மொழியாகப் பின்பற்றுவதன் மூலம் முஸ்லிம்கள் அதிகளவு இஸ்லாமியர்களாக மாற்றமடைய முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மொழி காரணமாக நாட்டில் பிளவடைந்துள்ள முஸ்லிம்களை இணைப்பதற்கு இந்தத் திட்டம் வழிகோலும் எனவும் அரபுமொழியை தாய்மொழியாக ஏற்றுக்கொள்வதன்மூலம் மேற்கு ஆசிய நாடுகளில் கூடுதலான பொருளாதார நன்மைகளை இலங்கை முஸ்லிம்கள் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெரும்பான்மையாக முஸ்லிம்கள் தமிழ்மொழியை தாய்மொழியாக ஏற்றுக்கொண்டுள்ளனர். இதே வேளை மலே, குஜராத்தி, உருது, குட்சி உள்ளிட்ட மொழிகளையும் இலங்கை முஸ்லிம்கள் பயன் படுத்துகின்றனர்.

கொழும்புவாழ் செல்வந்த முஸ்லிம்கள் ஆங்கிலம் அல்லது சிங்கள மொழியை தாய் மொழியாக ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு மொழி ரீதியாக பிளவடைந்துள்ள இலங்கை முஸ்லிம்களை ஒன்றிணைப்பதற்கு அனைத்து முஸ்லிம்களும் அரபு மொழியைக் கற்றுக்கொள்வது அவசியமானது எனஅவர் குறிப்பிட்டுள்ளார்.

அரபுமொழி சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மொழிகளில் ஒன்று என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முஸ்லிம்களுக்கு மொழி ரீதியான தனித்துவம் இல்லாத காரணத்தினால் இன ரீதியாக பல பின்னடைவுகளை எதிர்நோக்க நேரிடுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

# இந்திய வங்கியொன்றிடமிருந்து கடன்பெற்ற ஆசிரியர்கள்

## திருப்பிச் செலுத்தவில்லையென முறைப்பாடு

மத்திய மாகாணம், இந்திய வங்கியொன்றின் கண்டிக்கிளையில் ஆசிரியர்களும் அதிபர்களும் கடன் பெற்றுக்கொண்டுள்ளதாகவும் இன்னமும் 14 இலட்ச ரூபா கடன் செலுத்த வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மத்திய மாகாண ஆசிரியர்கள் இந்திய வங்கியொன்றுக்கு இந்திய வங்கியொன்றின் கண்டிக்கிளையில் 30 பாடசாலைகளைச் சேர்ந்த 600 ஆசிரியர்களும் அதிபர்க ளும் கடன் பெற்றுக்கொண்டுள்ளனர்.

இவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தொகையில் ஒரு தொகுதி செலுத்தப்படவில்லை என இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் காந்தா, மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

எவ்வாறெனினும் வங்கியொன்றில் கடன் பெற்றுக் கொள்ளப்பட்ட விவகாரம் தொடர் பில் இராஜதந்திர ரீதியில் அழுத்தம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என ஆசிரியர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

பணத்தை அறவீடு செய்வதற்கு சில ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகள் காணப்படுவதாகவும் அதன் அடிப்படையில் கடன் தொகையை அறவீடு செய்யமுடியும் எனவும் ஆசிரியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஸ்ரீ-2)

# 5 சர்வதேச பல்கலைக்கழகங்களை இலங்கையில் அமைக்க அனுமதி

(கொழும்பு)

ஐந்து சர்வதேச பல்கலைக் கழகங்களை இலங்கையில் அமைப்பதற்கான திட்டங்கள் இதுவரையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக உயர் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

புதிய சட்டமூலம் அமுல்படுத்தப்பட்டதன் பின்னரே அப்பல்கலைக் கழகங்களுக்கான அனுமதி வழங்கப்படும் எனவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழகங்களின் தரப் பாதுகாப்பு, தகுதிசார் வேலைத் திட்டங்கள் என்பவற்றை கருத்திற் கொண்டே பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி அளிக்கப்படவுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது புதிய சட்டமூலம் அமைச்சரவை அங்கீகாரத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு 25 பல்கலைக் கழகங்களுக்கான விண்ணப்பம் கிடைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# மரண அறிவித்தல்கள்

## ஆனந்தநடராஜா ஹரீந்திரா



யாழ்ப்பாணம் பிரதான வீதியைப் பிறப்பிடமாகவும், மூத்ததம்பி வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட ஆனந்த நடராஜா ஹரீந்திரா நேற்று முன் தினம் (06.03.2011) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆனந்த நடராஜா - இரத்தினம்மாள் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ் சென்றவர்களான வைத்திலிங்கம்-மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், புஸ்பகரன்(ரமனா), ருக்மா, யமுனா (ராதா), லக்ஸ்மனா(ராஜ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி பவானி, காலஞ்சென்றவர்களான மனோகரன், யோகராசா மற்றும் சசிகலா (கலா) ஆகியோரின் அன்பு மாமனாரும், மித்திரதேவா (கனடா), உருத்திரா (கனடா), காலஞ்சென்ற ரவீந்திரா (கனடா) மற்றும் சுரேந்திரா (நெல்லியடி), இராஜகுமாரி(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான குணம், மகாலிங்கம் மற்றும் வேபி, தேவி, வவி, மைனா, இந்திரன், சின்னத்தம்பி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கவிதா (மீரா), நிறோஜினி, கஜனி, துர்க்கா, பிரகாஷ், சாலினி, ரம்மியா, டானியல் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆகாஷ் இன் அன்புப்பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நேற்று 07.03.2011 திங்கட்கிழமை பிற்பகல் 1 மணியளவில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மூத்ததம்பி லேன்,
மானிப்பாய்.
தொ.பே: 0779469753

(சி-2608)

தகவல் :
குடும்பத்தினர்

## சூசைப்பிள்ளை றேமண்ட் ஜெயப்பிரகாசம்

(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் வலிகாமம் தெற்கு, உடுவில், சமாதான நீதிவான்)



யாழ்ப்பாணம் கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும், இல 69, மடம் வீதியை வசிப்பி டமாகவும், தற்போது கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை றேமன்ட் ஜெயப்பிரகாசம் நேற்று முன்தினம் 06.03.2011 ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை (முன்னாள் அதிபர், வாழைச்சேனை) -மேரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பெனடிக்ற் மாகிறற் தம்பதியரின் அன்பு மருமகனும், மேரிதிரேசாவின் (இளைப்பாறிய உப அதிபர், யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்) அன்புக் கணவரும், கவிதா (முன்னாள் விரிவுரையாளர், விஞ்ஞான பீடம், யாழ்.பல்கலைக்கழகம்), சியாமளா (வைத்தியகலாநிதி), பிரதீபன்(பொறியியலாளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சபேசன்(பொறியியலாளர்), ரமேஸ் (பொறியியலாளர்), கேதா (கணக்காளர்) ஆகியோரின் அன்பு மாமனும், சத்தியகீர்த்தனா, சாகித்யா, கிரிஸ்ரின் அஞ்சலி, அமலி மதுரா, குளோறியா மஞ்சரி, ஜோன் பவித்திரன் ஆகியோரின் பேரனும், ராணி, புஷ்பம், தேவி, இந்திரா, மனோ, ஜெயக்கொடி, சமரம் ஆகியோரின் அருமைச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பு -08, பொரளை A.F.Raymond மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக் கப்பட்டு, கனத்தை சேமக்காலையில் 09.03.2011 புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.821/5, ஹம்டன்லேன்,
கொழும்பு -06.
தொ.பே: 0112367473
0785623360
0775833867


(சி-2607)

தகவல் :
மனைவி, பிள்ளைகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள்ளிக்காட்டு இதிகாசம்

58





**கவிப்பேரரசு வைரமுத்து**

மாட்டுச் சத்தம்-ஆட்டுச் சத்தம்-மனுசச் சத்தம்-இடிச் சத்தம்-மழைச்சத்தம்-காட கதுவாலி கழுகுச் சத்தம் மட்டுமே கேட்ட கள்ளிக்காட்டுல புதுசா ஒரு சத்தம் கேக்குது... எந்திரச் சத்தம்; ஜீப்புச் சத்தம் 'சர்ருபுர்ரு'ன்னு சத்தம் போட்டுக்கிட்டு வழியில்லாத காட்டுக்குள்ள வழியை உண்டாக்கிக்கிட்டு,சுக்கான் கல்லையும்சரளைக்கல்லையும் சில்லி முள்ளையும் டயருக்கு கீழே போட்டு நாலாவிதமா நசுக்கிப்புட்டு, கள்ளிக்காட்டுக்குள்ள வந்து நிக்கிதுக ரெண்டு மூணு ஜீப்புகளும் லாரிகளும்.

எம்மேல இப்படி ஒரு பாரம் ஏறுனதில்லையேன்னு பொசுக்குன்னு கண்ணு முழிச்சுப்பாக்குறா பூமியாத்தா. டயர் மிருகங்க போடுற சத்தம் கேட்டு நெச மிருகங்களெல்லாம் பாறையில் செதறி விழுந்து புளியவெதைகமாதிரி நாலாபக்கமும் தெறிச்சு ஒடுதுக.

கள்ளி மரத்து மறைப்புல பாறையில ஒதுங்குன உசுருக ரெண்டும் பொசுக்குன்னு எந்திரிச்சு,நீ யாரோ நான் யாரோன்னு ஆளுக்கொரு திசையில் ஒடுதுக.

"ஏ எவண்டா அவன் அரசாங்கக் காட்டுக்குள்ள அடுமாடு மேய்க்கிறது...? ஓடுங்கடா! ஓடுங்க!"

பூட்ஸ்போட்ட குழாய்க்கால் சட்டைகளும் தொப்பிகளும், ஆளுக்கும் சேத்துக் கஞ்சி போட்டது மாதிரியான வெடச்ச ஆளுகளும் தொப்புத்தொப்புன்னு குதிச்சாக ஜீப்பிலிருந்து. குதிச்ச வேகத்துல தொப்பி போட்ட ஆளுக்கு மட்டும் தொத்தப் பய ஒருத்தன் 'கொட' புடிச்சான். வந்த ஆளுகளுக்குள்ள அந்த ஆளுதான் பெரிய ஆளு போலிருக்கு.

அந்த ஆளு கறுப்புக் கண்ணாடியெடுத்து மாட்டிக்கிட்டு மேலயும் கீழயும் பாத்தாரு. அப்படியும் இப்படியும் நடந்தாரு. அவரு போற போக்குலயெல்லாம் கொடையும் போச்சு. கொள்ளத் தூரத்துல தெரிஞ்ச கரட்டைக் கையைக் காட்டிக் கையைக் காட்டிப் பேசிக்கிட்டேயிருந்தாரு. ஜீப்புல வந்த செம்மறியாடுக தலையாட்டிக்கிட்டே இருந்துச்சுக.

அவக என்ன பண்றாக ஏது பண்றாகன்னு புரியாம ஆடுமாடு மேய்க்க வந்த ஆணும் பொண்ணும் வெறிச்சு வெறிச்சுப் பாக்குதுக.

தொப்பிபோட்ட ஆளு கையில ஒரு வெள்ளத்தாள வச்சிக்கிட்டு உத்து உத்துப் பாத்து எதையோ ஒத்துப்பாத்துக்கிட்டே அலையிறாரு. திடீர்ன்னு கையக்கால ஆட்டி உத்தரவு போடுறாரு. ஆட்டுக் குடல் மாதிரி இழுக்க இழுக்க வந்திக்கிட்டே யிக்கிற ஒரு நாடாவைப் புடிச்சு ரெண்டுபயக 'தொசுக் தொசுக்'ன்னு ஓடிஆடி அளக்குறாக. அளந்த எடத்தில மலைப்பாம்பு மாதிரி நீ...ளமா சுண்ணாம்புக் கோடு போடுறாக. அந்தக் கோட்டு மேலயே விட்டுவிட்டு அடையாளத்துக்கு மொளக்குச்சி அடிக்கிறாக. மட்டக்கருவி வச்சு மட்டம் பாத்து அவுகளாப் பேசி என்னமோ எழுதுறாக. மம்பட்டியில மண்ண வெட்டச் சொல்லி உள்ளங்கையில வச்சுப் பிதுக்கிப்பாக்குறாக; நசுக்கிப் பாக்குறாக; தெள்ளிப் பாக்குறாக. தூரத்துல செந்தண்ணியா ஓடிக்கிட்டிருக்கிற வைகை ஆத்துவரைக்கும் நடந்தே போறாக. பின்னாலயே ஜீப்பும் போகுது. பொழுதுசாய வரைக்கும் அங்கேயே இருந்துட்டு வந்த வேகத்துல ஜீப்பில ஏறி சிவ்வுன்ன பறந்து போயிட்டாக.

ஊரெல்லாம் பரபரபரன்னு பரவுது அந்தச் செய்தி. ஆடு மாடு மேய்க்கப் போன ஆணும் பொண்ணும் ஒழவு மாடு கழத்திவிட்டு வந்த ஆளுகளும் ஊருக்குள்ள 'கச கச'ன்னு பேசுறாக.

ஜீப்புல வந்த சீவாத்திக யாரு? நகத்துல அழுக்கு ஒட்டாத ஆளுக கள்ளிக்காட்டுக்கு வந்த நோக்கம் என்ன? அந்தக் கரட்டையும் இந்தக் கரட்டையும் காட்டி அவுக பேசுன வெவரம் என்ன? கடைசியில அந்த ஜீப்பு எருமைக்கன்டு மாதிரி கத்திக்கிட்டே வைகையாத்து ஓடையில போயிநின்ன வெவரம் என்ன?

"அது அரசாங்க பாரஸ்ட்டுக்குப் பாத்தியப் பட்ட நெலம். கன்டு நட்டுக் காடு வளக்க வந்திருப்பாக" இது கருமாத்தூர் பெரியாம்பள கருத்து.

"என்னமோ அஞ்சாண்டுத் திட்டத்துல தொழிற்சாலை கட்டப்போறதாத் தேனிச் சந்தையில பேசிக்கிட்டாக. அதுக்கு அளந்துபாக்க வந்திருப்பாகளோ?"- இது ஆசாரி அனுமானம்.

"அதெல்லாம் இல்லப்பா. வைகையாத்து ஓடையில மழைக்காலத்துல வெள்ளம் வருதா இல்லையா பாலம் கீலம் கட்டலாம்ன்னு ஆளுக வந்திருப்பாக."- இது ரெண்டு தரப்பு வாதங்களையும் கேட்டுப் பெரிய பூசாரி சொன்ன தீர்ப்பு.

எல்லாரும் பேசி முடிக்கட்டும்ன்னு வாயில ஒரு பீடியும் பத்தவச்சு இவனுகல்லாம் கேணப்பயகங்கிறமாதிரி ஒரு சிரிப்பும் சிரிச்சு வேடிக்கை பாத்துக்கிட்டிருந்தாரு சைக்கிள் தேவர். அந்த ஊர்லயே சைக்கிள் வச்சிருக்கிற ஒரே ஆளுங்கிறதனால சன்னாசித் தேவர்ங்கிற அவரு பேரு 'சைக்கிள் தேவர்'ன்னே ஆகிப்போச்சு.

ஊருக்குள்ள அந்த ஆளு எவங்கிட்டயும் நின்னோ உக்காந்தோ பேசினதில்ல. சைக்கிள்ல உக்காந்துக்கிட்டே வலது கால்ல ஒரு பெடல் மிதிச்சு எடதுகால் பெருவிரல பூமியில ஊனி யானைமேல போற ராசா பிச்சக்காரனைப் பாத்துப் பேசறமாதிரி பேசுறதுதான் அவரு வழக்கம். ஊர்லேயே பெரிய படிப்புப் படிச்சவரு அவருதான். அதாவது அந்தக் காலத்துலயே "நாலாவது பெயிலு." தேனிக்கோ ஆண்டிபட்டிக்கோ போயித் திரும்புனா கையில பேப்பர் புடிச்சு வர்ற ஒரே ஆளு சைக்கிள் தேவர்தான். ஊர்ல அவரைத் தவிர எல்லாரும் காட்டுப் பயலுகன்னு அவருக்கு ஒரு நெனப்பு.

எல்லாரும் பேசி ஓயவும் "என்னாங்கப்பா இனி நான் பேசலாமா"ன்னாரு சைக்கிள்தேவரு. அம்பலக்கல்லுக் கூட்டமே அவருபக்கம் திரும்புச்சு.

"பாரஸ்ட்டுமில்ல... பாலமுமில்ல... நம்மளையெல்லாம் பொசுல சாம்பலடிச்சுப் போங்கடா ஊரவிட்டுன்னு சொல்லி சர்க்காரு சங்கு ஊதிருச்சுடோ"

சைக்கிள்தேவர் வெடிகுண்டத் தூக்கிப் போடவும் மூச்சுப் பேச்சு இல்லாம ஊரே நெஞ்சப்புடிச்சு நின்னுச்சு.

"ஆண்டாண்டு காலமா நாம ஆண்டு அனுபவிச்ச பூமியில அணகட்டப் போறாங்கலாமப்பா அண."

"அணையா?"

சைக்கிள்தேவர் தூக்கிப்போட்ட குண்டு படீர்னு வெடிச்சதும் அம்பலக்கல்லே ஆடி அசையக் 'குபுக்' குன்னு குதிச்சு எந்திருச்சாக கள்ளிப்பட்டி ஆளுக.

"தேக்கடி குமுளித்தண்ணி வைகையாத்து வழியா வருதா இல்லையா... அதைச் சோழவந்தான் மதுரை ராமநாதபுரத்துக்குக் குடிதண்ணிக்கும் பாசனத்துக்கும் கொண்டு போகணுமாம். அதுக்குத்தான் அங்க இங்க அலஞ்சு இதாண்டா தோதான எடம்ன்னு இங்க வந்திருக்காக அணகட்ட."

இது நெசமா பொய்யா? நாலெழுத்துப் படிச்சவன் நாந்தேன்னு காமிக்க ஊருக்கே கிறுக்குக் குத்துறானா உளறு வாயன் சைக்கிள் தேவன்? ஊர்ல ஒரு ஈகாக்கா பேசல.

"அண கட்னா நல்லதுதானப்பா. அப்படியாச்சும் இந்தப் பொட்டக்காட்டுக்கு ஒரு விடிவு காலம் பெறக்கட்டும்"-பல்லு விழுந்த கடவாயில நமத்துப் போன புகையிலையை அதக்கிக் கிட்டே பெரும் போக்காப் பேசுச்சு தும்மக்குண்டு பெருசு.

"ஆமாப்பா... பெருசு சொல்றதுலயும் ஒரு அர்த்தம் இருக்குல்ல. இனியாச்சும் காடுகரைக நல்லா வெளையுமில்ல"


முள்ளுக்காட்ல அஞ்சாறு ஏக்கர் சரளைக்காடு வச்சிருக்கிற செவத்தவீரன் உச்சிகுளுந்து போனார்.

"அங்கங்க அலைய வேணாம்! மாடுகன்டுக தம்போக்குல தண்ணிகுடிச்சுக்கிருங்க"-செம்பட்டை கவலை தீந்துச்சு.

"நல்லாதாப் போச்சப்பா. இனி வங்கோடையிலும் வத்தாது கெணறு. அணையில தண்ணி தேங்குனா- கெணத்துக்கு உள் ஊத்துக் கெடைக்குமில்ல"

மாடு கன்ட வித்து, வீட்டுத் தகரத்தப் பிரிச்சு வித்து கெணறு வெட்டித் தவிச்சுப் போன பித்துக்காலுப் பெருமாளு பூத்துப் பூரிச்சுப் போனாரு.

*(வளரும்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பாடசாலை அதிபர் திருமதி அ.த.துரைசிங்கம் உரையாற்றுவதையும் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட யாழ்.மாவட்ட நீதிபதி ஆர்.வசந்தசேனன் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

# சிறிலங்கா எயார்லைன்ஸ் நிறுவனத்தால் ரொறன்டோவுக்கான விமான சேவை

(கொழும்பு)

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் முதன் முறையாக ரொறன்டோவுக்கான விமான சேவை ஒன்றினை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதல் அறிமுகப் படுத்தவுள்ளது. இந்தச் சேவை லண்டன் கித்துரூ விமான நிலையத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் என விமானத்துறை அமைச்சர் பிரியங்கா ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இதனை வாரத்திற்கு 7 முறை மேற் கொள்ள திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். ரொறன்டோ மற்றும் லண்டனில் உள்ளவர்கள் கொழும்புடன் தொடர்பினை அதிக அளவில் வைத்திருப்பதன் காரணமாக இந்த சேவையினை வெற்றிகரமாக மேற் கொள்ள முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இது தவிர எதிர்வரும் சில மாதங்களில் லண்டன் கித்துரூவுடனான விமான சேவை வாரத்திற்கு 21 சேவைகளை நடத்த திட்ட மிட்டுள்ள தாகவும் அவர் தெரிவித்தார். தற் போது கொழும்பு- லண்டனுக்கு இடையே வாரம் 14 சேவைகளே மேற்கொள்ளப் படுவதா கவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இந்த மாதம் தொடக்கம் கராச்சி, பஹ்ரேன், டோகா மற்றும் மஸ்கட் ஆகிய இடங்களுக்கு இடையேயான சேவை யினையும் மேம் படுத்த திட் டமிடப்பட்டுள்ளது. இது தவிர கொச்சினுடானான சேவையினை வாரத்தில் 7 நாட்களுக்கும் நடத்த திட்டமிட் டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-2)

# வேட்பாளர்கள் தபால்மூல வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லத்தடை

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலை முன்னிட்டு தபால் மூல வாக்குகளை பதிவு செய்யும் மத்திய நிலையங்களுக்கு இந்த முறை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் செல்ல முடியாது என தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

அரசியல் கட்சிகளின் செயலாளர்களின் அனுமதியுடன் ஒரு பிரதிநிதி மட்டுமே குறித்த வாக்கு பதிவு செய்யும் மத்திய நிலையங்களுக்கு செல்ல முடியும் என தேர்தல்கள் செயலகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அதற்கு மேலதிகமாக பவ்ரல் அமைப்பு தேர்தல் வன்முறைகளை கண் காணிக்கும் பணிகளை மேற்கொள்ள முடியும் என அவர் அறிவித்துள்ளார்.

இதேவேளை மத்திய நிலையங்களில் குழப்பநிலை தோன்றினாலோ அல்லது முறைகேடான சம்பவங்கள் ஏதாவது இடம் பெறும் தருணத்தில் தேர்தல்கள் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் அனுப்பி வைக் கப்படுவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பான தபால் மூல மான வாக்களிப்பு பதிவுகள் இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளன.

இதேவேளை தேர்தல்களில் போட்டியிடுப வர்களுக்கான அடையாள அட்டைகள் அடுத்த வாரமளவில் விநியோகிக்க நடவடிக்கைகள் எடுக் கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

# லிபியாவில் இடம்பெற்ற விபத்தில் இலங்கையர் பலி

லிபியாவில் இடம்பெற்ற விபத்துச் சம்பவமொன்றில் இலங்கையர் ஒருவர் கொல்லப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலைத் தளத்தில் ஏற்பட்ட விபத்துச் சம்பவத்தில் குறித்த நபர் உயிரிழந்திருப்பதாக அந்நாட்டுக்கான இலங்கைத் தூதுவர் சுதந்த கனேக மாராச்சி தெரிவித்துளார்.

லிபியாவில் தற்போது நிலவிவரும் அரசியல் முறுகல் நிலைமையினால் சடலத்தை நாட்டுக்கு கொண்டு வருவதில் சிக்கல் நிலைமை காணப்படுவதாக குறிப்பிடப்படுகிறது. எவ்வாறெனினும் சம்பவத்தில் உயிரிழந்தவரின் சடலத்தை வெகு விரைவில் அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தூதரகம் அறிவித்துள்ளது.

உயிரிழந்த நபர் வத்தளை மஹாபகே பிரதேசத்தை சேர்ந்தவர் எனக்குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

# 2011.03 08 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1618 - ஜொஹான்னெஸ் கெப்லர் கோள்களின் இயக்கங்களுக்கான மூன்றாவது விதியைக் கண்டுபிடித்தார்.

★ 1761 - வடக்கு லண்டனில் ஹாம்ப்ஸ்டட் நகரில் நிலநடுக்கம் பதியப்பட்டது.

★ 1782 - ஐக்கிய அமெரிக்காவின் ஒகைய் யோ மாநிலத்தில் கிறிஸ்தவத்துக்கு மதம் மாறிய 90 அமெரிக்க இந்தியப் பழங்குடிகள் பென்சில்வேனியாவின் துணை இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர். கொல்லப்பட்டவர்களில் 68 பேர் குழந்தைகளும் பெண்களுமாவர்.

★ 1817 - நியூயோர்க் பங்குச் சந்தை நிறுவனமயப்படுத்தப்பட்டது.

★ 1906 - பிலிப்பைன்சில் அமெரிக்கத் துருப்புக்களால் ஏறத்தாழ 600 ஏதிலிகள் படுகொலை செய்யப்பட்டனர்.

★ 1911 - சர்வதேச மகளிர் தினம் முதன் முதலாக டென்மார்க்கில் கொண்டாடப்பட்டது.

★ 1917 - ரஷ்யாவில் பெப்ரவரிப் புரட்சி (பெப்ரவரி 13 - பழைய நாட்காட்டியில்) ஆரம்பம்.

★ 1921 - ஸ்பெயின் பிரதமர் எடுவார்டோ டாட்டோ மாட்ரிட்டில் நாடாளுமன்றத்தை விட்டு வெளியேறும்போது சுட்டுக் கொல்லப்பட்டார்.

★ 1924 - யூட்டாவில் நிலக்கரிச் சுரங்கம் ஒன்றில் இடம்பெற்ற விபத்தில் 172 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1942 - இரண்டாம் உலகப் போர்: ஜாவாவில் ஜப்பானியப் படைகளிடம் டச்சுப் படைகள் சரணடைந்தனர்.

★ 1942 - இரண்டாம் உலகப் போர்: பர்மாவின் ரங்கூன் நகரை ஜப்பான் கைப்பற்றியது.

★ 1950 - சோவியத் ஒன்றியம் தன்னிடம் அணுக்குண்டு இருப்பதாக அறிவித்தது.

★ 1957 - எகிப்து சூயஸ் கால்வாயை மீண்டும் திறந்தது.

★ 1965 - வியட்நாம் போர்: 3ஆயிரத்து 500 அமெரிக்கப் படைகள் தென் வியட் நாமில் தரையிறங்கினர்.

## பிறப்புகள்

★ 1879 - ஒஒட்டோ ஹான், நோபல் பரிசு பெற்றவர் (இ.1968)

★ 1886 - எட்வர்ட் கெண்டல், நோபல் பரிசு பெற்றவர் (இ.1972)


★ 1908 - பாலகங்காதர திலகர், இந்திய விடுதலைப் போராட்ட வீரர்

## இறப்புகள்

★ 1923 - ஜொஹானஸ் வான் டர் வால்ஸ், நோபல் பரிசு பெற்றவர் (பி.1837)

★ 2004 - அபூ அப்பாஸ், பாலஸ்தீன விடுதலை முன்னணி தாபகர் (பி.1948)

**1922 - சுன்னாகம் அ.குமாரசாமிப் புலவர், ஈழத்துப் புலவர் (பி. 1854)**





யாழ். அரிமாகழகத்துக்கும் கனரகத்தினம் மத்திய மகாவித்தியாலயத்துக்கும் இடையிலான மென்பந்துப்போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட லயன் ஜெயவக்சலன் MJF, சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட லயன் ரஞ்சன், தொழிலதிபர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் ஆகியோருடன் வீரர்கள் நிற்பதை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரணாலயங்களில் மிருகங்களை வேட்டையாடுவதை தடுக்க நடவடிக்கை

சரணாலயங்களில் மிருகங்களை வேட்டையாடுவதை தடுக்க வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த நடவடிக்கையினை மேலும் திறம் பட மேற்கொள்ளும் வகையில் புதிதாக அதிகாரிகளைச் சேர்த்துக் கொள்வதற்கு திணைக்களம் தீர்மா னித்துள்ளது.

புதிதாக சேர்த்துக் கொள்ளப்படும் அதி காரிகளைப் பயன்படுத்தி சரணா லயங்களில் மிருகங்களை வேட்டையாடும் மற்றும் சட்ட விரோத செயல் களில் ஈடுபடுவோரை கைது செய்யத் திட்டமிட்டுள்ளதாக வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் டாக்டர் சந்திரவன்ச பத்திராஜா தெரி வித்தார்.

இந்த நடவடிக்கைகளுக்கு போதுமான அதிகாரிகள் வன ஜீவராசிகள் திணைக்களத் தில் தற்பொழுது இல்லை எனவும் சுட்டிக் காட் டப்பட்டுள்ளது.

இதற்கமைய திணைக்களத்தின் அனைத்து பிரிவுகளுக்குமான அதிகாரிகள் புதிதாக சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதற்காக ஏற்கனவே திறைசேரி அனுமதி வழங்கியுள்ளதாக வன ஜீவ ராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மேலும் கூறியுள்ளார். (ஶ்ரீ-9)

# இலங்கைக்கு பிரவேசிக்க முயன்ற தீவிரவாதிகள் நாடு கடத்தல்

(கொழும்பு)

இலங்கைக்குள் பிரவேசிக்க முற்பட்ட லக்ஷர் ஈ தொய்பா தீவிரவாதிகள் நாடு கடத் தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாலைதீவு பிரஜை ஒருவரே இவ்வாறு நாடு கடத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படு கிறது.

கொழும்பு பண்டாரநாயக்க விமான நிலையத்தின் ஊடாக நாட்டிற்குள் பிரவே சிக்க இந்தத் தீவிரவாதி முயற்சி மேற் கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

31 வயதான அஹமட் அலி மற்றும் அவ ரது மனைவி ஆகியோர் இலங்கைக்குள் பிரவேசிக்க முயற்சித்ததாகக் குறிப்பிடப் படு கிறது.

குறித்த நபர் லக்ஷர் ஈ தொய்பா தீவிர வாதி அமைப்பில் ஆயுத பயிற்சி பெற்றுக் கொண்டவர் என விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

தேனிலவைக் கழிப்பதற்காக இலங்கைக் குள் பிரவேசிப்பதாக அவர்கள் தெரிவித்த போதிலும் புலனாய்வுப் பிரிவினர் இதனை ஏற்றுக்கொள்ளவில்லையெனவும் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்று வரு கின்ற காரணத்தினால் நாட்டிற்குள் பிர வேசிக் கும் நபர்கள் தொடர்பில் புலனாய்வுப் பிரிவி னர் கூடுதல் எச்சரிக்கையுடன் கண்காணித்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. (ஶ்ரீ-2)

# சன் சீ கப்பல் அகதிகள் பலருக்கு புகலிடம் வழங்கப்படும் சாத்தியம்

(கொழும்பு)

எம்.வி.சன் சீ கப்பலில் கனடாவுக்கு சென்ற புகலிடக் கோரிக்கையாளர்களில் பல ருக்கு புகலிடம் வழங்கப்படக்கூடிய சாத்தி யம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த கப்பலில் பயணம் செய்தவர்கள் புலிகளுடன் தொடர்புகளைப் பேணியதாக நிரூபிப்பதில் சிக்கல் காணப்படுவதாக அந் நாட்டு குடிவரவு - குடியகல்வு திணைக்கள அதி காரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் குறித்த கப்பல் பயணிகளை மீளவும் சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்பி வைக்க முடியாத நிலைமை ஏற்படும் என தெரி வித்துள்ளார். புகலிடக் கோரிக்கையாளங்க ளுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்குகளில் கனேடிய மத்திய அரசாங்கத்திற்கு பாதக மான நிலைமையே காணப்படுவதாகக் குறிப் பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் அங்கம் வகித்தமைக்கான வலுவான ஆதா ரங்கள் சமர்ப்பிக்கப்படாத பட்சத்தில் எவரை யும் நாடு கடத்த முடியாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ஶ்ரீ-2)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நல்லையம்பதி ஶ்ரீமத் நல்லை நாயகி சமேத ஶ்ரீ நல்லை நாத சுவாமி (சட்டநாதர் பெருமாள்) ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகி 9 தினங்கள் உற்சவம் நடைபெறவுள் ளது.

இம் மஹோற்சவத்தில் எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் சனிக்கிழமை காலை 10 மணிக்கும் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (ஶ்ரீ-9)

# புத்தளத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் சிறுவன்பலி

(கொழும்பு)

புத்தளத்தில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் 7 வயதுச் சிறு வனொருவன் சம்பவ இடத்தில் பலியாகி யுள்ளான்.

இவ் விபத்தில் குறித்த சிறுவனின் தந்தை மற்றும் 3 வயதான சகோதரி ஆகியோர் காய மடைந்துள்ள நிலையில் புத்தளம் வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளத்தில் தனியார் பஸ்ஸொன்றும் மோட்டார் சைக்கிளொன்றும் ஒன்றுட னொன்று மோதிக்கொண்டதாலேயே இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஞாயிற்றுக்கிழமையில் இடம்பெறுகின்ற பாடசாலைக்கு இந்த மூவரும் சென்று கொண் டிருந்தபோதே இவ் விபத்துச் சம்பவம் இடம் பெற்றதாகவும் விபத்து இடம்பெற்ற வேளை யில் கற்பிட்டிக்கும் புத்தளத்திற்கும் இடையி லான கரம்ப என்னும் இடத்தில் நேற்று முன் தினம் காலை 7.30 மணியளவில் போக்கு வரத்து நெரிசல் காணப்பட்டதாகவும் பொலி ஸார் தெரிவித்தார்.

குறித்த தனியார் பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாகவும் புத்தளம் பொலி ஸார் குறிப்பிட்டனர். (ஶ்ரீ-2)

# தற்காலிக அடையாள அட்டை பெறுவதற்கான கால எல்லை நீடிப்பு

(கொழும்பு)

செல்லுபடியான அடையாள அட்டை இல் லாத வாக்காளர்கள் தற்காலிக அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்வதற்கான கால எல்லையை எதிர்வரும் 10ஆம் திகதி வரை தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க நீடித்துள்ளார்.

முன்னர் கடந்த 5ஆம் திகதியுடன் இக் கால எல்லை முடிவடையும் என அறிவிக்கப் பட்டிருந்தது.

வடக்கில் பெரும் எண்ணிக்கையான வாக் காளர்கள் செல்லுபடியான அடையாள அட்டை இல்லாதிருப்பதால் இந்த கால எல் லையை நீடிக்குமாறு பவ்ரல் அமைப்பு கோரி யிருந்தது.

தேசிய அடையாள அட்டை, சாரதி அனு மதிப்பத்திரம், கடவுச்சீட்டுகள் என்பன செல் லுபடியான அடையாள அட்டைகளாகும். இத் தகைய அடையாள அட்டைகள் எதுவுமில் லாத வாக்காளர்கள் தற்காலிக அடையாள அட்டை பெற வேண்டும் என அறிவிக்கப் பட்டுள்ளது. (ஶ்ரீ-2)

# செய்மதி தொழில்நுட்பம்மூலம் தனியார் பஸ்கள் கண்காணிப்பு

(கொழும்பு)

தனியார் பஸ் சாரதிகளின் தவறுகளைக் கண்காணிப்பதற்கும் கட்டுப்படுத்தவதற்கும் செய்மதி தொழில்நுட்பம் பயன்படுத்தப்படு வதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கமைய அதி வேகமாக பயணம் செய்யும் பஸ்களையும் ஏற்றுக்கொள்ள முடியாதளவு மெதுவாக பயணம் செய்யும் பஸ்களையும் தரிப்பிடங்களைப் புறக்கணிக் கும் பஸ்கள் மற்றும் நீண்ட நேரமாக தரிப் பிடத்தில் நிற்கும் பஸ்களையும் கண்டறிவ தற்கு ஏற்கனவே ஜி.பி.எஸ். கருவிகள் பயன் படுத்தப்பட்டு வருவதாக அரசாங்க தகவல் திணைக்களம் மூலம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் மேற்படி ஆணைக்குழு தெரிவித் துள்ளது.

பஸ்களின் நகர்வுகள் கண்காணிப்பு நிலையங்களில் உள்ள டிஜிட்டல் திரைகளில் காண்பிக்கப்படும். தவறு இழைக்கும் சாரதி கள் உடனடியாக செய்மதி தொலைபேசி மூலம் எச்சரிக்கப்படுவர் என தேசிய போக்கு வரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொழும்புக்கும் தென்பகுதியில் உள்ள பல நகரங்களுக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் 70 பஸ்கள் ஏற்கனவே இந்த கண் காணிப்பில் உள்ளதாகவும் அடுத்து வரும் முதல் நீண்ட தூர பஸ்களும் இத்திட்டத்தின் உள்ளடக்கப்படும் எனவும் அவ் அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஶ்ரீ-2)

# மார்ச் 23 முதல் 29 வரை டெங்கு ஒழிப்பு வாரம்

(கொழும்பு)

டெங்கு நோய் பரவலை தடுக்கும் வகை யில் டெங்கு நோய் தடுப்பு வாரம் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் 23ஆம் திகதியிலிருந்து 29ஆம் திகதி வரை இந்த டெங்கு ஒழிப்பு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக சுகா தார அமைச்சு தெரிவித்துள்ளது.

டெங்கு நோய் பரவல் அதிகரித்துச் செல் வதன் காரணமாகவே இவ்வாறு டெங்கு ஒழிப்பு வாரம் பிரகடனப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டதாக சுகாதார அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் இந்த வருடத்தில் முதல் இரண்டு மாதங்களில் டெங்கு நோய் தொற்றுக் காரணமாக ஆயிரத்து 894 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களில் 18 பேர் பலியாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படு கிறது.

இதனிடையே கடந்த ஜனவரி மாதத் தைக் காட்டிலும் பெப்ரவரி மாதத்திலேயே அதி களவான டெங்குத் தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் அறிக்கையின் படி கடந்த மாதத்தில் மாத்திரம் 990 பேர் பாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த மாதத்தில் கொழும்பு, கம்பஹா,புத்தளம் ஆகிய மாவட்டங்களி லேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக குறிப்பிடப் படுகிறது. (ஶ்ரீ-2)



அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற மாணவர் முதல்வர்களுக்கான சின்னஞ்சூட்டும் விழாவில் பிரதம விருந்தி னராக கலந்துகொண்ட தெல்லிப்பழை கல்விக் கோட்ட கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் மாணவ முதல்வர் ஒருவருக்கு சின்னஞ் சூட்டு வதையும் அருகில் பகுதித் தலைவர்களான திருமதி சா.ஶ்ரீலவன், திருமதி ஜீ.சிறிதரன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு எதிரான ஜோசியத்தைப் பொய்யாக்குங்கள்!

தெருவோர பிச்சைக்காரனைப் பாருங்கள் துருத்திய எலும்புடன் அசைய முடியாமல் ஒய்ந்து படுத்திருப்பான். அடுத்த பிச்சைக்காரன் இவன் இடத்தில் வந்து உட்கார்ந்து விட்டால், காச்மூச் என்று கத்தி, சண்டை போடுவான்.

இது எதனால்? உடலிலும், மனதிலும் வலு இல்லாதவர்களுக்குக்கூட கோபமோ, வெறுப்போ, ஆத்திரமோ முழு வேகத்துடன் வெளிப்படுகிறது. தன் சக்தியைச் சரிவரப் பயன்படுத்திக் கொள்ளத்தெரியாத மனிதனுக்கு உணர்ச்சிவசப்படுவது மட்டுமே சுலபமாகச் சாத்தியப்படுகிறது.

அதனால்தான், பல நூறு மைல்களுக்கு அப்பால் உள்ளதைக் கைப்பற்ற ஆசைப்படும் பெரும் பாலான மனிதர்களுக்கு அடுத்த மூன்று அடிகளைத் தாண்டி யோசிக்கத் தெரிவதில்லை. திட்டமிட்டுத் திறமைகளைப் பயன்படுத்தத் தெரியவில்லை. எடுத்ததற்கெல்லாம் அச்சம் கொள்வார்கள். ஒவ்வொரு அடியையும் சந்தேகத்துடன் எடுத்து வைப்பார்கள்.

உணர்ச்சிவசப்படுவதில் இருக்கும் தீவிரம், வலுவான எண்ணங்களை உருவாக்கிக்கொள்வதில் அவர்களுக்குக் கிடையாது. அதனால், வெற்றியை நினைக்கும் போதெல்லாம், கூடவே தோல்விபற்றிய சந்தேகமும் அலை மோதுகிறது. நசிகேதனைப்பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். ஐந்து வயதான போதே மரணத்தைப்பற்றி அறிந்து கொள்ளும் ஆர்வம் அவனுக்கு வந்து விட்டது.

மரணத்தின் தலைவன் எமன் என்பதைப் புரிந்துகொண்டு, அவன் இருப்பிடத்தின் வாசலில், போய் அமர்ந்தான். எமன் வந்தான். சாப்பாடு , தண்ணீர் இல்லாமல் ஒரு சிறுவன் பலநாட்களாக அங்கே அமர்ந்திருப்பது கண்டு, நெகிழ்ந்தவன், "என்ன வரம் வேண்டுமோ கேள்!"என்றான்.

"மரணத்துக்குப்பிறகு என்ன நடக்கும்? அதை அறிந்து கொள்ள வேண்டும்" என்றான் நசிகேதன். "தேவர்களுக்குத் தருவதெல்லாம் தருகிறேன் வேறென்ன வேண்டுமோ, கேள்தருகிறேன்.ஆனால், மரணத்தைப்பற்றி மட்டும் கேட்காதே" என்று சொன்னான் எமன். நசிகேதன் மசியவில்லை நசிகேத னைத் தவிர்ப்பதற்காக எமன் பல மாதங்கள் தன் இருப்பிடத்திற்கே திரும்பாமல்கூட இருந்து பார்த்தான். சிறுவன்தானே, எப்படியும் பசிதாங்காமல் புறப்பட்டுப் போய்விடுவான் என்று எமனுக்கு நம்பிக்கை. நீண்டகாலம் கழித்துத் திரும்பிவந்து பார்த்தால், நசிகேதன் அதேஇடத்தில் பசி, தூக்கம் பாராமல் காத்திருந்தான். எமன் திகைத்தான்.

"தேவர்களுக்கும், கடவுள்களுக்கும் கூடத்தெரியாத இரகசியம் அது. நீ ஐந்து வயதுப்பாலகன். அதை உனக்கு எப்படிச் சொல்ல முடியும்?" என்றான் எமன். ஆனால், விடை தெரிந்து கொள்ளாமல் போவ தில்லை என்ற தீர்மானத்தோடு நசிகேதன் அங்கேயே விடாப்பிடி யாக நின்றான். அவனுடைய எண்ணத்தின் தீவிரம் காரணமாக, எமன் உலகத்தின் வாசலிலேயே அவனுக்கு ஞானம் கிடைத்து விட்டது. அவன் தெரிந்து கொள்ள வேண்டிய அனைத்தையும் அங்கேயே தெரிந்து கொண்டுவிட்டான்.

கடைசிவரை எமன் பதில்சொல்லாமல் போய்விடுவானோ என்று அந்த ஐந்து வயது பாலகனுக்கு சந்தேகம் வரவில்லை. அவனிடமிருந்த தீவிரம் உங்களிடம் இல்லாததால்தான் அச்சமும், சந்தேகமும் கூடவே வருகின்றன. எண்ணங்களால் ஆட்டுவிக்கப்படுகிறீர்கள். ஆனால், அவற்றை எப்படிக் கையாள்வது என்று தெரியாமல் தவிக்கிறீர்கள். உங்கள் மீது நம்பிக்கை இல்லாத போதுதான் முடிவைப்பற்றிய கவலை வருகிறது.

எதைத் திட்டமிட்டாலும் அது நிறைவேறுமா என்ற சந்தேகமும் கூடவே துரத்துகிறது. அதற்காக ஜாதகங்களைத் தூக்கிக் கொண்டு ஜோசியர்களிடம் போகிறீர்கள். நாள், நட்சத்திரம் சரியாக இல்லை என்று ஆசைகளைத் தள்ளிப் போடுகிறீர்கள்.

கிருஷ்ணதேவராயர் ஒரு முறை எதிரியைத் தாக்கப் படையோடு புறப்பட்டுப்போனார். ஒர் ஆற்றங்கரையைக் கடக்க வேண்டிய நேரத்தில், அரசவை ஜோசியர், "மன்னா,இன்றைக்கு நாள் நன்றாக இல்லை.அடுத்த திங்கட்கிழமை போருக்குப் போனால் வெற்றி நிச்சயம்" என்று சொன்னார். கிருஷ்ண தேவராயர் குழம்பினார். அவ்வளவு நாட்கள் கொடுத்தால், எதிரி உசாராகி விடுவான் அவன் எதிர்பாராத நேரத்தில் உடனே தாக்கினால்தான் வெற்றி. ஆனால், ஜோசியர் சொன்னபின் சந்தேகம் வந்துவிட்டது. தெனாலிராமனிடம் ஆலோசனை கேட்டார்.

தெனாலிராமன் ஜோசியரை அழைத்தான். "எல்லோருக்கும் ஆரூடம் சொல்கிறீர்களே நீங்கள் இன்னும் எத்தனை வருடம் உயிரோடு இருப்பீர்கள் என்று சொல்லமுடியுமா" என்று கேட்டான். "இன்னும் இருபது வருடங்கள் வாழந்திருப்பேன்" என்றார் ஜோசியர்.

தெனாலிராமன் சடக்கென்று வாழை உருவி அவர்கழுத்தில் பதித்து, "இந்த வினாடியே உங்கள் ஆரூடத்தை என்னால் பொய்யாக்கமுடியுமா முடியாதா?" என்று கேட்டான். ஜோசியரின் விழிகள் அச்சத்தில் பிதுங்கின. "முடியும்... முடியும்" என்று அலறினார் "அவ்வளவுதான் மன்னா ஜோசியம்! உங்களுக்கு எதிரான எந்த ஜோசியத்தையும் உங்களால் பொய்யாக்க முடியும் " என்று புன்னகைத்தான் தெனாலிராமன்.



ஆன்மீகம் 38

கிருஷ்ணதேவராயர் ஆற்றைக் கடந்தார். எதிரியை வெற்றி கொண்டார். நீங்கள் தீர்மானமாக இருந்தால், கோள்களால் உங்களை எதுவும் செய்ய முடியாது.

வீண் சந்தேகங்களை விலக்கி, உங்கள் மீது நம்பிக்கை வைத்துத் திறமைகளை வளர்த்துக் கொள்ளுங்குள். முழுமையான ஈடுபாட்டுடன் செயற்படுங்கள். தானாகக் கனிந்து வரும் வெற்றிகனி!

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# தமிழ் நாவல்கள் சில நோக்கங்கள்

03



1893 ஆம் ஆண்டு தமிழின் இரண்டாவது நாவல் என்று கொள்ளத்தக்க "கமலாம்பாள் சரித்திரம்" வெளி வந்தது. அதனை பீ. ஆர். ராஜாமையர் எழுதி வெளியிட்டார். வேத நாயகம் பிள்ளைக்குப் பிறகு ஒரு மேதையைக் காண்பதற்குத் தமிழர்கள் பத்தாண்டு காலம் தவமியற்ற வேண்டியிருந்தது என்கிறார் டாக்டர் இரா. தண்டாயுதம். பிரதாப முதலியார் சரித்திரங்களுக்கும் கமலாம்பாள் சரித்திரத்துக்குமிடையில் தமிழ் நாவலின் இலக்கியப்போக்கில் ஒரு வீழ்ச்சி காணப்பட்டது. இக்கால கட்டத்தில் நாவல்கள் என்ற பெயரில் ஏராளமான நூல்கள் வெளிவந்தன. யதார்த்தப் பண்பில்லாத வினோத வியப்புக்கதைகளாக அவை அமைந்தன. மாயாஜாலக் கதைகளாகவும் மன்னரைத் தலைமைப் பாத்திரமாகவும் கொண்ட கதைகளாகவும் அமைந்தன.

**"கொழும்பில் நடைபெற்ற சர்வ தேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

ஈழத்தமிழ் நாவல் இலக்கியத்தி லும் இக்காலகட்டத்தில் அத்தன்மைகள் காணப்பட்டன. முகம்மதுகாசிம் சித்திலெப்பையின் அசன் பேயுடைய கதை (1885), எஸ். இன்னாசித்தம்பியின் ஊசோன்பா லந்தை கதை (1881), என்பவை அவ்வாறனவை. தமிழகத்தில் வெளிவந்த சந்திரகௌசிகன், சின்மணிகதை, சத்தியாம்பாள் கதை, அடிமைப்பெண், அரசியும் பையனும், அன்பின் கதை, இளைய அந்தணன், கெடுவான் கேடுநினைப்பான் என நூற்றுக்கணக்கானவை வெளிவந்து தமிழகத்தை நிரப்பின. ஏராளமானவை மொழிபெயர்ப்புக் கதைகளாக அவற்றில் இருந்தன. இவற்றையெல்லாம் படித்துப் படித்துக் களைத்துப் போயிருந்த தமிழ் மக்களுக்கு ராஜாமையரின் கமலாம்பாள் சரித்திரத்தின் வருகை புது நீர் பாய்ச்சியது.

மாதவையா என்பவரின் வருகையோடு தமிழ் நாவலிலக்கியம் புதியதொரு அரங்கில் பிரவேசித்தது. சமுதாயளத்தைப் படம் பிடிப்பதில் மாதவையா அவருக்கு முன்னைய இரு நாவலாசிரியர்களின் அடியொற்றி தன் நாவல்களில் தன் திறனை வெளியிட்டார். தனது நாவல்களில் சமுதாய சீர்திருத்தவாதியாக அவர்தொழிற்பட்டார். இலக்கியம் சமூக அநீதிகளை எதிர்ப்பதற்கு குரல் கொடுக்க முடியும் என்பதைத் தன் எழுத்துக்கள் மூலம் நிரூபித்தார். சாதிய அநீதிகளையும் ஆங்கில மொழி மோகத்தையும் கண்டித்துத் தனது நாவல்களில் எழுதினார். அ. மாதவையா மூன்று நாவல்களை எழுதினார். பத்மாவதி சரித்திரம், விஜய மார்த்தாண்டம், முத்து மீனாட்சி என்பவை அவையாம். அ. மாதவையாவை தமிழ் நாவல் உலகம் பத்மாவதி சரித்திரத்திற்காக போற்றுகிறது.

1900 ஆம் ஆண்டு பண்டிதர் ச.ம. நடேசசாஸ்திரி "தீனதயாளு" என்றொரு நாவலை வெளியிட்டு தமிழ் நாவலுலகில் ஒருவித பரபரப்பை ஏற்படுத்தினார். தீனதயாளு என்ற ஒர் அந்தண இளைஞனின் வாழ்க்கையைச் சுற்றி இந்த நாவல் நடக்கின்றது. பிராமணக் கூட்டுக் குடும்பம் ஒன்றின் குறைநிறைகளை இந்நாவலில் ஆசிரியர் இயல்பாக விபரிக்கின்றார். பாத்திரங்களின் பெயர்கள் அவற்றின் குண இயல்புகளுக்கேற்ப இடப்பட்டுள்ளன. ஸ்வதேசமித்திரன் என்ற புனைபெயரில் இந்நாவலை முதலில் எழுதியமையாலும் பாத்திரங்கள் நிஜ வாழ்வில் வாழ்பவர்களாக அமைந்தமையாலும் இவ்வாறான பெயர் மறை ப்பு அவசியமாகி இருக்கும். எவ்வாறாயினும் நாவலில் பாத்திரங்களின் வளர்சி நிலையில் அப்பெயர்கள் தடையாகவுள்ளன. நடேசசாஸ்திரி தீனதயாளுவுடன், கோமளம் குமரியானது (1902), திக்கற்ற இரு குழந்தைகள் (1902) எனும் இரு நாவல்களை எழுதியுள்ளார். இவை தமிழ் நாவல் இலக்கியத்தக்குப் பெருமை சேர்ப்பனவாகா.


வேதநாயகம்பிள்ளை காலத்தில் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், வேறும் பலர் நாவலாக்க முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் என அறியக் கிடைக்கின்றது. பரிதிமாற்கலைஞர் எனப்படும் சூரியநாராயணசாஸ்திரியார், தமிழில் நாவல் எழுதுவதற்கு நமது தமிழ் அறிஞர் சி.வை.தாமோதரம்பிள்ளையால் ஊக்குவிக்கப்பட்டுள்ளார். மதிவாணன், புதுவது புனைந்தோர்,செந்தமிழ்க் கதை என்பன அவரின் நாவல்களாம்.மதிவாணன் நாவலின் நடை பண்டிதத் தமிழில் உள்ளது. இந்நாவலில் காவிய மரபு மீறப்படவில்லை. இதனை அடுத்து நடராஜ ஐயரின் ஞானபூசணி, வி.ஏ. கோபால கிருஷ்ணரின் குணசீலன் என்பன வெளிவந்தன. இலங்கையில் அக்காலகட்டத்தில் த. கைலாசபிள்ளையின் இன்பவதி (1902), சுவாமி சரவணமுத்துவின் கமலாவதி(1904), சி.வை. சின்னப்பா பிள்ளையின் வீர சிங்கன் (1905) முதலான படைப்புக்கள் வெளிவந்தன.

**கலாநிதி செங்கைஆழியான் க.குணராசா**

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் தமது அபிலாசைகளை வென்றெடுக்கும் வகையில் வலுவடைய வேண்டும்




19 ஆம் 20 ஆம் நூற்றாண்டுகளில் உலகப் பெண்கள் பலர், பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுத்திருந்தனர். இவ்வகையில் 1857 இல் நியூயோர்க்கில் மார்ச் 8 ஆம் திகதி நெச வாலைப் பெண் தொழிலாளர்கள் ஒன்று பட்டு 10 மணி நேரவேலை, ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம ஊதியம் என்ற கோரிக்கைகளை முன்வைத்துப் போராடினர்.

பெண்கள் ஒற்றுமைப்பட்டு எழுச்சி பெற்ற இந்த நாளை நினைவு கூர்ந்து சர்வதேச மகளிர் தினமாக கொண்டாட வேண்டும் என்று 1910 இல் ஜேர்மன் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவரான கிளாரா செட்கின் அம்மையார் வேண்டுகோள் விடுத்தார்.

இதற்கமைய 1911 இல் இருந்து பெண்களுக்கு எதிரான சகல ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும் போராட பெண்களை அணிதிரட்டும் நாளாக ஓர் எழுச்சி நாளாக மார்ச் 8 ஆம் திகதி கொண்டாடப்பட்டு வருகின்றது.

தமிழர் தாயகத்திலும் சமூக ஒடுக்குமுறைகள், பண்பாட்டு ரீதியான ஒடுக்குமுறைகளுடன் தேசிய ஒடுக்குமுறைகளுக்கும் பெண்கள் உள்ளாகி வந்தனர். இதனால் விழிப்படைந்த பெண்கள் பல அமைப்புக்களை உருவாக்கி செயற்பட்டனர். இவ்வகையில் தமிழர் தாயகத்தில் படிப்படியாக பல பெண்கள் வலு உடையவர்களாக மாறி வந்த வரலாறு எமக்கு உண்டும். உலகப் பெரும் பரப்பில் தமிழர் தாயகம் பற்றிய செய்திகள் பேசு பொருளாக வந்ததற்கு தாயகப் பெண்களின் எழுச்சி முக்கிய காரணமாயிற்று.

ஆனால், இன்று சாப்பிடுவதற்கு மட்டும் வாய்திறக்கும் நிலையில் முழுத்தமிழ்ச்சமூகமும் ஒடுங்கிப் போயுள்ளது. அச்சத்தில் உறைந்து போய் உள்ளது. அதிலும் பெண்களின் நிலை மேலும் வலுக்குன்றிய நிலையே.

பண்பாட்டுச் சீரழிவுகள் மலிந்து போயுள்ளன. பண்பாட்டுச்சீரழிவுகளைக் கண்டு பெற்றோர், ஆசிரியர்கள் பயப்படும் நிலை உருவாகியுள்ளது.

பெற்றோரால் கைவிடப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. தடுப்பில் கணவன்மார் இருப்பதால் போரால் அங்கவீனமாகிய பல மனைவிமார் தமது குழந்தைகளைப் பராமரிக்க மிகவும் சிரமப்படுகின்றனர். இத்தகைய அவலங்களும் சீரழிவுகளும் மலிந்து போய் உள்ள நிலையில் தமிழ்ச் சமூகம் ஒற்றுமைப்பட வேண்டியதும் மாற்று வழிகளைக் கண்டறிய வேண்டியதும் மிக இன்றியமையாதது.

அரசியலில் பெண் பிரதிநிதித்துவம் என்பது போராட்டத்திற்கூடாக வளர்ந்து வந்ததொன்று. 2004-2010 வரை தமிழ்தேசியத்தை பாராளுமன்றத்திலும் சர்வதேச மட்டத்திலும் பிரதிநிதித்துவப்படுத்த தமிழ்ப் பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் செயற்படும் நிலை இருந்தது. இந்த நிலமையின் தூண்டுதலால் 2006 இல் நடக்க இருந்த உள்ளூராட்சி தேர்தலில் 30 இற்கும் மேற்பட்ட பெண்கள் போட்டியிட முன் வந்தனர். ஆனால், இன்று நிலைமைகள் மாறி அரசியலில் பெண்கள் ஈடுபடவே அஞ்சுகின்ற நிலைமை உருவாகியுள்ளது.

இன்று மிகச்சிறு அளவில் பெண்களுக்கு நிர்வாகப் பதவிகள் கிடைத்திருந்தாலும் அவை வெறும் அலங்காரத்திற்கானதாகவே உள்ளன. அதிகாரிகள் ஆட்டிப்படைப்பதற்கு உகந்தவர்களாகவே அப் பெண்கள் ஆக்கப்பட்டுள்ளனர். இப்படியான நிலையில் பெண்கள் நிர்வாகப்பதவிகளை வகிப்பதால், பெண்கள் நிர்வாகப்பதவிகளை வகிப்பது பற்றி சமூகம் அதிருப்தி அடையும் நிலைமை மேலோங்கியுள்ளது.

இத்தகைய நலிந்த பயமான சூழலில் சிக்கியிருக்கும் நிலையில் இருந்து, பெண்கள் படிப்படியாக மீள் எழுச்சி கொள்ள வேண்டும். தற்போதைய சமூக சூழலில் இதற்கான சாத்தியம் கருகலானதாகவே உள்ளது.

பத்மினி சிதம்பரநாதன்
மகளிர் விவகாரப் பொறுப்பாளர்,
தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி


எனினும் நாம் முயற்சி செய்ய வேண்டும்.

பெண்கள் ஒன்று படுதல், ஒருவருக்கொருவர் உதவுதல், அரவணைத்தல் மூலமே பெண்கள் பலம்பெற முடியும்.

பலம்பெற்ற பெண்கள் சகல ஒடுக்குமுறைகளுக்கும் எதிராகப் போராட முடியும். ஒன்றுபடுவோம்.

# பெண்களின் உரிமைகளையும் சமத்துவத்தையும் உறுதிப்படுத்தும் சர்வதேச உடன்படிக்கை

## இன்று சர்வதேச மகளிர் தினமாகும்




ஒரு மனிதனுடைய உறுதிப்பாட்டுக்கும் நல் வாழ்வுக்கும் தனிப்பட்ட அபிவிருத்திக்கும் உள்ள உரிமை தான் அடிப்படை மனித உரிமையாகும். எல்லோருக்கும் அடிப்படை உரிமை பொதுவானதாகும். அதனை அனுபவிப்பதற்கு மனிதனுக்கு உரிமையுள்ளது. அது ஆண், பெண் வேறுபாடின்றி அனைவருக்கும் கிடைக்க வேண்டும்.

1948 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச மனித உரிமை பிரகடனம் தான் இருபதாம் நூற்றாண்டின் மிகச்சிறந்த அடிப்படை மனித உரிமை அறிக்கையாகும்.

இன்று மனித உரிமைகள் பெயரளவில் பெண்களுக்கு விரிவுபடுத்தப்பட்ட காரணத்தினால் அவர்களை துன்பம் நிறைந்த சூழலிருந்து வெளிக்கொண்டு வரவும் பெண்களின் உரிமைகளை பாதுகாக்கவும் வளர்க்கவும் ஒரு சிறப்பு சட்டம் தேவைப்பட்டது. இவ்வாறான சூழ்நிலையில்தான் பெண்களுக்கு எதிரான அனைத்து வகை பாகுபாடுகளையும் களையும் சர்வதேச உடன்படிக்கை (CEDAW) சீடோ ஓர் நடுநிலையான மனித உரிமை தரத்தை பெண்களின் சூழ்நிலைக்கேற்ப நிலை நிறுத்தியுள்ளது. இது பெண்களின் அடிப்படை உரிமைகளை பெற்றுத் தருவதோடு மட்டும் நின்று விடவில்லை.

இவ் உடன்படிக்கை ஐக்கிய நாடுகள் பொதுச்சபையால் 1979 ஆம் ஆண்டு மார்கழி மாதம் நிறைவேற்றப்பட்டு 1981 ஆம் ஆண்டு மூன்றாம் திகதி ஒரு சர்வதேச உடன்படிக்கை யின் வலுவைப் பெற்றதுடன் 1981 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஐந்தாம் திகதி இலங்கை உறுதிசெய்தது. ஐக்கிய நாடுகள் சபையின் முப்பது வருட கடின உழைப்பின் பெறுபே றாக சீடோ காணப்படுகின்றது. இவ் ஆவணம் முப்பது விதிகளை உள்ளடக்கியுள்ளது.

விதி 01 ஆனது மகளிருக்கு எதிரான பாகுபாடுகளை விளக்குகிறது. விதி 02 தொடக்கம் 06 வரையானவை சீடோவை ஏற்றுக் கொள்ளும் ஒவ்வொரு நாடும் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி கூறுகின்றது. இந்த வகையில் மகளிருக்கு சமத்துவம் என்ற வகையில் தனது நாட்டின் அரசியல் யாப்பு மற்றும் எல்லா சட்டங்களிலும் சமத்துவத்தினை உறுதி செய்ய வேண்டும். அத்துடன் மகளிர் எதிர்நோக்கும் சமத்துவமின்மைகளை அகற்றும் சட்டங்களையும் பிரமாணங்களையும் இயற்றுவதுடன் மகளிரை வாணிப பொருளாக்குவதையும் விபச்சாரத்தில் ஈடுபடுத்துவதையும் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என இவ் விதி கூறுகின்றது.

விதி ஏழானது பெண்களது அரசியல் உரிமைகள் பற்றி குறிப்பிடுகின்றது. அதாவது பெண்கள் வாக்களிக்கவும் அரசாங்கத்தின் எல்லா மட்டங்களிலும் பங்குபற்றவும் நாட்டின் கொள்கைகளை உருவாக்குவதில் பங்குபற்றவும் மகளிருக்கு உரிமையுண்டென இவ் விதி எடுத்துக் கூறுகின்றது. விதி 08 ஆனது மகளிர் சர்வதேச மட்டங்களில் தம் நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தும் உரிமையினை கொண்டுள்ளனர் என இவ் விதி கூறுகின்றது. விதி 09 ஆனது மகளிருக்குரிய தேசியத்துடன் தொடர்பான உரிமையினை எடுத்துக் கூறுகின்றது. இதன்படி மகளிர் தமக்கென ஒரு தேசியத்தை வைத்திருக்கவும் அதனை மாற்றுவதற்கும் தமது தேசியத்தை தமது பிள்ளைகளுக்கு கையளிக்கவும் மகளிருக்கு உரிமையுண்டு என்பதனை சீடோ ஏற்றுக் கொள்கிறது.

விதி 10 ஆனது மகளிரின் கல்வி வாய்ப்புகள் சமபந்தமான உரிமைகளை கூறுகின்றது. அந்த வகையில் மகளிர் முன்பள்ளி, பொதுக்கல்வி, தொழில்நுட்பக்கல்வி மற்றும் பல்கலைக்கழக கல்வி ஆகியன பெறவும் ஒரே கலைத்திட்டத்திற்கும் ஒரே பரீட்சைக்கும் உட்படவும் புலமைப்பரிசில்களையும் மானியங்கள் பெறவும் விளையாட்டு, உடற்கல்வி ஆகியவற்றில் ஈடுபடவும் உடல்நலம் குறித்து கற்கவும் பாலியல் கல்வி பெறவும் பெண்களாக இருக்கின்ற காரணத்தினால் சில குறிப்பிட்ட பாடங்களை செய்ய வேண்டும் என நிர்ப்பந்திக்கப்படாமல் தாம் விரும்பும் பாடங்களையோ, நிகழ்ச்சிகளையோ தெரிந்தெடுக்க மகளிருக்கு உரிமையுண்டென சீடோ ஏற்றுக் கொள்கின்றது.

விதி 11 ஆனது மகளிர் வேலைகள் பார்ப்பது தொடர்பான உரிமைகளை எடுத்துக் கூறுகின்றது. இதன்படி மகளிர் விரும்பிய வேலை புரியவும் ஒரே வேலையைச் செய்யும் ஆண் பெறும் ஊதியத்தை பெறுவதுடன் பதவி உயர்வு, வேலை பாதுகாப்பு பயிற்சிகள் பெறவும் மகளிருக்கு உரிமையுண்டு என்பதனை சீடோ ஏற்றுக் கொள்கின்றது.

விதி 12 ஆனது மகளிரின் சுகாதாரம் சார் உரிமைகளை எடுத்துக் கூறுகின்றது. விதி 13 ஆனது மகளிரின் பொருளாதார மற்றும் சமூக வாழ்வுக்கான உரிமைகளை கூறுகின்றது. விதி 14 ஆனது விசேடமாக கிராமப்புற மகளிரின் உரிமைகளை எடுத்துக் காட்டுகின்றது.

விதி 15 ஆனது சட்டத்தின் முன் சமத்துவம் எனும் கருத்தினை எடுத்துக் கூறுகின்றது. இதன்படி நாட்டின் சட்டங்க ளால் மகளிர் சமமாக நடாத்தப்படவும் தாம் எங்கே வாழ வேண்டும் என்பதனை தீர்மா னிக்கும் சமமான உரிமை மகளிருக்கு உண்டு என்பதனை சீடோ ஏற்றுக் கொள்கின்றது. விதி 16 ஆனது, மகளிருக்குரிய திருமண உறவிலும் அதன் பின்னரான குடும்ப உறவுகளிலும் சமத்துவத்தினை இவ் விதி எடுத்துக் கூறுகி ன்றது.

இதன்படி தமக்கு விரும்பிய ஓர் துணைவரை தேர்ந்தெடுக்கவும் மணவாழ்வில் கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் இருக்கும் அதே உரிமைகளைக் கொண்டிருக்கவும் எப்பொழுது எத்தனை பிள்ளைகள் பெறுவது என்று தீர்மானிக்கவும் மகளிருக்கு உரிமையுண்டு என்பதனை சீடோ ஏற்றுக் கொள்கிறது. விதி 17-30 வரையானவை இவ் விதிகளின் நடைமுறை நிர்வாகம் சம்பந்த மாக அரசாங்கத்தின் பொறுப்புக்கள் கடமை களினையும் பற்றி கூறுகிறது.

சீடோவின் சமத்துவ நோக்கம் என்பது நாடுகளின் சட்டங்கள், அரசின் கொள்கைகள் மற்றும் திட்டங்கள் மூலம் பாலின பாகுபாடுகள் சரி செய்யப்பட்டு அத்தகைய செயற்பாடுகளின் விளைவாக சமமான வாய்ப்புக்களையும் சமமான பலன்களையும் அனுபவிக்கும் சமத்துவத்தினையும் பெண்களுக்கு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்கின்றது.

சு.தி.விமலன் (ஜே.பி)
மாவட்ட கல்வி கலாசார பணிப்பாளர்,
மனித உரிமைகள் நிறுவனம்,
யாழ்ப்பாணம்.

எனினும் சீடோவின் இந்த விதிகளை நிறைவேற்றுவ்தற்கு நாடுகளில் காணப்படுகின்ற உள்நாட்டு கலவரங்கள், சொந்த நாட்டிலேயே மக்கள் அகதிகளாதல் போன்றன சீடோவின் சமத்துவம் நோக்கிய பயணத்தின் தடைகளை ஏற்படுத்துவதனை நாம் வெளிப்படையாகக் காணக் கூடியதாகவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலைமாற்றம் அடைந்து வரும் இலங்கைப் பொருளாதாரம்

## ஆசியாவின் ஆச்சரியமாக எமது பொருளாதாரம் மாற்றமுறுமா...

**வளர்ச்சி அபிவிருத்தியினை ஏற்படுத்துமா?**

பொருளாதார வளர்ச்சி வெளியீடு களின் அளவு ரீதியான மாற்றத்தினை மட்டுமே காட்டும் (Economic growth implies only an increase in quantitative output). இது பொருளாதார அபிவிருத்திக்கு உதவ முடியும் உதவாமலும் போகலாம். பொருளாதார வளர்ச்சி (Economic Growth) பொருட்கள் சேவைகளின் உற்பத்தியில் ஏற்படும் மாற்றத்தினை வைத்தே அளவிடப்படுகின்றது. பொதுவாக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அதிகரிப்பினை 100%ஆக வைத்து (GDP) அளவிடப்படுகின்றது.

இருநாடுகளுக்கிடையிலான தலாநபர் வருமான ஒப்பீடு கொள்வனவு சக்தியினை ஒப்பிடுவதாக மட்டுமே காட்டும். இலங்கையினை விட சிங்கப்பூரின் தலாநபர் வருமானம் பன்மடங்கு உயர்வானது என்பதும் இதனையே வெளிப்படுத்தும்.

பொருளாதார அபிவிருத்தி (Economic Development) பல்வேறு வகையான சுட்டிகளில் ஏற்படும் முன்னேற்றத்தினைக் குறிக்கும். எழுத்தறிவு வீதம், ஆயுட்காலம், வறுமை வீதம், மனித அபிவிருத்தி (HDI), ஓய்வு நேரம், சூழல், சுதந்திரம், சமூக நீதி, சுகாதாரம் போன்ற, அபிவிருத்தியினை வெளிக்காட்டும் விடயங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. எனவே பொருளியலாளர்கள் தலாநபர் வருமானத்தில் ஏற்படும் அதிகரிப்பினை மட்டும் ஒரு அளவையாகக் கொள்ளாது, மனித அபிவிருத்திக்காக ஒதுக்கப்படும் வளங்களின் மூலமும் அது வருமானச் சமமின்மையை சீர்செய்யும் சமூக நல முதலீடுகளாகக் கொண்டு பொருளாதார பலத்தினைக் கணிப்பிட வேண்டும் என வாதிடுகின்றனர்.

இலங்கையின் பொருளாதார பலத்தினை மேற்படி அளவைகள் மூலம் மதிப்பிடும் போது ஆசியப் பிராந்தியத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை அது கொண்டுள்ளது.

**உள்ளடக்கல் வளர்ச்சி**
**(Inclusive Growth)**

இலங்கை மத்திய வங்கியின் 60வது ஆண்டு நிறைவுவிழாவிற்கு சிறப்பு விருந்தினராக வருகை தந்த உலக வங்கியின் நிர்வாகப் பணிப்பாளர் Dr.Ngozi Okonjo Iweala அவர்களும் நோபல் பரிசு பெற்ற Michael Spence அவர்களின் தலைமையில் அமைந்த Commission on Growth and Development குழுவும் வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் வளர்ச்சியினைத் தூண்டுவதற்கான பொதுவான நான்கு உள்ளீடுகளை அடையாளங் கண்டு கூறியுள்ளனர். அவை

1) முதலீடும் வளர்ச்சியும் (Investment and Growth)
2) புத்தாக்கமும் வளர்ச்சியும் (Innovation and Growth)
3) பேரினப்பொருளாதார உறுதிப்பாடும் வளர்ச்சியும் (Macro Economic Stability and Growth)
4) உள்ளடக்கல் வளர்ச்சி (Inclusive Growth)

உலகவங்கித் தலைவரின் உரையின் அடிப்படையில் இலங்கைப் பொருளாதாரம் மேற்படி நான்கு உள்ளீடுகளில் திருப்திகரமான ஒரு நிலையில் இருப்பதுடன் முன்நோக்கி நகர்வதற்கான வாய்ப்புகள் மற்றும் எதிர்காலம் என்பன இருப்பதான ஒரு நேர் அணுகுமுறையினை (Positive Approach) வெளிப்படுத்தியுள்ளார்.

மேற்படி நான்கு விடயங்களிலும் இலங்கையின் Fortune favours the bold எனக் குறிப்பிடுகின்றார்.

மகிந்த சிந்தனையில் இடம்பெற்று வரும் அபிவிருத்தி முயற்சிகள் உள்ளடக்கல் பொருளாதார வளர்ச்சியினையும் கொண்டுவரும். உள்ளடக்கல் வளர்ச்சி என்பது (Inclusive Growth) பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளும் பொருளாதார வளர்ச்சிக்குதவுவதுடன் அதன் விளைவாக நாட்டின் வறுமை தணிக்கப்படுதலாகவும் இருப்பதாகும்.

வேறுவகையில் எளிதாகக் கூறின் நாட்டின் சகல பகுதிகளிலும் இடம்பெறும் அபிவிருத்தி முயற்சிகள் உயர்வான பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்ய வேண்டும். தற்போது வடக்கு கிழக்கில் இடம்பெற்று வரும் அபிவிருத்திச் செயற்பாடுகள் உள்ளடக்கல் வளர்ச்சியினையும் இலங்கையில் ஏற்படுத்தும்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோன் கெனடி கூறியதனை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். It is not the wealth of a nation that builds roads but the roads that builds the wealth of a nation.

இலங்கையில் இடம்பெற்று வரும் பெருந்தெருக்களின் விருத்தி உள்ளடக்கல் வளர்ச்சிக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். 2010 இல் 8% பொருளாதார வளர்ச்சி, தேசிய பொருளாதாரத்திற்கு வடக்கு கிழக்கில் இருந்து வழங்கப்படும் பங்கு, வடக்கு கிழக்கிற்கு 2011இல் வரவு செலவுத் திட்டத்தில் அதிகளவான மூலதன ஒதுக்கம் என்பன இலங்கை சமூகத்தின் எல்லாப் பகுதியினையும் வளர்ச்சிச் செயன்முறையில் (Growth Process) ஈடுபட வைப்பதற்கான அரசின் நடவடிக்கைகள் உள்ளடக்க வளர்ச்சியின் மற்றுமொரு பரிமாணமாகும்.

இதனை உலக வங்கியின் தலைவர் இலங்கை மத்திய வங்கியின் 60வது ஆண்டு நிறைவில் உரையாற்றும் போது பின்வருமாறு கூறினார். "Another examples might be putting in place inantives to agriculture and agro – based industry, especially in the north and the east of the country to amplify market linkages to the rest of the country and international"

உள்ளடக்கல் பொருளாதார வளர்ச்சியில் இன்னுமொரு குறிப்பிடத்தக்க பண்பு, இலங்கையானது வேலைப்படையில் பெண் தொழிலாளர்களின் (Female labour force) பங்களிப்பு தற்போது 35% என்ற அளவில் காணப்படுகின்றது. இது எதிர்காலத்தில் இன்னும் அதிகரிக்கலாம். இது தலாநபர் வருமானம் எல்லா இலங்கையர்க்கும் என்பதனை வெளிப்படுத்தும். பால்நிலை ரீதியில் சமூகத்தின் முக்கிய பிரிவினரை பொருளாதார வளர்ச்சியில் உள்ளடக்கியிருக்கின்றமையினை காட்டுகின்றது. பால்நிலை குறித்த விடயத்தில் இலங்கை ஆசியப் பிராந்தியத்தில் சாதனையாளனாகவே காணப்படுகின்றது.

எனவே மிகப்பரந்த கண்ணோட்டு



(Vested interest) இல்லாமல் இலங்கையின் பொருளாதார பலத்தினை உற்று நோக்க வேண்டும். பொருளியலாளர்கள் அனைவருக்கும் நன்கு தெரிந்த விடயம் பொருளாதாரக் கோட்பாடுகள் சிந்தனைகள் நிலையானவையல்ல (Static) இயங்கியலுக்குட்பட்டது. கீழ்வரும் மேற்கோளுடன் இந்தக் கட்டுரையை நிறைவு செய்து கொள்ள விரும்புகின்றேன்.

"பொருளாதார கோட்பாடுகள் எக்காலத்திலும் பரிணாம வாதத்திற்குட்பட்டது. அல்லது நெருக்கடிகளின் போது மாற்றமடைகின்றது. அதற்கு நிலையான தன்மை இல்லை. பழம் பொருளியல் கோட்பாடுகள் கெயின்சிய கோட்பாடுகளுக்கு இடம்விட்டு நகர்ந்தன. 1930களில் ஏற்பட்ட பெருமந்தம் பின்-கெயின்சிய (Post Keynesian) வாதிகளின் நாணயவாத (Monetarist Approach) அணுகுமுறைகளுக்கு இடம்விட்டு நகர்ந்தன. 2008 இல் வந்த நிதி நெருக்கடிகள் மீண்டும் தீவிரமான பொருளாதார கோட்பாட்டு மாற்றங்களை வேண்டி நிற்கின்றது."

*(பிரணாப் முகர்ஜி, இந்திய நிதியமைச்சர், லக்ஷ்மன் கதிர்காமர் நினைவுப் பேருரையிலிருந்து)*

*-முற்றும்*

ஏ.சி.ஜோர்ஜ்
வலயக் கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.



யா/ தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பருத்தித்துறை பிரதேச செயலர் இரா. வரதீஸ்வரன் தேசியக் கொடி ஏற்றுவதையும் அருகில் பாடசாலை அதிபர் க.க.யோகநாதன் நிற்பதனையும் அஞ்சலியகப் பொறுப்பாளர் வணபிதா. டேமியன் அடிகளார் வெற்றிக் கிண்ணம் வழங்குவதையும் பிரதமவிருந்தினராக கலந்து கொண்ட இரா. வரதீஸ்வரன் வெற்றிக் கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: அல்வாய் செய்தியாளர்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பங்குனி உத்தர பொங்கல் விழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறியத் தந்துள்ளனர். (ஸ்ரீ-3-30

## கண்ணிவெடிகள் அகற்றப்பட்டதும் கல்லாறு மீனவர்கள் கடற்றொழில் மேற்கொள்ள அனுமதி

(கிளிநொச்சி)

கல்லாறு கடற்றொழிலாளர்கள் கடற்றொழிலை மேற்கொள்ள ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

கடந்த 2ஆம் திகதி புதன் கிழமை சுண்டிக்குளம் பேப்பாறைப்பிட்டி கடற்கரையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இது குறித்து ஆராயப்பட்டது. இதற்கமைய 2 கிலோ மீற்றர் தூரம் வரையான கடற் கரைப் பகுதியில் ஒரு மாதத்தில் கண்ணி வெடிகள் அகற்றப்பட்ட தும் கடற்றொழிலாளர்கள் கடற்றொழிலை மேற்கொள்ள அனுமதிக்கப்படவுள்ளனர்.

கண்ணிவெடி அகற்றும் பணிகளை யுண்டிபி நிறுவனம் மேற்கொள்ளவுள்ளதுடன் இராணுவத்தின் கண்ணி வெடிஅகற்றும் பிரிவின் ஒத்துழைப்பும் பெறப்படவுள்ளது. இக்கலந்துரையாடலில் 68ஆவது படைப் பிரிவின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் கருணஜெயசேகர ,கிளிநொச்சி அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், முல்லைத்தீவு அரச அதிபர் பத்திநாதன், கண்டாவளை பிரதேச செயலர்,யுஎன்டிபி நிறுவன முல்லைத் தீவு, கிளிநொச்சி தலைமை அதிகாரி நவநீதன், யுஎன்டிபி கண்ணி வெடி அகற்றும் பிரிவின் பொறுப்பதிகாரி,இராணுவத்தின் கண்ணி வெடி அகற்றும் பிரிவின் பொறுப்பதிகாரி கேணல் மாயாதுன்ன ,ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் வைத்தியநாதன்-தவநாதன், கிளிநொச்சி மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பொது முகாமையாளர் இ.கணேசலிங்கம்,கிளிநொச்சி மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஸ்ரீ-3-30)

## பாடசாலை உபகரணக்கொள்வனவுக்கு அமைச்சர் டக்ளஸ் நிதியுதவி

(கிளிநொச்சி)

கிளி/கண்டாவளை மகாவித்தியாலயத்திற்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்ய பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா இரண்டு இலட்சத்து 38 ஆயிரம் ரூபா காசோலையை கடந்த 4ஆம் திகதி ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்ப்பாண தலைமை அலுவலகத்தில் வைத்து வழங்கியுள்ளார்.

கண்டாவளை மகாவித்தியாலய அதிபர், ஆசிரியர்களுடன் பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,கிராம அபிவிருத்திச் சங்கம், கமக்காரர் அமைப்பு ஆகியவற்றின் பிரதி நிதிகளை சந்தித்து கலந்துரையாடிய அமைச்சர் அவர்களிடம் பாடசாலை பயன்பாட்டிற்கான ஒலி பெருக்கி சாதன தொகுதி,நிழற் பிரதி (போட்டோக்கொப்பி) இயந்திரம் ஆகியவற்றின் தேவை குறித்து பாடசாலைச் சமூகம் வேண்டுகோள் விடுத்தன.

இதனையடுத்து அமைச்சர் அவர்கள் உடனடியாக பாடசாலை அதிபர் திருமதி கோமதி மதியழகனிடம் ஒலிபெருக்கித் தொகுதி, நிழற்பிரதி இயந்திரம் என்பவற்றை கொள்வனவு செய்வதற்காக இரண்டு இலட்சத்து 38 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையை வழங்கி வைத்தார். (ஸ்ரீ-3-30)




## கிளிநொச்சி மாவட்டத்தில் நன்னீர் மீன்பிடி நடவடிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் நன்னீர் மீன்பிடி அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்கு முன்னர் இந் நன்னீர் மீன்பிடித் தொழிலாளர்களுக்கான முகாமைத்துவப் பயிற்சிகள் நடைபெறவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இதில் பிரமந்தனாறு,வன்னேரி, புதுமுறிப்பு ஆகிய பகுதி நன்னீர் மீன்பிடித் தொழிலாளர்கள் பங்குபற்றவுள்ளனர். மேற்படி குளங்களில் ஏறத்தாழ ஒரு இலட்சத்து 58 ஆயிரம் மீன் குஞ்சுகளை இருப்புச் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தின் கரச்சி ,கண்டாவளை, பூநகரி,பச்சிலைப் பள்ளி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள நன்னீர் மீன்பிடித் தொழிலாளர்களுக்கு பருவகால நன்னீர் மீன் பிடி முகாமைத்துவப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

கரியாலை, நாகபடுவான் பகுதியில் உள்ள நன்னீர் மீன்பிடித் தொழிலாளர்களுக்கு கடந்த தைமாதம் முகாமைத்துவப் பயிற்சிகள் வழங்கப்பட்டிருப்பதுடன் இப் பயிற்சியில் 40 பேர் வரை கலந்து கொண்டனர். (ஸ்ரீ-3-30

## பிரமந்தனாறு குளம் ரூ.200மில். செலவில் புனரமைக்கப்படவுள்ளது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பிரமந்தனாறு குளம் 200 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இக் குளத்தின் கீழான பயிர்ச்செய்கையாக நெற் பயிர்ச்செய்கையே மேற்கொள்ளப்பட்டு வந்தது.

மேட்டு நிலப்பயிர்ச்செய்கையினை ஊக்குவிக்கும் முகமாகவும் நெற் பயிர்ச்செய்கையை விடுத்து மேட்டு நிலப்பயிர்ச் செய்கையை மேற்கொள்ள விவசாயிகள் இணக்கம் தெரிவித்ததையடுத்து இக்குளம் புனரமைப்பு செய்யப்படவுள்ளதாக இத்தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-3-30)

## கிளிநொச்சி வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் பற்றாக்குறை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சில சுற்றயல்கூறு மருத்துவமனைகளில் வைத்தியர் பற்றாக்குறை நிலவுவதாக பொது மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அவசர நோயாளர்களுக்கும் கர்ப்பிணித் தாய்மார் மற்றும் குழந்தைகளுக்கு சிகிச்சை வழங்க வைத்தியர்கள் சில சமயங்களில் இல்லாதிருப்பதால் பொதுமக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்தனர்.

இதனால் சிகிச்சை பெற கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலைக்கு செல்ல வேண்டியுள்ளதாகவும் அதற்கேற்ற வகையில் போக்குவரத்து வசதிகளும் சீராக இல்லாததால் அவசர சிகிச்சைகள் பெற முடியாத நிலை காணப்படுவதாகவும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே இது விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய கவனம் செலுத்தி செயற்படுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஸ்ரீ-3-30)

## கிளிநொச்சி-யாழ். பஸ்சேவை நேர ஒழுங்குகள் அறிவிப்பு

(கிளிநொச்சி)

இலங்கை போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சிச் சாலையினால் யாழ்ப்பாணத்திற்கான பேருந்து சேவைகளின் நேர ஒழுங்குகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கிளிநொச்சியில் இருந்து காலை 6.45 மணிக்கும் மதியம் 2 மணிக்கும் மாலை 4 மணி, 4.30மணிக்கும் நான்கு பேருந்துச்சேவைகள் கிளிநொச்சி மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து மேற்கொள்ளப்படுகிறது.

இதேவேளை விசுவமடுவில் இருந்து மாலை 2 மணிக்கு பரந்தன் ஊடாக யாழ்ப்பாணத்திற்கு ஒரு பேருந்து சேவை மேற்கொள்ளப்படுவதாகவும் இலங்கை போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சிச் சாலையினரால் அறியத் தரப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-30)

## பாடசாலைக்கான கணனித் தொகுதி அமைத்துத் தருவதாக அமைச்சர் உறுதி

(கிளிநொச்சி)

கிளி/அக்கராயன் மகாவித்தியாலயத்திற்கு கணனித் தொகுதிகளை வழங்க பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே. என்.டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய போது, பாடசாலைக்கான கணனித்தொகுதிகளையும் இணைய இணைப்பையும் உடனடியாக வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் பாடசாலையின் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க பவுசர் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய உடன் நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார்.

இதேவேளை ஆசிரியர்களுக்கான விடுதி வசதிகள்,போக்குவரத்து வசதிகள் ,விஞ்ஞான ஆய்வுகூடம் என்பனவற்றை விரைவில் பெற்றுத் தரப்படும் எனவும் உறுதியளித்தார்.

இந்நிகழ்வில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் சர்வதேச இணைப்பாளர் விந்தன்,ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் வை.தவநாதன்,கிளிநொச்சி வலய கல்விப்பணிப்பாளர், படையதிகாரிகள்,அதிபர்கள்,ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டிருந்தனர். (ஸ்ரீ-3-30)



வட்டக்கச்சி மகாவித்தியாலயத்திற்கு சுவிஸில் வசிக்கும் பழைய மாணவர் ஒருவரால் பாண்ட் வாத்திய உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டது. இவ் உபகரணங்களை அம் மாணவரின் தாயார் திருமதி தவமணி பவானந்தன் அதிபர் கி.ம.மனுவேலிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம். (படம்:-வட்டக்கச்சிசெய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடாபியின் கோட்டையில் கடும் மோதல்; கிளர்ச்சியாளர்களின் கை ஓங்குகின்றது

லிபிய ஜனாதிபதியின் கோட்டையாகக் கருதப்படும் தலைநகர் டிரிபோலியில் அவரது ஆதரவாளர்களுக்கும் எதிர்ப்பாளர்களுக்கும் இடையே நேற்று முன்தினம் கடும் மோதல் நடந்துள்ளது.

டிரிபோலியில் காலை 9.15 மணியில் இருந்து விண் அதிரும் வகையில் துப்பாக்கி வெடிக்கும் ஓசை கேட்டது. கடாபியின் ஆதரவாளர்களுக்கும் எதிர்ப்பாளர்களுக்கும் இடையே நடந்த துப்பாக்கி சண்டைதான் இது என்று டிரிபோலி மக்கள் தெரிவித்தனர்.

ஆனால், இதை அரசு தரப்புத் தொலைக்காட்சி திட்டவட்டமாக மறுத்துள்ளது. எதிர்ப்பாளர்கள் வசம் இருந்த முக்கிய நகரங்களை கடாபியின் படை கைப்பற்றி விட்டது. இதைத்தான் டிரிபோலியில் துப்பாக்கியால் சுட்டுக்கொண்டாடியதாகவும் தொலைக்காட்சி குறிப்பிட்டுள்ளது.

டிரிபோலிக்கு 50 கி.மீ. தொலைவிலுள்ள அஸ்ஸாவியா நகரம் இப்போது கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த இந்நகரை கடாபியின் இராணுவம் மீட்டு விட்டதாகவும் அரசு தொலைக்காட்சி அறிவித்தது. ஆனால், இது பொய்ப்பிரசாரம் என்று அந்நகரவாசிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

நாட்டின் கிழக்கு ,மேற்குப் பகுதிகளில் உள்ள நகரங்கள் கிளர்ச்சியாளர்கள் வசமே



உள்ளன. இப்பகுதிகளை கடாபியின் ஆதரவாளர்கள் மீண்டும் கைப்பற்றுவதென்பது எளிதான காரியமல்ல. கிளர்ச்சியாளர்கள் கை தொடர்ந்து ஓங்கி வருகின்றது என்று மக்கள் தரப்பில் கூறப்படுவதாக அல்ஜஸீரா தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

கடந்த 18 நாட்களாக கடாபிக்கு எதிராக கிளர்ச்சி இடம்பெற்று வருகிறது. பதவியை விட்டு விலகக்கோரி அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகள் அவருக்கு தொடர்ந்து நெருக்குதல் அளித்து வருகின்றன. இருப்பினும் பதவி விலக முடியாது என்பதில் அவர் உறுதியாக உள்ளார். உங்களால் முடிந்ததை செய்யுங்கள் என்று அந்நாடுகளுக்கு சவால் விடுத்துள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் பிரான்ஸ் நாட்டு பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் அவர் கூறியி ருப்பது.

லிபியாவில் என்ன நடக்கிறது என்பதை நிச்ச யம் உலக மக்கள் அறி ந்தே ஆக வேண்டும். இத னால் லிபியாவுக்கு தனிக் குழுவை ஐ.நா.வோ, ஆபிரிக்க யூனியனோ அனுப்பி வைக்கலாம். இதில் எனக்கு எவ்வித ஆட்சேபமும் இல்லை. லிபியாவில் அக்குழு சுதந்திரமாக விசாரணை நடத்தலாம். அக்குழுவுக்கு எவ்வித இடையூறும் வராது என்று உறுதியளிக்கிறேன். விசாரணைக்குழு லிபியாவுக்கு வந்தால் உண்மை தெரியவரும். அதன் மூலம் என் தலைமையிலான அரசின் மீது உலக மக்கள் கொண்டிருக்கும் தவறான அபிப்பிராயம் நிச்சயம் மாறும்.

லிபியாவில் இப்போது ஏற்பட்டுள்ள கிளர்ச்சி மக்கள் புரட்சியல்ல என்பதை மட்டும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அல்-கொய்தா தீவிரவாதி பின்லேடன் தான் கிளர்ச்சியை தூண்டிவிடுகிறார். இக்கிளர்ச்சியை நான் அடக்காவிட்டால் ஒட்டுமொத்த லிபிய மக்களும் அவருக்கு கப்பம் கட்ட வேண்டியிருக்கும். இதுபோன்ற மோசமான நிலையை நீங்கள் சந்திக்க வேண்டுமா? யோசியுங்கள்.

இந்தக் கிளர்ச்சி லிபியாவுடன் மட்டும் சம்பந்தப்பட்டதல்ல ஒட்டுமொத்த உலக நாடுகளுக்குமான பிரச்சினை. இதை கட்டுப்படுத்தத் தவறிவிட்டால் ஐரோப்பிய கண்டத்துக்கு பேராபத்து ஏற்படும் என்றார். (ஸ்ரீ-2)



சீனாவின் ஜியாங்சூ மாகாணத்தில் தையாசூ நகரில் கட்டுமானப்பணிக்காக நிலத்தைத்தோண்டியபோது 700 ஆண்டுகளுக்கு முந்தைய பெண் மம்மி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இம் மம்மியானது சீனாவை கடந்த 1368-1644 ஆண்டுகளில் ஆட்சிசெய்த மையிங் வம்சத்தில் வாழ்ந்த பெண்ணாக இருக்கலாம் என தொல்லியல் துறையினர் கூறுகின்றனர்.




## வெளிநாட்டிலிருந்து நன்கொடை பெற்ற ஜப்பான் அமைச்சர் இராஜினாமா

வெளிநாடொன்றிலிருந்து நன்கொடையாக நிதி பெற்றுக் கொண்டதால் சர்ச்சைக்குள்ளான ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் சேய்ஜி மேஹறா இராஜினாமா செய்துள்ளார்.

தென்கொரியாவில் வசிக்கும் ஒருவரிடமிருந்து 50 ஆயிரம் யென்களை சுமார் 67054 (இலங்கை ரூபா) தான் அன்பளிப்பாக பெற்றுக் கொண்டதை கடந்த வெள்ளிக்கிழமை சேய்ஜி மேஹறா ஒப்புக் கொண்டிருந்தார்.

ஜப்பானிய சட்டங்களின்படி தெரிந்து கொண்டே இவ்வாறு நன்கொடை பெறுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் வெளிவிவகார அமைச்சர் மேஹறா இராஜினாமா செய்யவேண்டுமென எதிர்க் கட்சிகள் கோரின. அதை அடுத்து அவர் நேற்று முன்தினம் இராஜினாமா செய்துள்ளார்.

இந்த அன்பளிப்பு சிறிய தொகை என்றபோதிலும் வெளிநாடுகளிலிருந்து இவ்வாறு அன்பளிப்பு பெறுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு சக்திகள் ஜப்பானில் அரசியலில் செல்வாக்கு செலுத்துவதை தடுப்பதே இதன் நோக்கமாகும்.

இவ்விவகாரம் தொடர்பான ஜப்பானிய மக்களிடம் மன்னிப்பு கோருவதாக சேய்ஜி மேஹறா தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் ஜப்பானிய பிரதமர் நவோட்ட கான் மீதான அழுத்தங்களை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கனவே நாடாளுமன்றத்தில் வரவு- செலவுத் திட்டத்தை நிறை வேற்றுவதற்கு அவர் திணறி வருகிறார். எதிர்க்கட்சிகளோ விரைவில் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தி வருகின்றன.

இதேவேளை சேய்ஜி மேஹறா அடுத்த பிரதமராக தெரிவிக்கக்கூடும் எனவும் முன்னர் கருதப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## ஏமனுக்கான பயணத்தை தவிர்க்குமாறு அமெரிக்க பிரஜைகளுக்கு அறிவுறுத்தல்

ஏமன் நாட்டில் ஜனாதிபதி அலி அப்துல்லா சலேவுக்கு எதிராக போராட்டம் வலுத்துள்ள தால் அமெரிக்கர்கள் அந்நாட்டுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

துனிசியா, எகிப்து, லிபியாவைத் தொடர் ந்து அண்டை நாடுகளிலும் ஜனாதிபதிகளு க்கு எதிரான போராட்டங்கள் பரவி வருகின் றன. ஏமனில் 30 ஆண்டுகளாக ஆட்சியில் இருக்கும் ஜனாதிபதி அலி அப்துல்லா சலே வுக்கு எதிரான போராட்டங்கள் வலுத்து வரு கின்றன.

இப்போராட்டத்தை ஒடுக்க அங்கு அரச படைகள் குவிக்கப்பட்டுள்ளன. அந்நாட்டில் தற்போது சூழ்நிலை சரியில்லாததால் அமெ ரிக்கர்கள் யாரும் அங்கு செல்ல வேண்டாம். ஏமனில் தங்கியுள்ள அமெரிக்கர்களும் கூடிய விரைவில் அந்நாட்டை விட்டு வெளியேறு வது குறித்து பரிசீலிக்க வேண்டும் என அமெரிக்க வெளியுறவுத்துறை அறிவுறுத்தி யுள்ளது.

ஏமனில் ஊழலும் வேலை வாய்ப்பின் மையும் பெருகி விட்டதை எதிர்த்து போராட்டக் காரர்கள் போராடி வருகின்றனர். இதனால் சனா நகரில் பாதுகாப்புப் படையினர் மீது போராட்டக்காரர்கள் கல்லெறிந்து தங்கள் எதிர்ப்பை தெரிவித்துள்ளனர்.

ஏமன் நாட்டில் அல்- கொய்தா அமைப்பு சுதந்திரமாக செயற்படுவதால் அந்நாட்டில் வாழும் அமெரிக்கர்களுக்கு எந்த நேரத்திலும் ஆபத்து ஏற்படக் கூடும் என்பதால் அமெ ரிக்கா தங்கள் நாட்டு மகக்ளை எச்சரித்துள்ளது. (ஸ்ரீ-2)


**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**
**பாடசாலை அபிவிருத்திக் குழுவுக்கான அங்கத்தவர்களை தெரிவு செய்தல்**
**(School Development Committee)**

மேற்படி குழுவுக்கான அங்கத்தவர் தெரிவு 12.03.2011 சனிக்கிழமை கீழ்க்காணும் ஒழுங்கில் நடைபெறும்.

01. பெற்றோர்களுக்கான கூட்டம் (12.03.2011 காலை 10 மணி)

02. யாழ். இந்து பழைய மாணவர்களுக்கான கூட்டம் (12.03.2011 மாலை 4 மணி)

மேற்படி கூட்டம் கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும். அனைவரையும் சமுகமளிக்குமாறு தயவாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

அதிபர்
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

(சி-2655)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்கள் மூன்று வகைப்படும். ஒன்று புளுகு, இரண்டாவது அண்டப் புளுகு, மூன்றாவது புள்ளிவிவரங்கள். —மார்க் ட்வெய்ன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# சமூகத்தை சீரழிப்பதற்கு ஊடகங்கள் தேவையில்லை

ஊடகங்கள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்பது நியதி. ஜனநாயகத்தின் காவலர்கள் என்ற வகுதிக்குள் உள்ளடங்கும் ஊடகவியலாளர்கள் 'வர்த்தகம்' என்பதை மட்டும் மையமாகக் கொண்டு செயற்படுவார்களாயின் ஊடகம் ஊதாரித்தனமாக மாறிவிடும்.

ஊடகங்கள் செய்திகளை விற்பனை செய்கின்றன என்பது உண்மையாயினும் செய்திகளின் சென்றடைகை, அதன் விளைவு, அதனால் சமூகத்தில் ஏற்படக் கூடிய தாக்கம் என்பன குறித்து பக்குவமாகவும் நிதானமாகவும் ஆராய்ந்து அதன் பின் செய்தியை வெளியிடுவதே ஊடகங்களின் உச்சமான பொறுப்பாகும்.

இருந்தும் இன்றைய வர்த்தகப் போட்டி மற்றும் ஊடக நிறுவன உரிமையாளர்களுக்கு விசுவாசமாகச் செயற்பட வேண்டும் என்பதற்காக அவர்களின் மன நிலைக்கு ஏற்ப செய்திகளை வெளியிடும் குள்ள நோக்கம் என்பன கருதி எதையும் செய்தியாக வெளியிடலாம் என்ற நிலைமை உருவாகிவிட்டது.

இத்தகைய நிலைமை காரணமாக சமூகத்தை சீர்ப்படுத்துவதற்குப் பதிலாக சீரழிக்கும் செய்திகளை வெளியிட்டு சமூகத்தை நாசம் செய்து வருமானம் ஈட்டும் அநாகரிகம் தலைப்பட்டு விட்டன.

இதற்கு மேலாக எதையும் செய்தியாக்கலாம், எங்களுக்கு எதிரானவர்கள் பற்றி எப்படியும் எழுதலாம் என்ற அழிவுச்சிந்தனையும் ஊடகங்களின் தூய பணிக்கு இடுக்கண் விளைவிக்கின்றன.

எதுவாயினும், யாழ்ப்பாணத்தில் வெளிவருகின்ற ஊடகங்களுக்கான தார்மீகப் பணி தற்போது மிகவும் அதிகமாகவுள்ளது.

மக்களுக்கு உண்மையான தகவலை வழங்குதல், பக்கசார்பின்மை, அறிவியல் மற்றும் பொருளாதார எழுச்சிக்கு வித்திடல், நயத்தக்க நாகரிகத்துடன் சமூக சீர்திருத்தக் கருத்துக்களை வழங்குதல் என்ற வகையில் ஊடகங்கள் செயற்பட வேண்டியுள்ளதுடன் சமூகச் சீரழிவுகளை– மனித சமூகத்தை வெட்கித் தலைகுனிய வைக்கின்ற செய்திகளை முற்றாகத்தவிர்த்து கொள்வதும் கட்டாயமானதாகும்.

இவை தொடர்பில் யாழ்.பிராந்திய ஊடகங்கள் பொறுப்புடன் செயற்படத்தவறும் பட்சத்தில் ஊடகங்களை வெறுத்து–தூக்கி எறிவதற்கு மக்கள் தயங்க மாட்டார்கள் என்பது உறுதி.

# மகாராஜ ஸ்ரீ சண்முகநாதக் குருக்களின் மறைவு சைவத்திற்குப் பேரிழப்பு

## பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தெரிவிப்பு

சிவபதம் அடைந்த குருக்கள் ஐயா அவர்கள் எமது வரலாற்றுப் புகழ் பெற்றுள்ள ஆலயமாகிய மாவைக் கந்தன் ஆலய பரம்பரை ஆதீனகர்த்தாவாக விளங்கியது மட்டுமன்றி எமது சமயக் கிரியைகள், நடைமுறைகள் பற்றிய ஆழ்ந்த புலமையுமுடையவராக விளங்கினார். அத்துடன் தமது கருத்துக்களை தெட்டத்தெளிவாக கூறும் பண்பாளனும் ஆவார்.

இக் கருத்துக்களால் தமக்கு ஏதாவது பாதிப்பு வருமோ என்று கூட அஞ்சாமல் நல்லவற்றை நூல்களில் சொல்லியவற்றை அறிவு பூர்வமாக ஆலய நிர்வாகிகளுக்கும் ஏனையோருக்கும் வழங்கி வந்த பெருந்தகையாவார்.

இத்தகைய சிறப்புக்கொண்டோர் நம் மத்தியில் மிக மிக அரிதாகவே காணப்படுகின்றனர் என்றால் மிகையாகாது. பெரும்பாலும் சந்தர்ப்பத்திற்கும் சூழலுக்கும் ஏற்ப கருத்துக்களைப் பரிமாறும் ஒரு கொடிய நோயினால் தமது சமுதாயம் பீடிக்கப்பட்டிருக்கும் இச் சூழலில் குருக்கள் ஐயாவின் மறைவு ஒரு பெரிய வெற்றிடத்தைத் தந்துவிட்டது.

குருக்கள் ஐயா அவர்கள் எமது இந்து சமயப் பேரவையின் போஷகர்களின் ஒருவர் ஆவார்.

எங்கு சென்றாலும் இன்முகத்துடன் வரவேற்று நம்மை அரவணைத்து ஆவன செய்யும் மிகச் சிறந்த பண்பாளருமாவார் என்றும் தமது அறிவைப் பெருக்குவதில் ஆர்வம்காட்டி வந்தவர். இறுதியாக அவர் நோய் வாய்ப்பட்டிருந்த காலத்தில் நாம் அவரை சந்தித்த போதும் அவர் வாசித்துக்கொண்டிருப்பதையே கண்டோம்.

குருக்கள் ஐயா அவர்கள் ஒரு ஆராய்ச்சியாளரும் கூட. நமது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வெளியிட்டு வந்த ஆராய்ச்சி சஞ்சிகையாகிய *சிந்தனை* நிதி நெருக்கடி காரணமாக முடங்கிப் போய் இருந்த கட்டத்தில் இதன் ஆசிரியராக கடமையாற்றிய நாம் இந்த ஆலயங்களில் நிதி திரட்ட சென்ற போது தாமாகவே பல்கலைக்கழகம் வந்து ஆதீனத்தின் சார்பாக நிதி வழங்கி சென்ற செம்மலும் கூட.

அன்னாரின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு மாவை ஆதீனத்தை புனருத்தாரனம் செய்து முன்னிலை ஆலயமாக இட்டுச் செல்வதே எம் முன் உள்ள மிகப்பெரிய சவால் என்பதை இங்கு சுட்டிக்காட்டுவதும் நமது கடமையாகிறது.

# குவைத்தில் சட்டவிரோதமாக தங்கியிருக்கும் 1,800 இலங்கையர் நாடு திரும்ப காலக்கெடு

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவிப்பு

(கொழும்பு)

குவைத்தில் சட்டவிரோதமாகத் தங்கியிருக்கும் ஆயிரத்து 800 இலங்கையர்கள் நாடு திரும்புவதற்கு மார்ச் முதலாம் திகதி முதல் ஜுன் 30ஆம் திகதி வரை பொது மன்னிப்புக் காலம் வழங்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது.

இக்காலப் பகுதியில் நாடு திரும்புவோருக்கு எந்தவிதமான தண்டனையோ அல்லது தண்டப் பணமோ அறவிடப் படமாட்டாது எனவும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் வேலை வாய்ப்புப் பணியகம் மேலும் தெரிவிக்கையில்,

விஸா காலம் முடிபடைந்து விஸா இல்லாமல் கடவுச்சீட்டு இல்லாமல் எந்த விதமான பயண அனுமதிப் பத்திரங்களும் இல்லாமல் ஆயிரத்து 500 இலங்கையர்கள் குவைத்தில் தங்கியிருக்கின்றனர்.

இதற்கு மேலதிகமாக 300பேர் முகாம்களில் தங்கியிருக்கின்றனர். இவர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு சட்ட விரோதமாக தங்கியிருப்போர் மார்ச் முதலாம் திகதி முதல் ஜுன் 30ஆம் திகதி வரையான பொதுமன்னிப்புக் காலப் பகுதியில் நாடு திரும்ப முடியும்.

இவ்வாறு நாடு திரும்ப விரும்புவோர் குவைத்திலுள்ள இலங்கைத் தூதரகத்தைத் தொடர்பு கொண்டால் தற்காலிக பயண அனுமதிப் பத்திரமொன்று வழங்கப்பட்டு நாட்டுக்குத் திரும்பியனுப்பப் படுவார்கள்.

அத்துடன் குவைத்திலுள்ள முகாம்களிலுள்ள 300 இலங்கையர் களை நாட்டுக்கு அழைத்து வருவதற் கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மேலும் தெரிவித்துள்ளது. (ந-5)

## புதிய நிர்வாக சபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்குப் பண்பாட்டுப் பேரவையின் புதிய நிர்வாகத் தெரிவும், பொதுக்கூட்டமும் அண்மையில் கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் புதிய நிர்வாக சபை உறுப்பினர்களாக 21 பேர் தெரிவாகினர். தலைவராக பிரதேச செயலர் ம.பிரதீபன் ,உப தலைவராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன்,செயலாளராக கலாசார உத்தியோகத்தர் செல்வி அ.மிலாசினி ,உப செயலாளர், முன்னாள் கிராம அலுவலர் அ.க.த.கிருஸ்ணராஜா ,பொருளாளராக கணக்காளர் திருமதி வசந்தமாலா மனோகரன் ஆகியோர் தெரிவாகினர். நிர்வாக உறுப்பினர்களாக மேலும் 16 பேர் தெரிவாகினர். (ஸ்ரீ-2)

# குன்றும் குழியுமாகவுள்ள வீதியால் பயணம் மேற்கொள்வதில் சிரமம்

(அல்வாய்)

பருத்தித்துறை தம்பசிட்டி வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர் கொள்ள வேண்டிய அவல நிலை உள்ளது.

இவ்வீதியால் பருத்தித்துறை யாழ். பஸ் சேவை மற்றும் மானிப்பாய் ,நவாலி , தொண் டைமானாறு ஆகிய பஸ்சேவையும் இடம் பெறுகிறது.

பாடசாலை மாணவர்கள் , அரச ஊழியர்கள், வியாபாரிகள் எனப் பெரும்பாலானோர் இவ்வீதியால் மிகுந்த இடர்பாடுகளின் மத்தியில் பயணம் செய்கின்றனர்.

எனவே, உரியதரப்பினர் இதனை திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-3-19)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



புத்தர் அரிய பல உண்மைகளை மக்களுக்குப் போதித்தார். மக்களிடையே எந்த வேறுபாடும் பார்க்காது அனைவருக்கும் வேதசாரத்தை அப்படியே பிழிந்து கொடுத்தார். அவர், தம் உபதேசங்களை உலகிற்கே வழங்கினார். அவருடைய உபதேசங்களில் மிக முக்கியமானது மனிதர் அனைவரும் சமம் என்பதே. மக்கள் யாவரும் சமமானவர்கள் .இதில் யாருக்கும் எந்தச் சலுகையும் காட்டப்படவில்லை. புத்தர் சமத்துவத்தைப்போதித்த பேராசான். ஒவ்வொரு ஆணும் பெண்ணும் ஆன்மீகத்தைப் பெறுவதில் சம உரிமை உடையவர்கள். இதுதான் அவருடைய உபதேசம். வேதியர்களுக்கும் பிறசாதியினருக்கும் இடையே இருந்த வேற்றுமையை அவர் ஒழித்தார். சமுதாயத்தில் மிகத் தாழ்ந்தவர் கூட மிக உயர்ந்த ஆன்மீக வாழ்க்கை வாழ உரிமை பெற்றவர்கள் என்று உரைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆஸி. அணியில் மைக்கெல் ஹசி

உலகக் கிண்ணத் தொடருக்கான அவுஸ்திரேலிய அணியில் மைக்கெல் ஹசி மீண்டும் இணைக்கப்பட்டுள்ளார்.



உலகக் கிண்ண தொடருக்கான அவுஸ்திரேலிய அணியில் காயம் காரணமாக கடைசி நேரத்தில் முன்னணித் துடுப்பாட்ட வீரர் மைக்கெல் ஹசி நீக்கப்பட்டார்.

'சில ஆட்டங்களில் ஓய்வு அளித்துவிட்டு அதன்பின்னர் தனக்கு வாய்ப்பளித்திருக்கலாம். அதற்காக இப்படியா ஒரேயடியாக நீக்குவது?' என்று மைக்கெல் ஹசி புலம்பினார்.

ஹசி விவகாரம் அந்த அணிக்குள் சலசலப்பை ஏற்படுத்தியது. இதற்கிடையில் தான் முழு உடற் தகுதியைப் பெற்றுவிட்டதாக மைக்கெல் ஹசி அறிவித்தார்.

இந்நிலையில் அவுஸ்திரேலிய அணியில் இடம்பெற்றிருந்த வேகப் பந்துவீச்சாளர் பொல்லிங்கர் காயம் காரணமாக தாயகம் திரும்பினார்.

சில நாட்கள் ஆலோசனைக்குப் பின்னர் பொல்லிங்கருக்கு பதிலாக மைக்கெல் ஹசியை அணியில் சேர்ப்பதாக அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

35 வயதான மைக்கெல் ஹசி 151 ஒருநாள் போட்டிகளில் பங்கேற்று 4 ஆயிரத்து 469 ஓட்டங்கள் (சராசரி 51.96) குவித்துள்ளார்.

## 2015-ல் 10 அணிகள்

இந்திய துணைக்கண்டத்தில் தற்போது நடைபெற்று வரும் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் 14 அணிகள் கலந்து கொண்டுள்ளன.

இந்த தொடர் ஒன்றரை மாத காலத்திற்கு மேலாக நடைபெறும் வகையில் போட்டி அட்டவணை அமைந்துள்ளது.

இப்போட்டி நீண்ட நாட்களாக போட்டியை நடத்துவதற்கு பல்வேறு வீரர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் 2015ஆம் ஆண்டு நடைபெறவுள்ள 11 ஆவது உலகக் கிண்ண தொடரில் பங்கேற்கும் அணிகளை 10 ஆகக்குறைக்க ஐ.சி.சி ஆலோசனை நடத்திவருகிறது. இது தொடர்பாக இறுதி முடிபை எடுப்பதற்காக எதிர்வரும் மே மாதம் ஐ.சி.சியின் ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

ஐ.சி.சி. ஒருநாள் போட்டித் தரவரிசையில் முதல் 7 இடத்தைப் பிடிக்கும் அணிகள் தானாகவே உலகக் கிண்ணத் தொடரிற்கு தகுதி பெற்றுவிடும்.

மீதமுள்ள 3 இடத்தை நிரப்புவதற்கு தகுதிச் சுற்றுப்போட்டியை நடத்துவதற்கு ஐ.சி.சி. தீர்மானித்துள்ளது.

## களமிறங்குவாரா ரெய்னா

உலகக் கிண்ணத் தொடரில் இந்திய அணியில் விளையாடும் 11 பேரில் இடம்பெற முடியாமல் தவிக்கிறார் சுரேஷ் ரெய்னா. வரும் போட்டிகளில் வாய்ப்பை எதிர்நோக்கி உள்ளார்.

இந்திய அணியின் இளம் வீரர் சுரேஷ் ரெய்னா (24) இதுவரை 111 ஒருநாள் போட்டிகளில் பங்கேற்றுள்ள இவர், 3 சதம், 16 அரைச் சதம் அடித்துள்ளார். ஐ.பி.எல். சென்னை அணிக்காக விளையாடுகிறார். சமீபகாலமாக தொடர்ந்து மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார்.

கடைசியாக பங்கேற்ற 10 போட்டிகளில் ஒரு அரைச்சதம் மட்டும் அடித்து 233 ஓட்டங்களை தான் எடுத்துள்ளார். தவிர ஷோர்ட் பிட்ச் பந்துகளில் ஆட்டமிழக்கும் வழக்கத்தை, இவர் இன்னும் மாற்றிக் கொள்ளவில்லை. உயரமான இடத்தில் உள்ள பொருளைபிடிக்க, பூனை துள்ளுவதைப் போல ஷோர்ட் பிட்ச் பந்துகளை அடிக்க முயன்று, பரிதாபமாக ஆட்டமிழக்கிறார். இவரது பலவீனத்தை தெரிந்த அனைத்து அணிகளும், சொல்லி வைத்து ஆட்டமிழப்பு செய்கின்றது.

### யூசுப் வளர்ச்சி

இந்த நேரத்தில் விராத் ஹோலி, யூசுப் பதான் எழுச்சி காண ரெய்னாவுக்கு சிக்கல் ஏற்பட்டது. இதில் சகல துறை வீரர் பந்துவீச்சிலும் அணிக்கு தேவையான விக்கெட்டை வீழ்த்தி தந்தார்.


### ஹோலி அசத்தல்

தவிர, விராத் ஹோலியும் கிடைக்கும் அனைத்து வாய்ப்புகளிலும் ஓட்டங்கள் குவித்து அசத்தினார். நியூசிலாந்துக்கு எதிரான பயிற்சி போட்டியில் 26 பந்தில், 50 ஓட்டங்கள் அடித்து ரெய்னா, இழந்த போர்மை மீட்டார். இதனால் உலகக் கிண்ண தொடரில் விளையாடும் லெவன் அணியில் இடம் உறுதி என்ற நிலையில், பங்களாதேஷுக்கும் எதிரான போட்டியில், அனுபவ யுவராஜ் மீது நம்பிக்கை வைத்து, ரெய்னாவை கழற்றி விட்டார் அணித்தலைவர் தோனி.

### முதல் வாய்ப்பு

தொடர்ந்து இங்கிலாந்து, அயர்லாந்து அணிகளுக்கு எதிரான போட்டியிலும் ரெய்னாவுக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டது. இதனால் அவர் உலகக் கிண்ண லெவன் அணியில் எப்போது வாய்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறார். தற்போதைய நிலையில், விராத்ஹோலி, யூசுப்பதான் அணியில் நிலையாகி விட்ட நிலையில், இனி யுவராஜ் சிங் சொதப்பினால் தான், வாய்ப்பு கிடைக்கும்.

## உலகக் கிண்ண தொடரிலிருந்து பீற்றர்சன் விலகல்



இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரர் கெவின் பீற்றர்சன் உலகக் கிண்ண தொடரிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

குடல் இறக்க நோயினால் அவதிப்படும் கெவின் பீற்றர்சன் விரைவில் அதற்கான சத்திரசிகிச்சையை மேற்கொள்ளவுள்ளார். இந்நிலையில் சத்திர சிகிச்சைக்குப் பின்னர் தொடர்ந்து விளையாடுவதற்கு தனது உடல்நிலை ஒத்துழைக்குமா என சந்தேகமாக இருப்பதாகவும் பீற்றர்சன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பீற்றர்சனுக்கு பதிலாக இயோன் மோர்கன் இங்கிலாந்து அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

## மைக் 1...2...3...

## மீண்டும் சரியான பாதைக்கு திரும்பியிருக்கிறோம்

### இங்கிலாந்து அணித்தலைவர் ஸ்ரொரஸ்,




அயர்லாந்து அணிக்கு எதிராக தோல்வியடைந்ததால் மீண்டும் வெற்றிப் பாதைக்கு திரும்ப தென்னாபிரிக்க அணியுடனான ஆட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டோம்.

சென்னை மைதானம் பந்துவீச்சுக்கு சாதகமாகவிருந்தது. தற்போதைய சூழ்நிலையில் நாங்கள் சரியான பாதைக்கு திரும்பியிருக்கிறோம்.

சுவானும் வேகப்பந்து வீச்சாளர்களும் சரியான இலக்கில் பந்து வீசினார்கள், செயற்பட்டனர் என ஸ்ரொரஸ் தெரிவித்தார்.

## பதிலெடுத்து ஆட முடியவில்லை

### தென்னாபிரிக்க அணித்தலைவர் சிமித்,



இங்கிலாந்து அணிக்கு எதிராக எங்களது துடுப்பாட்டம் நன்றாகத்தான் இருந்தது. ஆட்டத்தின் நடுப்பகுதியில் அடுத்தடுத்து 4 விக்கெட்டுக்களை இழந்ததால் தோல்வி ஏற்பட்டுவிட்டது.

சென்னை மைதானத்தில் பதிலெடுத்து ஆடமுடியவில்லை. ஆட்டத்தில் பெரும் பகுதிகளில் நாங்கள் சிறப்பாகச் செயற்பட்டோம்.

இந்திய அணிக்கு எதிராக விளையாடுவதற்குமுன் நாங்கள் சில விடயங்களில் முன்னேற்றம் காணவேண்டியது அவசியம் என தென்னாபிரிக்க அணித்தலைவர் சிமித் தெரிவித்தார்.

## நாங்கள் போராடக் கூடியவர்கள்

### அயர்லாந்து அணித்தலைவர் போர்ட்டர் பீல்ட்,

இந்திய அணிக்கு எதிராக ஆரம்பத்தில் 2 விக்கெட்டுக்களையிழந்த பின்னர் நிலைத்து நின்று ஆடி இத்தனை ஓட்டங்கள் குவித்தது சந்தோஷம்.

கூடுதலாக 40 ஓட்டங்கள் எடுத்திருந்தால் முடிபு வேறு மாதிரியாக அமைந்திருக்கும். நாங்கள் போராடக் கூடியவர்கள்.

இந்தியாவுடனான ஆட்டம் எங்களுக்கு பெருமையளிக்கிறது. இந்தியாவுக்கு நெருக்கடி கொடுத்த முறை மகிழ்ச்சியளிக்கிறது. கடைசிவரை நாங்கள் போராடினோம். இன்னும் 3 ஆட்டங்கள் இருக்கிறது. முடிபுகளை பார்க்கலாம்.

## எங்களை விட அயர்லாந்து சிறப்பாக விளையாடியது

### இந்திய அணித்தலைவர் தோனி,



உண்மையை சொல்ல போனால் எங்களை விட அயர்லாந்து மிக சிறப்பாக விளையாடியது. இதனால் நமது அணியில் ஒவ்வொருவரும் துடுப்பாட்டம் செய்ய வேண்டிய சூழல் ஏற்பட்டது.

இதனால் வீரர்கள் நெருக்கடிக்குள்ளானார்கள். இந்த ஆட்டத்தில் பந்துவீச்சு பலப்பட்டிருந்தது. களத்தடுப்பில் முன்னேற்றம் இருந்தது.

திறமையாக களத்தடுப்பு செய்யும் வீரர்கள் கூடுதல் திறமை காட்டினார். மெதுவாக களத்தடுப்பு செய்பவர்கள் வழக்கம்போல் தான் விளையாடினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா 2011

பெப்ரவரி 19 - ஏப்ரல் 02

ICC Cricket World Cup 2011

# கனடா அணிக்கு முதல் வெற்றி

# காலிறுதி வாய்ப்பையிழந்தது கென்யா

(டில்லி)

கென்யா அணிக்கு எதிரான லீக் போட்டியில் கனடா 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இதன் மூலம் தொடர்ந்து நான்கு தோல்விகளைச்சந்தித்த கென்ய அணி, காலிறுதி வாய்பை இழந்தது.

10ஆவது உலகக்கிண்ணத் தொடர் இந்தியத் துணைக்கண்டத்தில் நடைபெற்று வருகிறது.


இதில் டில்லி பெரோஷா கோட்லா மைதானத்தில் நேற்று நடைபெற்ற 23 ஆவது லீக் போட்டியில் ஏ பிரிவைச் சேர்ந்த கென்யா-கனடா அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கென்ய அணிக்கு ஆரம்பத் துடுப்பாட்ட ஜோடியான ஒயுமா பூச்சியத்துடனும் வோட்டர்ஸ் 02 ஓட்டங்களுடனும் ஒசின் டேயின் வேகத்தில் வெளியேறினர்.

அடுத்து இணைந்த ஒபுயா சகோதரர்கள் நீண்ட நேரம் நிலைக்கவில்லை.

இதில் டேவிட் ஒபுயா 02 ஓட்டங்களுடன் ஓசின்டேயின் பந்துவீச்சில் அரங்கு திரும்பினார்.

அடுத்து நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த கொலின் ஒபுயா-ரிகோலோ ஜோடி நிதானமாக ஆடினர்.



எனினும் கொலின் ஒபுயா 35 பந்துகளில் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 31 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த மிர்சா பொறுப்பான ஆட்டத்தை வழங்க மறுமுனையில் ரிகோலோ 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க கென்யா அணி 15 ஓவர்களில் 57 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட்டுக்களையிழந்தது.

இந் நிலையில் 6ஆவது விக்கெட்டுக்காக மிர்சாவுடன் இணைந்த அணித்தலைவர் கமண்டே நிதானமாக ஆட கென்யா அணி 27.5 ஓவர்களில் 100 ஓட்டங்களை எட்டியது.

இதில் அணித்தலைவர் கமண்டே 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய ஒடோயோ சிறப்பாக ஆடி நம்பிக்கையளித்தார்.

இதில் மிர்சா 71 பந்துகளில் ஒரு நாள் அரங்கில் தனது 4ஆவது அரைச்சதத்தைப் பெற்றார்.

எனினும் மிர்சா 73 பந்துகளில் (3 பவுண்டரிகள் உட்பட) 51 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இறுதியில் ஒடோயோ 60 பந்துகளின் அரைச்சதம் அடிக்க கென்யா அணி 50 ஓவர்கள் நிறைவில் 198 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் ஒடோயோ 62 பந்துகளில் (5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 51 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் ஒசின்டோ 4 விக்கெட்டுக்களையும் பைட்வான், சீமா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் பலாஜி ராவ், டேவிசன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 199 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற சுலப இலக்குடன் துடுப்பெடுத்தாடிய கனடா அணிக்கு குணசேகரா-சீமா ஜோடி ஆரம்பம் வழங்கினர்.

இதில் சீமா 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த சுர்காரி 10 ஓட்டகளுடன் வெளியேறினார்.

தொடர்ந்து களமிறங்கிய அணித்தலைவர் பாகாஜ் நிதானமாக ஆடி நம்பிக்கையளித்தார்.

எனினும் மறுமுனையில் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் குணசேகரா 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க கனடா அணி 11 ஓவர்களில் 48 ஓட்டங்களை எடுத்து 3 விக்கெட்டுக்களையிழந்தது.

இந் நிலையில் நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த பாகாஜ்-ஹன்ஸ்ரா ஜோடி ஆட்டத்தை கையில் எடுத்தது. கென்ய பந்துவீச்சை எளிதாகச் சமாளித்த இந்த ஜோடி விவேகமான ஆட்டத்தை வழங்கின.

இதில் ஹன்ஸ்ரா 74 பந்துகளில் ஒரு நாள் அரங்கில் தனது முதலாவது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார்.

மறுமுனையில் அணித்தலைவர் பாகாஜ் 83 பந்துகளில் ஒருநாள் அரங்கில் தனது 15ஆவது அரைச் சதத்தைப் பூர்த்தி செய்ய கனடா அணி வெற்றியின் விளிம்பிற்கே வந்தது.

இந்த ஜோடி 4ஆவது விக்கெட்டுக்காக 31.5 ஓவர்களில் 132 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்த போது ஹான்ஸ்ரா 99 பந்துகளில் (7 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 70 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த கோர்டன் 03 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார்.

இறுதியில் கனடா அணி 45.3 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 199 ஓட்டங்களைக் குவித்து 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் அணித்தலைவர் பாகாஜ் 97 பந்துகளில் (7 பவுண்டரிகள் உட்பட) 64 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தார்.

பந்துவீச்சில் ஓடியாம்போ 2 விக்கெட்டுக்களையும் ஒட்டியானோ, நிகோஷி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப் போட்டியில் கனடா அணியின் வெற்றிக்கு அடித்தளம் அமைத்த ஒசின்டே ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

**இரண்டாவது வெற்றி**

கென்யா அணியை வீழ்த்திய கனடா அணி உலகக்கிண்ண அரங்கில் தனது 2 ஆவது வெற்றியைப் பதிவு செய்தது.

முன்னதாக கடந்த 2003 ஆம் ஆண்டு பங்களாதேஷ் அணியை வீழ்த்தியது.

நான்காவது முறையாக (1979, 2003, 2007, 2011) உலகக் கிண்ண தொடரில் விளையாடிவரும் கனடா அணி இதுவரை 16 போட்டிகளில் பங்கேற்று 2 வெற்றி, 14 தோல்வியைப் பெற்றுள்ளது.

## புள்ளிப் பட்டியல்

ICC Cricket World Cup 2011

### பிரிவு A

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை | முடிபில்லை | புள்ளிகள் | நிகர ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| பாகிஸ்தான் | 3 | 3 | 0 | 0 | 0 | 6 | +1.747 |
| இலங்கை | 4 | 2 | 1 | 0 | 1 | 5 | +2.663 |
| அவுஸ்திரேலியா | 3 | 2 | 0 | 0 | 1 | 5 | +1.813 |
| நியூசிலாந்து | 3 | 2 | 1 | 0 | 0 | 4 | +1.584 |
| சிம்பாவே | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | +0.079 |
| கனடா | 4 | 1 | 3 | 0 | 0 | 2 | -2.083 |
| கென்யா | 4 | 0 | 4 | 0 | 0 | 0 | -3.403 |

### பிரிவு B

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை | முடிபில்லை | புள்ளிகள் | நிகர ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| இந்தியா | 3 | 2 | 0 | 1 | 0 | 5 | +0.768 |
| இங்கிலாந்து | 4 | 2 | 1 | 1 | 0 | 5 | +0.054 |
| மேற்கிந்தியத் தீவுகள் | 3 | 2 | 1 | 0 | 0 | 4 | +2.667 |
| தென்னாபிரிக்கா | 3 | 2 | 1 | 0 | 0 | 4 | +1.754 |
| அயர்லாந்து | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | -0.296 |
| பங்களாதேஷ் | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | -1.764 |
| நெதர்லாந்து | 3 | 0 | 3 | 0 | 0 | 0 | -3.058 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணதண்டனை வழங்கினாலும் நாட்டைக் காட்டிக் கொடேன்

## ஜனாதிபதி மகிந்த சத்தியம்



(கொழும்பு)

என்னை மின்சாரக் கதிரையில் உட்காரவைத்து மரணதண்டனை வழங்கினாலும், கடைசி மூச்சுவரையிலும் நான் நாட்டைக் காட்டிக் கொடுக்கப்போவதில்லை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

மனித உரிமைகள் தொடர்பான ஜெனீவா அமர்வுக்குதான் நடந்துபோக, மனித உரிமை மீறல்கள் தொடர்பாகக் குற்றஞ்சாட்டும் விடுதலைப்புலிகளின் பிரமுகர்கள் பென்ஸ் வண்டிகளிலேயே அங்கு வந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இரத்தினபுரியில் நடைபெற்ற ஆளும் கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமைகள் மீறல் தொடர்பில் என்னை சர்வதேச நீதிமன்றத்தின் முன் நிறுத்தி மரண தண்டனை வாங்கிக் கொடுக்க சிலர் முயற்சிக்கின்றனர். நான் அதற்கெல்லாம் பயந்து பின்வாங்கப் போவதில்லை.

அரசியலுக்கு வந்த ஆரம்பம் முதல் இலங்கை மக்களின் மனித உரிமைகள் மற்றும் கருத்துச் சுதந்திரம் தொடர்பாக அக்கறையுடன் செயல்பட்டுள்ளதாக குறிப்பிட்ட அவர், மனித உரிமைகள் பற்றி தனக்கு யாரும் கற்றுக்கொடுக்க வேண்டியதில்லை என்றும் கூறினார். (ந-5)

## 21 ஐ.தே.க. வேட்...

கவும் கூறினார்.

ஆரம்பத்தில் அவர்களின் பிரசாரம் வெள்ளத்தையும் வெள்ளத்தால் பாதிக்கப் பட்டோரையும் பற்றியதாக இருந்தது. பின்னர்; தேங்காய் விலை குறித்து பேசினார்கள். அதன் பின் வெங்காயம் குறித்து பேசினார்கள். இனி பிரசாரத்திற்கு வேறு எதுவும் கிடைக்காததால் புடலங்காய் குறித்து பேசுவார்கள் எனவும் அமைச்சர் டலஸ் அழகப்பெரும கூறினார். (ந-5)

## அரசு- கூட்...

28ஆம் திகதி இப் பேச்சுவார்த்தை நடைபெறவிருந்த போதிலும் கடைசி நேரத்தில் அது ரத்துச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## இறுதிப் போரில் 80ஆயி...

உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், ஊடக நிறுவனங்களின் ஊழியர்கள் அமைப்பு ஒன்றிணைந்த ஊடகவியலாளர் ஆகிய அமைப்புகளின் பிரதிநிதிகள் அண்மையில் யாழ்ப்பாணத்திற்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டு இந்த ஆய்வை முன்னெடுத்துள்ளனர்.


இதன்போது அவர்கள் அப்பிரதேசத்தில் புத்திஜீவிகள், பொதுமக்கள் உள்ளிட்ட சுயாதீன தரப்புத் தகவல்களின் மூலம் பெற்றுக் கொண்ட தகவல்களை ஒரு அறிக்கையாக தயாரித்துள்ளார்கள். அந்த அறிக்கையிலேயே மேற்கண்ட விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. அத்துடன் அவர்கள் திரட்டிய தகவல்களின் பிரகாரம் அரசாங்கம் தற்போதைக்கு 4 ஆயிரம் அளவிலான விடுதலைப்புலி உறுப்பினர்களே புனர்வாழ்வு அளிப்பதற்காக தம்மால் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகக் கூறினாலும், உண்மையில் அதன் எண்ணிக்கை 15ஆயிரம் அளவில் இருக்கும் என்று அங்குள்ள பொதுமக்கள் ஆதாரபூர்வமான விபரங்களுடன் வலியுறுத்தியுள்ளனர்.

அவர்களில் பெரும்பாலானவர்கள் வெளியுலகத்துடன் தொடர்பற்ற முகாம்களில் இரகசியமாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இறுதிக்கட்ட யுத்தம் ஆரம்பமாவதற்கு சற்று முன்பான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் பிரகாரம் வன்னியில் 3 இலட்சத்து 20 ஆயிரம் பொதுமக்கள் வாழ்ந்தார்கள். அந்த எண்ணிக்கையில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கை உள்ளடக்கப்படவில்லை.

அதன்பின் யுத்தவலயத்திலிருந்து வெளியேறிவந்த பொதுமக்கள் மற்றும் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் என 2 இலட்சத்து 70 ஆயிரம் பேர் மட்டுமே அரசாங்கத்தினால் பதிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒரு இலட்சம் பேர் மெனிக்பாம் முகாமிற்கும், 80 ஆயிரம் பேர் முல்லைத்தீவுக்கும், 30 ஆயிரம் பேர் வேறு இடங்களிலும் தங்கவைக்கப்பட்டார்கள். இன்னும் 30 ஆயிரம் மக்கள் நாட்டைவிட்டுத் தப்பியோடியும், ஒருசிலர் இலங்கையின் வேறு பாகங்களுக்கு இடம்பெயர்ந்தும் வசித்து வருகின்றனர்.

அந்தவகையில் சுமார் 80 ஆயிரம் அளவிலான பொதுமக்கள் மற்றும் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுக்கு என்ன நடந்தது என்பது யாருக்கும் தெரியவில்லை. பெரும்பாலும் அவர்கள் போரின்போது கொன்றொழிக்கப்பட்டிருக்கலாம் என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ந-5)

## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை [அலையரசு]

(தலைவர், ப.நோ.கூ.சங்கம், அனலைதீவு)

நெடுந்தீவு 2ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் அனலைதீவை வசிப்பிடமாகவும், தற்போது இல. 11, வெங்கடேசன் வீதியில் வசித்தவருமாகிய சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை நேற்று முன்தினம் (06.03.2011) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி சின்னப்பிள்ளையின் அன்பு மகனும் சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும், அமரர் ஸ்ரீமாறன், ஜெயசங்கர் (பிரான்ஸ்), மோகனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இல.11, வெங்கடேசன் வீதி,
பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (398)

தகவல்:
மருமகன் துசிந்தன்

# விமானப்படைக்கு தொழில்நுட்ப வசதி சீனாவுடன் இலங்கை பேச்சுவார்த்தை

(கொழும்பு)

சீன விமானப்படையின் கட்டளைப் பணியகத்தின் தலைமைத் தளபதி மேஜர் ஜெனரல் டிங் லாய்ஹங் தலைமையிலான உயர்மட்டக் குழுவினர் கடந்த 5ஆம் திகதி இலங்கை விமானப் படைத்தளபதி ஏயார் மார்ஸல் ஹர்சா அபேவிக்கிரமவை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

சீன விமானப் படையின் மூத்த அதிகாரிகளான கேணல் ஜியாங் லிசேங், கேணல் சூ கான் ஆகியோரும் இப் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டனர்.

இலங்கைக்கான சீன தூதரகத்தின் இராஜதந்திர விவகாரங்களுக்குப் பொறுப்பான அதிகாரி ஹன் தாவோ இச் சந்திப்புக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

இலங்கை விமானப்படைக்கு சீன விமானப்படையின் தொழில்நுட்ப வசதிகளை பெற்றுக் கொள்வது குறித்து இச்சந்திப்பில் ஆராயப்பட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை இரத்மலானையில் நடைபெறும் இலங்கை விமானப்படையின் கண்காட்சியிலும் அவர் கலந்து கொண்டுள்ளார்.

இலங்கை விமானப்படையின் கண்காட்சிக் கூடத்தை சீனாவின் செங்டு விமானத் தயாரிப்பு நிறுவனம் அமைந்துள்ளது. 1991 ஆம் ஆண்டு இந்நிறுவனமே இலங்கை விமானப் படைக்கு எவ்-7 போர் விமானத்தை விற்பனை செய்திருந்தது.

அத்துடன் இந்நிறுவனத்தின் புதிய தயாரிப்பான எவ்-17 போர் விமானங்களை இலங்கை விமானப் படைக்கு விற்பனை செய்வதற்கான முயற்சிகளிலும் இக் குழுவினர் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இரத்மலானையில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சிக் கூடத்திற்கு சென்றிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இந் நிறுவனத்தின் சார்பில் எவ்-17 போர் விமானத்தின் திறன்கள் குறித்து சீன அதிகாரிகள் விளக்கம் அளித்துள்ளனர்.

இலங்கை விமானப்படை சீனாவிடம் கொள்வனவு செய்த எவ்-7 போர் விமானங்களையும், கே-8 விமானங்களையும் பயன்படுத்தி வருவதுடன் சீனாவிடமிருந்து மேலும் ஆறு போக்குவரத்து விமானங்களையும் இலங்கை விமானப்படை கொள்வனவு செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## மீசாலையில் கடத்தப்பட்ட...

மக்களுடன் இணைந்து தேடுதலில் ஈடுபட்டனர். இந்நிலையில் சாவகச்சேரி பெரிய குளம் என்ற பகுதியில் பழுதடைந்த வீட்டிற்குப் பின்புறமாக பற்றைக்குள் குப்பைகளால் மூடப்பட்டு கால்கள் வெளியில் தெரிந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு நேரில் சென்ற சாவகச்சேரி நீதவான் எம். கணேசராசா மரண விசாரணை அதிகாரியின் உதவியுடன் விசாரணைகளை மேற்கொண்டார்.

இதன்போது 38 வயதான சாந்தினி என்ற குறித்த பெண் பயங்கரமான தாக்குதலுக்கு உள்ளான பின்பே கொலை செய்யப்பட்டமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த பெண்ணின் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு சாவகச்சேரிப் பொலிஸாருக்கு நீதவான் உத்தரவிட்டார்.

அத்துடன் கைதுசெய்யப்பட்ட கணவரையும் வான் சாரதியையும் எதிர்வரும் 18ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் எம்.கணேசராசா உத்தரவிட்டார்.

இதேவேளை கைதுசெய்யப்பட்ட கணவனிடமிருந்து மனைவி அணிந்திருந்த தங்க நகைகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன் மனைவியை கொலை செய்யும் போது பதிவுசெய்ததாகக் கூறப்படும் ஒலிப் பதிவு நாடாவையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மேலும் பிரஸ்தாபக் கணவரின் உறவினர் எனக் கூறப்படும் பெண் ஒருவரிடமும் சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் விரைவான, விரிவான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி பெரேறா சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜி.வி.ஜே.எஸ். சந்திரசேகர தலைமையிலான பொலிஸாருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதேவேளை இக் கொலைச் சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட வவுனியாவைச் சேர்ந்த ரவுடிகள் இருவர் தப்பிச் சென்றுள்ளனர். (ந-5)

## சிறிதரன் எம்.பி மீது...

டிருந்தபோது வாகனத்தின் பின்பக்கமாக கிரனைட் தாக்குதல் நடத்தப்பட்டது. தாக்குதல் நடத்தியவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

சம்பவம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கு தகவல் கொடுத்தேன். அவர் பொலிஸ்மா அதிபரின் கவனத்திற்கு கொண்டுவந்ததை அடுத்து நொச்சியாகம பொலிஸார் எனக்கு மேலதிக பாதுகாப்பை வழங்கினர்.

சம்பவம் தொடர்பில் நொச்சியாகம பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இத் தாக்குதல் சம்பவத்தில் சிறிதரன் எம்.பியின் வாகனம் பலத்த சேதமடைந்த போதிலும் வாகனத்தில் சென்றவர்களுக்கு பாதிப்பு ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ந-5)

Special Fare for LONDON Student

COLOMBO/ LONDON
Rs.39,000
With Student ID

Further Contact:
METRO TRAVELS & TOURS (PVT) LTD
62/33, Stanley Link Rd, Jaffna.
Tel:- 0215673555/666. (3978)

## பாகிஸ்தான்...

குழுவில். பாகிஸ்தான் இராணுவ சிரேஷ்ட அதிகாரிகள் பலர் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## தாதியர் பயிற்சி...

ஏதாவதொரு பிரிவில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அத்துடன் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளிற்கு மேற்படாது தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உட்பட நான்கு திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருப்பது அவசியம்.

மேலும் விண்ணப்பதாரி திருமணமாகாதவராக இருப்பதுடன் 2011.04.11ஆம் திகதியில் 18 வயதிற்கு குறையாமலும் 28 வயதிற்கு மேற்படாமலும் இருக்கவேண்டுமென சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்திய கலாநிதி ரவீந்திர குபேரு அறிவித்துள்ளார்.

இப் பயிற்சி நெறிக்கான விண்ணப்பத்தை 2011.04.11 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் (நிர்வாகம்) 01, சுகாதார அமைச்சு, சுவசிரிபாய, இல.385 வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு-10 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்.

இவ்விண்ணப்பம் கோரல் தொடர்பான மேலதிக தகவல்களை எதிர்வரும் 11ஆம் திகதி வெளியாகவுள்ள வர்த்தமானி அறிவித்தலில் பார்வையிடலாம்.

இவ் வர்த்தமானியை வலம்புரிக் காரியாலயத்திலும் பார்வையிட முடியும். (ந)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, ... அவர்களது அச்சகத்தில் 08.03.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org